ஜனவரி 2021

winmeen.com
Learning Leads to Ruling

# நடப்பு நிகழ்வுகள்











# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

1. கடந்த 2008'இல் அறிவிக்கப்பட்ட காவிரி–வைகை–குண்டாறு இணைப்புத் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படவுள்ளது. அதன்படி கரூர் மாவட்டம் குளித்தலை அருகே மாயனூரில் காவிரி ஆற்றில் கதவணையும், அங்கிருந்து 255.60 கிமீ'க்கு கால்வாயும் அமைக்கப்படும். இந்தத் திட்டத்தின்மூலம் கரூர், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய ஏழு மாவட்டங்கள் பயன்பெறும்.

2. தமிழ்நாட்டில் ஆனைமலை, களக்காடு முண்டந்துறை, முதுமலை, சத்யமங்கலம் ஆகிய நான்கு புலிகள் காப்பகங்கள் உள்ளன. கடந்த 2018ஆம் ஆண்டு அனைத்து மாநிலங்களில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில், தமிழ்நாட்டில் 264 புலிகள் இருப்பது தெரியவந்தது.

3. தமிழ்நாட்டில் ஆண்களைவிட பெண்கள் அதிகளவில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு புற்றுநோய் பதிவுத் திட்டம் (Tamil Nadu Cancer Registry Project) வெளியிட்ட ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வறிக்கையை தமிழ்நாட்டின் சுகாதாரத்துறை மற்றும் அடையாறு புற்றுநோய் நிறுவனம் இணைந்து வெளியிட்டது. புற்றுநோய்களின் சராசரி நிகழ்வு விகிதம் அதிகபட்சமாக சென்னையில் 140.8 ஆக உள்ளது. குறைந்தபட்சமாக கிருஷ்ணகிரியில் 48.5 ஆக உள்ளது. அதிலும் சென்னையில் மட்டும் 1 இலட்சம் பெண்களில் 46.4 பேர் மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது இந்தியாவிலேயே அதிகமாகும்.

4. சென்னை உயர்நீதிமன்றத்தின் ஐம்பதாவது தலைமை நீதியரசராக ஜனவரி.4 அன்று சஞ்சீவ் பானர்ஜி பதவியேற்றார். இவருக்குமுன் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதியரச –ராக பதவி வகித்த AP சாஹி, டிசம்பர்.31 அன்று ஓய்வு பெற்றார்.

5. தமிழ்நாட்டின் 38ஆவது மாவட்டமாக மயிலாடுதுறை மாவட்டத்தை டிச.28 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி க. பழனிசாமி தொடங்கிவைத்தார். நாகப்பட்டிணம் மாவட்டத் –தைப்பிரித்து மயிலாடுதுறை மாவட்டம் உருவாக்கப்பட்டது.

6. எழுத்தாளர் சு வெங்கடேசனின் 'வீரயுக நாயகன் வேள்பாரி' நாவல் மலேசிய விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது. மலேசியாவின் தேசிய நில நிதி கூட்டுறவு சங்கத்தின் டான்ஸ்ரீ K R சோமா மொழி இலக்கிய அறவாரியத்தின் அனைத்துலக சிறந்த படைப்புக்கான நூலாக இந்நாவல் தேர்வாகியுள்ளது.

7. விழுப்புரம் அருகே வேடம்பட்டில் சங்ககால உறைகிணறு கண்டறியப்பட்டது.

8. தமிழ் மொழி, கலாசாரத்தை மேம்படுத்துவதற்காக தமிழ் அகாதெமியை தில்லி அரசு அமைத்து அறிவித்துள்ளது. இதன் தலைவராக தில்லி துணை முதல்வர் மணீஷ் சிசோடியாவை நியமித்து தில்லி அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

9. தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத் தலைவராக சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி S பாஸ்கரன் பொறுப்பேற்றுக்கொண்டார். இவர் மூன்று ஆண்டுகள் வரை இப்பதவியில் நீடிப்பார்.

10. இராணி 'வீரமங்கை' வேலு நாச்சியாரின் 291ஆவது பிறந்த நாள் ஜன.3 அன்று கொண்டாடப்பட்டது.

11. மதுரையின் அரிட்டாபட்டி, திருநெல்வேலியின் வாகைகுளம் & கோயம்புத்தூரில் அமைந்துள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலை ஆகியவற்றை 'பல்லுயிர் பாரம்பரிய தளம் – Biodiversity Heritage Site' என தமிழ்நாடு அரசு அறிவிக்கவுள்ளது.

12. தில்லி தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவரும் பேராசியருமான S ராமாமிர்தம் (90), அண்மையில் காலமானார்.

13. திருவண்ணாமலை மாவட்ட மக்களுக்காக 'நம்ம திருவண்ணாமலை' என்ற பிரத்யேக திறன்பேசி செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது. அரசின் பல்வேறு நலத்திட்டங்கள், மாவட்ட நிர்வாகத்தின் முன்முயற்சிகள் குறித்து பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையிலும், பொதுமக்களின் கருத்துகளைக்கேட்பதற்கும், பொது ஈடுபாட்டில் பொதுமக்களை அழைக்கும் நோக்கத்துக்காகவும் இச்செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது.

14. தைப்பூசத் திருநாளுக்கு நடப்பாண்டு (2021) ஜனவரி.28 முதல் ஒவ்வோர் ஆண்டும் பொதுவிடுமுறை விடப்படுவதாக முதல்வர் க. பழனிசாமி அறிவித்துள்ளார். தமிழ்க்கடவுளாகிய முருகப் பெருமானைச் சிறப்பித்து, தமிழ்நாட்டில் கொண்டாடப்படும் மிக முக்கிய திருவிழாக்களில், தைப்பூசமும் ஒன்றாகும்.

15. 2015ஆம் ஆண்டு 'இலக்கியச் சுவடுகள்' என்ற நூலுக்காக சாகித்திய அகாதெமி விருது பெற்ற எழுத்தாளர் ஆ. மாதவன் காலமானார்.

16. உலக பெண்கள் அமைப்பு சார்பில், தெற்கு இரயில்வே கூடைப் பந்து வீராங்கனை அனிதா பால்துரைக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

17. **திருவள்ளுவர் திருநாள் விருதுகள்:**
    i. **திருவள்ளுவர் விருது** – முனைவர் வைகைச் செல்வன்.
    ii. **தந்தை பெரியார் விருது** – அ. தமிழ்மகன் உசேன்
    iii. **அண்ணல் அம்பேத்கர் விருது** – வரகூர் அ. அருணாச்சலம்.

iv. **பேரறிஞர் அண்ணா விருது** – அமரர் கடம்பூர் எம் ஆர் ஜனார்த்தனன்.

v. **பெருந்தலைவர் காமராசர் விருது** – முனைவர் ச. தேவராஜ்.

vi. **மகாகவி பாரதியார் விருது** – கவிஞர் பூவை செங்குட்டுவன்.

vii. **பாவேந்தர் பாரதிதாசன் விருது** – அறிவுமதி (எ) மதியழகன்.

viii. **தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது** – வி என் சாமி.

ix. **முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது** – முனைவர் வீ. சேதுராமலிங்கம்.

18. **சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு விருதுகள்:**

i. **தமிழ்த்தாய் விருது** – VGP உலகத் தமிழ்ச் சங்கம்.

ii. **கபிலர் விருது** – செ. ஏழுமலை.

iii. **உ வே சா விருது** – கி. இராஜநாராயணன்.

iv. **கம்பர் விருது** – மருத்துவர் எச்வி. ஹண்டே. (கம்பராமாயணத்தை ஆங்கிலத்தில் உரை நடையில் மொழிபெயர்த்துள்ளார்.)

v. **சொல்லின் செல்வர் விருது** – நாகை முகுந்தன்

vi. **உமறுப்புலவர் விருது** – ம. அ. சையத் அசன் (எ) பாரிதாசன்.

vii. **ஜி யு போப் விருது** – முனைவர் திருமதி உல்ரீகே நிகோலஸ் (ஜெர்மன் நாட்டவர்)

viii. **இளங்கோவடிகள் விருது** – மா. வைத்தியலிங்கன்.

ix. **அம்மா இலக்கிய விருது** – முனைவர் தி. மகாலட்சுமி.

x. **சிந்தனைச்சிற்பி சிங்காரவேலர் விருது** – ஆ. அழகேசன்.

xi. **மறைமலையடிகளார் விருது** – மறை. தி. தாயுமானவன்.

xii. **அயோத்திதாசப்பண்டிதர் விருது** – முனைவர் கோ.ப. செல்லம்மாள்.

xiii. **அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது** – முனைவர் ஊரன் அடிகள்.

xiv. **காரைக்கால் அம்மையார் விருது** – முனைவர் மோ. ஞானப்பூங்கோதை.

xv. **சி.பா. ஆதித்தனார் வார இதழ் விருது** – கல்கி வார இதழ்.

xvi. **சி.பா. ஆதித்தனார் மாத இதழ் விருது** – செந்தமிழ் மாத இதழ்.

xvii. **தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் நாளிதழ் விருது** – தினமணி நாளிதழ்.

xviii. **தேவநேயப் பாவணர் விருது** – முனைவர் கு. சிவமணி.

xix. **வீரமாமுனிவர் விருது** – ஹாங்காங்கைச் சேர்ந்த முனைவர் கிரிகோரி ஜேம்ஸ்.

xx. **சிறந்த மொழிப்பெயர்ப்பாளர் விருது** – சோ. சேசாச்சலம், முனைவர் இராம. குருநாதன், ப. குணசேகர், முனைவர் பத்மாவதி விவேகானந்தன், சு. ஜோதிர்லதா கிரிஜா, ஜெ. இராம்கி (எ) இராமகிருட்டினன், சுவாமி விமூர்த்தானந்தர், மீரா ரவிசங்கர், திலகவதி, கிருட்டின பிரசாத் ஆகிய பத்து பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

xxi. **2019ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கணினித் தமிழ் விருது** – சே. இராஜாராமன்.

19. **மதுரை உலகத் தமிழ்ச்சங்க விருதுகள்:**

i. **2020ஆம் ஆண்டிற்கான இலக்கிய விருது** – முனைவர் அலெக்சிசு தேவராசு சேன்மார்க் (பிரான்சு நாட்டவர்)

ii. **இலக்கண விருது** – பேராசிரியர் அருணாசலம் சண்முகதாசு (இலங்கையைச் சார்ந்தவர்)

iii. **மொழியியல் விருது** – முனைவர் சுப. திண்ணப்பன் (சிங்கப்பூரைச் சார்ந்தவர்).

20. 2020ஆம் ஆண்டிற்கான தமிழ்ச்செம்மல் விருதுகள், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒருவர் என்ற வகையில் 38 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

---

21. நடப்பு 2020–2021ம் நிதியாண்டில் தமிழ்நாட்டில் ஏழு இடங்களில் அகழாய்வு மேற்கொள்ள மத்திய தொல்லியல் ஆலோசனை வாரிய நிலைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி சிவகங்கை மாவட்டம் கீழடி; தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் அவற்றை சுற்றிய பகுதிகள், ஈரோடு மாவட்டம் கொடுமணல்; கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறை; அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரம் மற்றும் மாளிகைமேடு ஆகிய இடங்களில் அகழாய்வு செய்ய ஒப்புதல் கிடைத்துள்ளது. கிருஷ்ணகிரி, வேலூர், தர்மபுரி, திருவண்ணாமலை, சேலம் ஆகிய மாவட்டங்களில் புதிய கற்கால இடங்களைக் கண்டறியும் கள ஆய்வுக்கும் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தாமிரபரணி ஆற்றங்கரையின் நாகரிகத்தை அறியும் வகையில் கள ஆய்வு செய்யவும் அனுமதி கிடைத்துள்ளது.

---

22. தமிழ்நாட்டில் 3,186 காவலர்களுக்கு பொங்கல் பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளது.

---

23. தமிழ்நாட்டின் இறுதி வாக்காளர் பட்டியலில், ஒட்டுமொத்தமாக 6 கோடியே 26 லட்சத்து 74 ஆயிரத்து

446 (6,26,74,446) வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளனர். இவற்றுள் பெண் வாக்காளர்களே அதிகம். மூன்றாம் பாலினத்தவர் 7,246 பேர் இடம்பெற்றுள்ளனர். தமிழ்நாட்டிலேயே சோழிங்கநல்லூர் சட்டப்பேரவைத் தொகுதி அதிக வாக்காளர்கள் கொண்ட தொகுதியாகவும், துறைமுகம் தொகுதி குறைந்தபட்ச வாக்காளர்களைக் கொண்டதாகவும் உள்ளது.

---

24. சாதிவாரி புள்ளிவிவர கணக்கெடுப்பை ஆய்வுசெய்யும் நோக்கில், நீதிபதி குலசேகரன் தலைமையிலான ஆணையம் ஒன்றை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இக்குழு அதனறிக்கையை 6 மாதங்களுக்குள் அளிக்கும். தமிழ்நாட்டில் பழங்குடியினர் உள்ளிட்ட சாதிவாரியான புள்ளிவிவரங்கள் கணக்கெடுப்புப் பணி தொடர்பான நடவடிக்கைகளை ஆணையம் மேற்கொள்ளும். ஒவ்வொரு சாதி மற்றும் பழங்குடியின இனத்தில் உள்ள தரவுகளை இவ்வாணையம் சேகரிக்கும்.

---

25. பல்வேறு துறைகளை சார்ந்த தமிழ்நாட்டின் 11 பேருக்கு பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவர்களின் விவரம் வருமாறு:
    i. **மறைந்த திரு எஸ். பி. பாலசுப்ரமணியம்** – கலை – பத்ம விபூஷண்
    ii. **திருமிகு பி. அனிதா** – விளையாட்டு – பத்ம ஸ்ரீ
    iii. **திரு சுப்பு ஆறுமுகம்** – கலை – பத்ம ஸ்ரீ
    iv. **திரு சாலமன் பாப்பையா** – இலக்கியம் மற்றும் கல்வி– பத்திரிகை துறை – பத்ம ஸ்ரீ
    v. **திருமிகு பாப்பம்மாள்** – விவசாயம் – பத்ம ஸ்ரீ
    vi. **திருமிகு பம்பாய் ஜெய ஸ்ரீ ராம்நாத்** – பத்ம ஸ்ரீ
    vii. **மறைந்த திரு கே சி சிவசங்கர்** – கலை – பத்ம ஸ்ரீ
    viii. **திரு மராச்சி சுப்புராமன்** – சமூக பணி – பத்ம ஸ்ரீ
    ix. **மறைந்த திரு பி சுப்பிரமணியன்** – வர்த்தகம் மற்றும் தொழில் – பத்ம ஸ்ரீ
    x. **மறைந்த டாக்டர். திருவேங்கடம் வீரராகவன்** – மருத்துவம் – பத்ம ஸ்ரீ
    xi. **திரு ஸ்ரீதர் வேம்பு** – வர்த்தகம் மற்றும் தொழில் – பத்ம ஸ்ரீ

---

26. இந்தாண்டு குடியரசு நாளை முன்னிட்டு, தமிழ்நாட்டைச் சேர்ந்த சிறைத்துறையினர் 2 பேர் உட்பட, 51 பேருக்கு, சிறப்பாக பணியாற்றியது, போற்றத்தக்க வகையில் பணியாற்றியதற்கான திருத்த சேவை விருதுகள் வழங்கப்பட்டுள்ளது. தமிழக சிறைத்துறையைச் சேர்ந்த துணை ஜெயிலர் திரு M சக்திவேல், கிரேட் 1 வார்டர் திரு R ஜோசப் ஆண்டனி ஆகியோர் போற்றத்தக்க வகையில் பணியாற்றியதற்காக திருத்த சேவை (Correctional Service) விருதுகளை பெற்றுள்ளனர்.

---

27. காஞ்சிபுரம் மாவட்டம் படப்பையில், நீர்வாழ் உயிரின தனிமைப்படுத்துதல் மற்றும் நோய் கண்டறியும் ஆய்வகத்திற்கு மத்திய மீன் வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் கிரிராஜ் சிங் அடிக்கல் நாட்டினார்.

---

28. தெற்கு இரயில்வேயின் திருச்சிராப்பள்ளியில் உள்ள பொன்மலை மத்திய பணிமனைக்கு, தேசிய மின்சார சிக்கன விருதுகள்–2020'இல் 'சிறப்பாக செயல்பட்டதற்கான' சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

---

29. மத்திய அரசின் உயரிய விருதுகளுள் ஒன்றான பத்ம ஸ்ரீ விருதுக்கு அண்மையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சார்ந்த திருமதி பாப்பம்மாளைப் பாராட்டியுள்ள வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் (APEDA) தலைவர் Dr M அங்கமுத்து, "அங்கக வழி (இயற்கை வழி) விவசாய உற்பத்தியாளர்களின் தூதர்" என்னும் விருதை ஏற்குமாறும் அவரை கேட்டுக்கொண்டுள்ளார்.

---

30. உலக திருக்குறள் மூன்றாவது மாநாடு பிப்.26'இல் தஞ்சாவூரில் நடைபெறவுள்ளது. தமிழ்நாடு அரசின் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மெல்பர்ன் தமிழ்ச் சங்கம், தஞ்சை தமிழ்த்தாய் அறக்கட்டளை ஆகியவை இணைந்து இம்மாநாட்டை நடத்தவுள்ளன.

---

31. மாமல்லபுரத்தில் சுற்றுலாத்துறை சார்பில் கலாசார கலைவிழா நடத்தப்பட்டது.

---

32. மத்திய அரசின்மூலம் வரையறுக்கப்பட்ட அளவுகளின் அடிப்படையில், மதிப்பெண்கள் வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் சிறந்த காவல் நிலையங்கள் தேர்வு செய்யப்பட்டன. அதில், சேலம் நகர காவல் நிலையம் முதலிடத்தையும், திருவண்ணாமலை நகர காவல் நிலையம் இரண்டாவது இடத்தையும், சென்னை கோட்டூர்புரம் காவல் நிலையம் மூன்றாவது இடத்தையும் பிடித்தன.

---

33. **வீரதீர செயலுக்கான அண்ணா பதக்கம்:**
    i. எரிவாயு கசிவினை முன்கூட்டியே கண்டறிந்து 26 மாணவர்களின் உயிர்களைக் காப்பாற்றிய –தற்காக உதவி ஆசிரியை பா.முல்லைக்கும்,

*கிணற்றில் விழுந்த யானைக்கு மயக்க மருந்து செலுத்தி பாதுகாப்பாக மீட்க உதவியதற்காக மருத்துவர் எ.பிரகாஷுக்கும், இரயில் தண்டவாளத்தில் பாறைகள் இருப்பதைப் பார்த்து உடனடியாக ரயிலை நிறுத்தி 1,500 பயணிகளை காப்பாற்றியதற்காக ஓட்டுநர் சுரேஷுக்கும், காயம் ஏற்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த காவலரை துரிதமாக மீட்டு மருத்துவமனையில் சேர்த்ததற்காக ரா புகழேந்திரனுக்கும் வீரதீர செயலுக்கான அண்ணா பதக்கம் தனித்தனியே அளிக்கப்பட்டன.*

---

*34.* ***உழவர்களுக்கான விருதுகள்:***

*i.* *மத நல்லிணக்கத்தைப் போற்றிப் பாதுகாத்து வருவோருக்கு 'கோட்டை அமீர் மத நல்லிணக்கப்பதக்கம்' வழங்கப்படுகிறது. அதன்படி, நடப்பாண்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தைச்சார்ந்த கே ஏ அப்துல் ஜபாருக்கு விருது அளிக்கப்பட்டது.*

*ii.* *திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தைக் கடைப்பிடித்து அதிக உற்பத்தித்திறன்பெறும் விவசாயிக்கான சி நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருது, விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரைச் சார்ந்த க செல்வகுமாருக்கு வழங்கப்பட்டது.*

---

**1.** அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற, 'மோன்பா' என்ற கையால் செய்யப்பட்ட காகிதத்துடன் தொடர்புடைய மாநிலம் எது?



*அ) மேகாலயா*

*ஆ) தெலுங்கானா*

*இ) அஸ்ஸாம்*

***ஈ) அருணாச்சல பிரதேசம் ☑***

- *ஆயிரமாண்டு பழைமைவாய்ந்த பாரம்பரியக் கலையான கையால் செய்யப்படும் மோன்பா காகிதத்தொழிலுக்கு காதி & கிராமத்தொழில்கள் ஆணையம் புத்துயிர் அளித்துள்ளது. தற்போது மோன்பா காகித ஆலை ஒன்றை அருணாச்சல பிரதேச மாநிலத்தின் தவாங்கில் காதி & கிராமத் தொழில்கள் ஆணையம் அமைத்துள்ளது.*
- *நேர்த்தியான கடினமான கையால் செய்யப்பட்ட காகிதத்தை, உள்ளூர் பேச்சுவழக்கில் 'மோன் ஷுகு' என்று அழைக்கப்படுகிறது, மேலும் இது, 'சுகு ஷெங்' என்ற உள்ளூர் மரப்பட்டையிலிருந்து தயாரிக்கப்படுகிறது.*

---

**2.** சமீபத்தில் திறந்துவைக்கப்பட்ட சரக்குப்போக்குவரத்திற்கான பிரத்யேக கீழைப்பகுதி நெடும்பாதைத்திட்டத்தின் புதியபிரிவுக்கு நிதியளித்த அமைப்பு எது?




*அ) IMF*

***ஆ) உலக வங்கி ☑***

*இ) ADB*

*ஈ) AIIB*

- *புதிய பாவூர் – புதிய குர்ஜா வழித்தடத்தில் கிழக்கத்திய பிரத்யேக சரக்கு இரயில் போக்குவரத்தை பிரதமர் மோடி டிச.29 அன்று தொடங்கிவைத்தார். இந்த நிகழ்ச்சியின்போது, உத்தரபிரதேசத்தின் பிரயாக்ராஜில் கிழக்கத்திய பிரத்யேக சரக்கு இரயில் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு மையத்தையும் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். 351 கிமீ நீளமுள்ள இந்தத் திட்டத்திற்கு ₹5,750 கோடி நிதியை உலக வங்கி அளித்துள்ளது.*

---

**3.** 'Five Eyes' என்ற புலனாய்வு வலையமைப்பின் ஆறாவது உறுப்பினராக இணையவுள்ள நாடு எது?



*அ) இந்தியா*

***ஆ) ஜப்பான் ☑***

*இ) பிரேசில்*

*ஈ) இங்கிலாந்து*

- *'Five Eyes' என்பது ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, கனடா, நியூசிலாந்து மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஆகிய 5 நாடுகளின் உளவுத்துறை வலையமைப்பாகும். வட கொரியா மற்றும் சீனா முன்வைக்கும் அச்சுறுத் –தல்களுக்கு பதிலளிப்பதற்காக இந்த கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஊடக அறிக்கைகளின்படி, கடந்த ஆண்டு உய்குர் இசுலாமியர்களை சீனா கட்டாயமாக தடுத்துவைத்திருந்தது குறித்து ஜப்பான் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கும் இங்கிலாந்துக்கும் தகவல் வழங்கியது.*

---

**4.** சாகர்–III திட்டத்தின் ஒருபகுதியாக, இந்திய கடற்படைக்கப்பல் INS கில்டான், நிவாரணப் பொருட்களை வழங்குவதற்காக எந்த நாட்டைச் சென்றடைந்தது?



*அ) மடகாஸ்கர்*

*ஆ) பிலிப்பைன்ஸ்*

***இ) கம்போடியா ☑***

*ஈ) லாவோஸ்*

- *சாகர்–III திட்டத்தின்கீழ், INS கில்தான் கப்பல் கம்போடியா நாட்டின் சிகனவுக்வில்லே துறைமுகத்தை அடைந்தது. அந்நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான மற்றும் பேரிடர் மீட்பு உதவியாக பதினைந்து டன் உணவுப் பொருட்கள் கம்போடியா நாட்டின் தேசிய பேரிடர் மேலாண்மைக் குழுவிடம் வழங்கப்படும்.*
- *ASEAN நாடுகள் இடையேயான உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் சாகர்–III திட்டம் அமைந்துள்ளது.*

---

**5.** 'Adopt a Heritage' என்பது கீழ்க்காணும் எந்த நடுவண் அமைச்சகத்துடன் இணைந்து மத்திய சுற்றுலா அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் திட்டமாகும்?

***அ) கலாச்சாரத்துறை அமைச்சகம் ☑***

*ஆ) உள்துறை அமைச்சகம்*

*இ) சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சு*

*ஈ) பழங்குடியினர் நலத்துறை அமைச்சகம்*

- *மத்திய சுற்றுலா அமைச்சகம், கலாச்சாரத் துறை அமைச்சகம், இந்திய தொல்பொருள் ஆய்வுமையம் ஆகியவை மாநில / யூனியன் பிரதேச அரசுகளுடன் இணைந்து 'Adopt a Heritage' என்ற திட்டத்தை செயல்படுத்தி வருகின்றன. இந்தியா முழுவதும் அமைந்துள்ள பாரம்பரிய தளங்களில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்துவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.*
- *இந்தத் திட்டத்தின்கீழ், CSR'இன்கீழ் தளங்களை உருவாக்குவதற்காக பல்வேறு நிறுவனங்கள் & தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் "Monument Mitras" என்று அழைக்கப்படும் 27 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.*

---

**6.** நாட்டின் முதல் பூந்துகள் சேர்ப்பிகள் பூங்கா நிறுவப்பட்டுள்ள மாநிலம் எது?



*அ) ஹரியானா*

***ஆ) உத்தரகண்ட் ☑***

*இ) ஹிமாச்சல பிரதேசம்*

*ஈ) சிக்கிம்*

- *இந்தியாவின் முதல் பூந்துகள் சேர்ப்பிகள் பூங்காவானது உத்தரகண்ட் மாநிலத்தின் நைனிடால் நகரத்தில் நிறுவப்பட்டுள்ளது. இதனை, உத்தரகண்ட் வனத்துறையின் ஆராய்ச்சிப் பிரிவு உருவாக்கியுள்ளது.*
- *4 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்தப் பூங்காவில், 40'க்கும் மேற்பட்ட வகையான வண்ணத்துப்பூச்சிகள், தேனீக்கள், பறவைகள் மற்றும் பூச்சிகள் உள்ளன. இவ்வுயிரிகளின் பாதுகாப்புகுறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த இப்பூங்கா நோக்கம் கொண்டுள்ளது.*

---

**7.அண்மையில் வணிகரீதியாக செயல்படத்தொடங்கிய துலங்கா நிலக்கரி சுரங்கம் அமைந்துள்ள மாநிலம் எது?**



*அ) மேற்கு வங்கம்*

*ஆ) ஜார்க்கண்ட்*

***இ) ஒடிசா ☑***

*ஈ) தெலங்கானா*

- *அரசுக்கு சொந்தமான மின் விநியோக நிறுவனமான NTPC தனது துலங்கா நிலக்கரி சுரங்கம் வணிகரீதியாக செயல்படத் தொடங்கியுள்ளதாக அறிவித்துள்ளது.*
- *இச்சுரங்கம், ஆண்டுக்கு 7 மில்லியன் டன் அளவுக்கு உற்பத்தித் திறன் உடையதாகும். NTPC'க்கு அரசு ஒதுக்கிய பத்து சுரங்கங்களில், மூன்று சுரங்கங்கள் தற்போது செயல்பாட்டில் உள்ளன. NTPC நிறுவனம் அதன் நிலக்கரி சுரங்க வணிகத்திற்காக NTPC சுரங்க லிட் முழுவதையும் தனக்குச் சொந்தமான இணை நிறுவனமாக மாற்றியுள்ளது.*

**8. FASTag பயனர்களுக்காக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வெளியிட்டுள்ள செயலியின் பெயர் என்ன?**

*அ) India FASTag*

*ஆ) Fast FASTag*

***இ) My FASTag ☑***

*ஈ) New FASTag*

- *இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையமானது (NHAI) சமீபத்தில் தனது திறன்பேசி செயலயான "My FASTag"ஐ ஒரு புதிய அம்சத்துடன் புதுப்பித்து வெளியிட்டது. அதன்வழி, மீத இருப்பின் நிலையை பயனர்கள் அறிந்துகொள்ளலாம்.*
- *கடந்த 2017'இல் My FASTag மற்றும் FASTag Partner என்ற இரண்டு செயலிகளை NHAI அறிமுகம் செய்தது. முந்தையது FASTag பயனர்களுக்கானது, பிந்தையது CSC, வங்கி கூட்டாளர்கள் மற்றும் வாகன விற்பனையாளர்கள் போன்ற வணிகர்களுக்கானதாகும்.*

---

**9. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற சீதாபானி வனவுயிரி காப்பகம் அமைந்துள்ள மாநிலம் எது?**



*அ) ஹரியானா*

***ஆ) உத்தரகண்ட் ☑***

*இ) ஹிமாச்சல பிரதேசம்*

*ஈ) சிக்கிம்*

- *உத்தரகண்ட் சுற்றுலா அமைச்சகம், மத்திய பிரதேச மாநில அரசிடம், வெள்ளைப்புலியைக் கொண்டுவருமாறு கோரியுள்ளது. புலி சபாரி திட்டத்திற்காக வெள்ளைப் புலிகளை நைனிடாலின் சீதாபானி வனவுயிரி காப்பகத்திற்கு கொண்டுவர உத்தரகண்ட் மாநிலம் கோரிக்கை விடுத்துள்ளது.*
- *மத்திய பிரதேசத்தின் ரேவாவில் உள்ள மஹாராஜா மார்தண்ட் சிங் ஜூடியோ வெள்ளைப்புலிகள் சபாரி மற்றும் மிருகக்காட்சிசாலையில் வெள்ளைப்புலிக்குட்டிகள் உள்ளன.*

---

**10. அண்மைச் செய்திகளில் வந்த, எஸ்டோனியா அமைந்துள்ள கண்டம் எது?**




*அ) தென்னமெரிக்கா*

***ஆ) ஐரோப்பா ☑***

*இ) ஆசியா*

*ஈ) ஆப்பிரிக்கா*

- *எஸ்டோனியா என்பது வடக்கு ஐரோப்பாவில் பால்டிக் கடல் மற்றும் பின்லாந்து வளைகுடாவின் எல்லையில் அமைந்துள்ளது நாடாகும். மூன்று புதிய தூதரகங்களை திறப்பதற்கான மத்திய வெளியுறவு அமைச்சகத்தின் முன்மொழிவுக்கு அண்மையில் இந்திய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.*
- *நடப்பு 2021ஆம் ஆண்டில், இந்தியாவின் மூன்று புதிய தூதரகங்கள் எஸ்டோனியா (ஐரோப்பா), பராகுவே (தென் அமெரிக்கா) மற்றும் டொமினிகன் குடியரசு (வட அமெரிக்கா) ஆகிய இடங்களில் திறக்கப்படும். இந்நடவடிக்கை அரசியல் உறவுகளை வலுப்படுத்தும் மற்றும் இருதரப்பு வணிகம்&முதலீட்டின் வளர்ச்சியை ஊக்குவிக்கும்.*

---

**1.இந்தியாவின் எந்த ஏவுகணை அமைப்பை ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?**

***அ) ஆகாஷ் ☑***

*ஆ) நாக்*

*இ) அமோகா*

*ஈ) பிருத்வி*



- *பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஆகாஷ் ஏவுகணையின் ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கப்பட்டது. தரையிலிருந்து 25 கிமீ தொலைவு வரை வானத்தில் சென்று தாக்கும் இந்த ஏவுகணை கடந்த 2014ஆம் ஆண்டு இந்திய வான்படையிலும், 2015ஆம் ஆண்டு இந்திய இராணுவத்திலும் சேர்க்கப்பட்டது. இதுபோன்ற தளவாடங்களை ஏற்றுமதி செய்வதற்கு விரைந்து ஒப்புதல் அளிக்கும் வகையில் பாதுகாப்பு அமைச்சர், வெளியுறவு அமைச்சர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோர் அடங்கிய குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.*
- *உள்நாட்டில் தயாரிக்கப்படும் பெரும் இராணுவ தளவாடங்களை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது குறித்து இந்த குழு ஒப்புதல் வழங்கும். பாதுகாப்புத் தளவாடங்களை ஏற்றுமதி செய்வதன் வாயிலாக பாதுகாப்பு ஏற்றுமதியில் 5 பில்லியன் அமெரிக்க டாலர் அளவை எட்டவும், அந்நிய நட்பு நாடுகளுடனான கேந்திர உறவுமுறையை மேம்படுத்தவும் இந்திய அரசு கவனம் செலுத்தி வருகிறது.*

---

**2. வெல்லக்கழிவு, கரும்பு, சர்க்கரைவள்ளிக்கிழங்கு, சோளம் மற்றும் சமையல் எண்ணெய் விதைகள் போன்றவற்றிலிருந்து கீழ்க்காணும் எந்த வகை எத்தனால் தயாரிக்கப்படுகிறது?**

***அ) 1G எத்தனால் ☑***

*ஆ) 2G எத்தனால்*

*இ) 3G எத்தனால்*

*ஈ) கிளீன் எத்தனால்*



- *முதலாம் தலைமுறை எத்தனால் உற்பத்திக்காக, நாட்டில் எத்தனால் வடிதிறனை மேம்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. 2022ஆம் ஆண்டுக்குள் பெட்ரோலில் 10% எத்தனாலை சேர்க்கவும், 2030ஆம் ஆண்டுக்குள் 20% எத்தனால் சேர்க்கவும் மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.*
- *தரமான எத்தானல் தயாரிப்பை அதிகரிப்பதற்காக, உணவு தானியங்களான அரிசி, கோதுமை, பார்லி, மக்காச்சோளம் மற்றும் சோளம், கரும்பு, சர்க்கரைவள்ளிக்கிழங்கு போன்றவற்றிலிருந்து, முதல் தலைமுறை எத்தனால் உற்பத்தி செய்வதை இந்திய அரசு ஊக்குவிக்கிறது.*
- *2G உயிரி எரிபொருள்கள் தயாரிப்பதற்கு உண்ணத்தகாத எண்ணெய் வித்துக்கள், பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய், விவசாய எச்சங்கள் பயன்படுத்தப்படுகின்றன; 3G உயிரி எரிபொருள்கள் தயாரிப்பதற்கு தொழிலக கழிவுகள், நகராட்சி திடக் கழிவுகள் பயன்படுத்தப்படுகின்றன.*

---

**3. இந்திய புலம்பெயர்ந்தோருடன் இணைந்திருப்பதற்காக மத்திய வெளியுறவு அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட செயலி எது?**

*அ) Bharat Connect*

***ஆ) Global Pravasi Rishta ☑***

*இ) Hindustan Hamara*

*ஈ) Bharat Communicate*



- *உலகெங்கிலும் உள்ள இந்திய புலம்பெயர்ந்தோருடன் இணைந்திருப்பதற்காக 'Global Pravasi Rishta' என்ற இணையதளம் மற்றும் செயலியை வெளியுறவு அமைச்சகம் அறிமுகப்படுத்தியது.*
- *3.12 கோடி என்ற எண்ணிக்கையில் உள்ள இந்திய புலம்பெயர்ந்தோரை வெளியுறவு அமைச்சகம், இந்திய தூதரகங்கள் மற்றும் புலம்பெயர்ந்தோர் இடையே முவ்வழி தொடர்புகளை உருவாக்குவதே இந்தச்செயலி & இணையதளத்தின் நோக்கமாகும். இச்செயலியானது இந்திய புலம்பெயர்ந்தோராலும், இணையதளம் தூதரகங்களாலும் பயன்படுத்தப்படும்.*

---

**4.அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற இலை-மூக்கு வௌவால், பொதுவாக எந்த மாநிலத்தில் காணப்படுகிறது?**

*அ) கேரளா*

***ஆ) கர்நாடகா ☑***

*இ) பீகார்*

*ஈ) மேற்கு வங்கம்*



- *வழக்கமாக கர்நாடக மாநிலத்தின் கோலார் மாவட்டத்தில் உள்ள அனுமனஹள்ளி கிராமத்தில் உள்ள இரண்டு குகைகளில் மட்டுமே கோலார் இலை-மூக்கு வௌவால்கள் காணப்படுகின்றன.*
- *சமீபத்தில், அவ்விரு குகைகளுள் ஒன்றனுள் வாழ்ந்து வௌவால்கள் அழிந்தன. இதற்கு பதிலளிக்கும் வகையில், கர்நாடக மாநில வனத்துறை, இந்திய வௌவால்கள் பாதுகாப்பு அறக்கட்டளையுடன் இணைந்து மீதமுள்ள வௌவால்களை காப்பாற்ற நடவடிக்கை எடுத்து வருகிறது.*

---

**5.தேசிய ஓய்வூதிய முறைமையை நிர்வகிக்கும் அமைப்பு எது?**

*அ) IRDAI*

***ஆ) PFRDA ☑***

*இ) நிதியமைச்சகம்*

*ஈ) இந்திய ரிசர்வ் வங்கி*

- *ஓய்வூதிய நிதிய ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் (PFRDA) சந்தாதாரர்கள் இப்போது ஆன்லைன் பயன்முறையைப் பயன்படுத்தி தேசிய ஓய்வூதிய முறையிலிருந்து (NPS) வெளியேறலாம் என அறிவித்துள்ளது.*
- *தேசிய ஓய்வூதிய முறை, 2004 ஜன.1 அன்று அமல்படுத்தப்பட்டது. இது நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் 2009ஆம் ஆண்டு முதல் தன்னார்வ அடிப்படையில் நீட்டிக்கப்பட்டது. PFRDA ஆனது தேசிய ஓய்வூதிய முறைமை & ஓய்வூதிய துறையை ஒழுங்குபடுத்துகிறது.*

---

**6.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற சுகோ பள்ளத்தாக்கு, பின்வரும் எவ்விரு வடகிழக்கு மாநிலங்களிடையே உள்ளது?**

***அ) மணிப்பூர்-நாகாலாந்து ☑***

*ஆ) அஸ்ஸாம்-மணிப்பூர்*

*இ) மணிப்பூர்-சிக்கிம்*

*ஈ) அஸ்ஸாம்-மேகாலயா*



- *மணிப்பூர்–நாகாலாந்து எல்லையில் உள்ள பிரபலமான மலையேற்ற இடமான சுகோ பள்ளத்தாக்கில் சமீபத்தில் ஒரு காட்டுத்தீ ஏற்பட்டது. இது, நாகாலாந்திலிருந்து 3 நாட்களுக்கு முன்பு தொடங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இக்காட்டுத்தீயைத்தடுக்க இந்திய வான்படையின் Mi–17V5 உலங்கூர்தி பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.*

---

**7.கீழ்க்காணும் எந்த இந்திய மாநிலத்தின் காகங்களில் ஏவியன் இன்புளுயன்ஸா (பறவைக்காய்ச்சல்) பாதிப்பு காணப்படுகிறது?**



*அ) மேற்கு வங்கம்*

*ஆ) ஜார்க்கண்ட்*

***இ) இராஜஸ்தான் ☑***

*ஈ) தெலங்கானா*

- *இராஜஸ்தானின் ஜலவர் மாவட்டத்தில், ஏவியன் இன்புளுயன்ஸா (பறவைக்காய்ச்சல்) காரணமாக 50 காகங்கள் சமீபத்தில் இறந்தன. இதற்கு பதிலளிக்கும் விதமாக, அந்தப் பகுதியை சுற்றி ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டது. அதே நேரத்தில், ஜோத்பூர் நகரத்திலிருந்தும் காகங்களின் மரணம் பதிவாகியுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதியை சுத்தப்படுத்தவும், மாதிரிகளை போபாலின் தேசிய உயர் பாதுகாப்பு விலங்கு நோய் ஆய்வகத்திற்கு அனுப்பவும் நிர்வாகம் உத்தரவிட்டது.*

---

**8.** 'டிஜிட்டல் கொடுப்பனவு குறியீடு – Digital Payments Index'ஐ வெளியிட்டுள்ள நிதி அமைப்பு எது?

*அ) பாரத வங்கி*

***ஆ) இந்திய ரிசர்வ் வங்கி ☑***

*இ) IRDAI*

*ஈ) SEBI*

- *இந்தியா முழுவதும், கொடுப்பனவுகளின் டிஜிட்டல் மயமாக்கலின் விரிவாக்கத்தை பதிவுசெய்வதற்காக, இந்திய ரிசர்வ் வங்கி, 'டிஜிட்டல் கொடுப்பனவு குறியீட்டை' உருவாக்கியுள்ளது. இக்குறியீட்டு எண் 2018 மார்ச்சை அடிப்படைக்காலமாகக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.*
- *ரிசர்வ் வங்கியின் கூற்றுப்படி, மார்ச் 2019 மற்றும் மார்ச் 2020'க்கான குறியீட்டெண் முறையே 153.47 மற்றும் 207.84 ஆக உள்ளது. 5 அளவுருக்களை இந்தக் குறியீடு கொண்டுள்ளது.*

---

**9.**ஐக்கியப் பேரரசின் (UK) ஹானர்ஸ் பட்டியலில், பின்வரும் எந்த விளையாட்டு வீரருக்கு 'நைட்ஹுட்' பட்டம் வழங்கப்பட்டது?



*அ) விஸ்வநாதன் ஆனந்த்*

*ஆ) ரபேல் நடால்*

***இ) லூயிஸ் ஹாமில்டன் ☑***

*ஈ) வாலான்டினோ ராஸி*

- *பிரிட்டிஷ் கார்பந்தய வீரர் லூயிஸ் ஹாமில்டன் ஐக்கியப் பேரரசின் பாரம்பரிய புத்தாண்டு கௌரவ பட்டியலில் இடம்பெற்றுள்ளார். வணிகம், விளையாட்டு மற்றும் அரசியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சாதனையாளர்களை இந்தப் பட்டியல் அங்கீகரிக்கிறது.*

---

**10.**இந்தியாவின் உயரமான வானிலை மையம், பின்வரும் எந்த மாநிலத்தில் / யூனியன் பிரதேசத்தில் திறக்கப்பட்டுள்ளது?



*அ) ஹிமாச்சல பிரதேசம்*

*ஆ) சிக்கிம்*

***இ) லடாக் ☑***

*ஈ) ஜம்மு–காஷ்மீர்*

- *லே'இல் அமைக்கப்பட்டுள்ள வானிலை மையத்தை மத்திய புவி அறிவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், மற்றும் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சர் டாக்டர். ஹர்ஷ்வர்தன் காணொலி மூலம் திறந்து வைத்தார்.*
- *கடல் மட்டத்திலிருந்து 3500 மீட்டர் உயரத்தில் லே'இல் அமைக்கப்பட்டுள்ள இந்த வானிலை மையம், இந்தியாவிலேயே மிகவும் உயரமான வானிலை மையம் ஆகும். சர்வதேசத் தரம் வாய்ந்த இந்த மையம், வானிலை தொடர்பான விஷயங்களில் லடாக் நிர்வாகம் மற்றும் மக்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்*

---

**1.** **விவசாயத்தில் புதுமைகளை மேம்படுத்துவதற்காக வேளாண் அமைச்சகம் தொடங்கிய ஆன்லைன் நிகழ்வின் பெயர் என்ன?**

*அ) ஆத்மநிர்பார் அக்ரி*

***ஆ) அக்ரி இந்தியா ஹேக்கதான் ☑***

*இ) கிசான் மேளா*

*ஈ) கிருஷி சம்மேளன்*




- *மத்திய உழவு மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர், புது தில்லியில் காணொலிமூலம் 'அக்ரி இந்தியா ஹேக்கதான் 2020'ஐ தொடங்கிவைத்தார். உரையாடல்களை நடத்துவதற்கும் உழவில் புதுமைகளை ஊக்குவிப்பதற்கும் இந்தக் கூட்டத்தின் நோக்கமாகும்.*
- *இந்த ஆண்டு, இந்த நிகழ்வை பூசா கிருஷி, ICAR – IARI, ICAR மற்றும் வேளாண்மை, கூட்டுறவு மற்றும் உழவர் நலத்துறை ஆகியவை ஏற்பாடு செய்திருந்தன. 24 சிறந்த கண்டுபிடிப்புகளுக்கு 1 இலட்சம் ரொக்கப்பரிசும் அக்கண்டுபிடிப்பை வளர்த்தெடுப்பதற்கான ஆதரவும் வழங்கப்படும்.*

---

**2.** **அண்மைச்செய்திகளில் வந்த IUC'இன் விரிவாக்கம் என்ன?**

*அ) Internet usage charges*

*ஆ) Intermediate usage charges*

***இ) Interconnect usage charges ☑***

*ஈ) Interconnect utility charges*



- *இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் (TRAI) கூற்றுப் படி, இன்டர்நெக்னெக்ட் பயன்பாட்டுக் கட்டணங்கள் (IUC) ஜனவரி 1, 2021 முதல் சுழியமாக்கப்பட்டுள்ளது. IUC என்பது ஒரு தொலைத்தொடர்பு நிறுவனம் அதன் நெட்வொர்க்கின் வாடிக்கையாளர்கள் பிற சேவை வழங்குநர்களின் எண்ணிற்கு அழைக்கும் ஒவ்வொரு அழைப்பிற்கும் செலுத்தும் கட்டணமாகும். இந்த நடவடிக்கைக்கு முன்னர், ஒரு தொலைத் தொடர்பு நிறுவனம் IUCஆக நிமிடத்திற்கு 6 பைசா செலுத்திவந்தது.*

---

**3.** **முகேஷ் அம்பானியை விஞ்சி ஆசியாவின் செல்வந்தராக மாறியுள்ள ஜாங் ஷான்ஷன் சார்ந்த நாடு எது?**

*அ) சிங்கப்பூர்*

***ஆ) சீனா ☑***

*இ) ஜப்பான்*

*ஈ) தாய்லாந்து*



- *புளூம்பெர்க் பில்லியனர்கள் குறியீட்டின்படி, ஜாங் ஷான்ஷனின் நிகர சொத்து மதிப்பு $70.9 பில்லியன் டாலர்களாக உயர்ந்துள்ளது. இதன்மூலம் அவர், முகேஷ் அம்பானி மற்றும் சீனாவின் ஜாக் மா ஆகியஇருவரையும் விஞ்சி ஆசியாவின் பெரும் பணக்காரர் என்ற பெருமையைப்பெற்றார்.*
- *சீனாவின் மிகப்பெரிய குளிர்பான நிறுவனமான 'நோங்ஃபு ஸ்பிரிங்' நிறுவனத்தின் நிறுவனரும், 'வாண்டாய்' என்னும் சீன மருந்து நிறுவனத்தின் உரிமையாளரும் ஆவார் ஜாங் ஷான்ஷன்.*

---

**4.** **இரயில்வே வாரியத்தின் புதிய தலைவர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

*அ) A K ஆண்டனி*

***ஆ) சுனீத் சர்மா ☑***

*இ) பிரதீப் குமார்*

*ஈ) P S மிஸ்ரா*



- *இரயில்வே வாரியத்தின் புதிய தலைவராகவும் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாகவும் சுனீத் சர்மா பொறுப்பேற்றார். இவர் அலுவல் சார்ந்து இந்திய அரசின் முதன்மைச்செயலராகவும் பணியாற்றுவார்.*
- *சுனீத் சர்மாவை ரயில்வே வாரிய தலைவராக நியமிப்பதற்கு, மத்திய அமைச்சரவையின் நியமனக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கு முன்பாக, சுனீத் சர்மா, கிழக்கு இரயில்வேயின் பொது மேலாளராக பணியாற்றி வந்தார்.*

---

**5.** **பின்வரும் எந்த இந்திய மாநிலத்தின் எல்லைக்கு அருகிலுள்ள திபெத்திய நகரங்களான லாசா & நைஞ்சியை இணைக்கும் இரயில்பாதை பணியை சீனா நிறைவுசெய்துள்ளது?**

*அ) சிக்கிம்*

***ஆ) அருணாச்சல பிரதேசம் ☑***

*இ) மேகாலயா*

*ஈ) மணிப்பூர்*




- *ஊடக அறிக்கையின்படி, திபெத்தின் லாசா மற்றும் நைஞ்சி நகரங்களை இணைக்கும் இரயில்பாதைக்கான தடங்களை அமைக்கும் பணியை சீனா சமீபத்தில் நிறைவு செய்தது. இவ்விரு நகரங்களும் அருணாச்சல பிரதேச மாநிலத்தில் இந்திய எல்லைக்கு அருகில் உள்ளன.*
- *இந்த சிச்சுவான்–திபெத் இரயில்வே, திபெத்துக்கான இரண்டாவது இரயில் ஆகும். அது சிச்சுவான் மாகாணத்தின் தலைநகரமான செங்டுவிலிருந்து தொடங்கி திபெத்துக்குள் நுழைகிறது.*

---

**6.** **பிரதமரால் வெளியிடப்பட்ட, 'NAVARITIH' என்பது பின்வரும் எத்துறையுடன் தொடர்புடைய சான்றிதழுடன்கூடிய படிப்பாகும்?**

*அ) கலாச்சாரம்*

***ஆ) கட்டுமானத் துறை ☑***

*இ) செயற்கை நுண்ணறிவு*

*ஈ) நுண்ணுயிரியல்*



- *NAVARITIH (New (புதிய), Affordable (மலிவான), Validated (சரிபார்க்கப்பட்ட), Research Innovation Technologies for Indian Housing (இந்திய வீட்டுவசதிக்கான ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பு தொழில்நுட்பங்கள்)) என்ற புதிய கட்டுமான தொழில்நுட்பங்கள் குறித்த சான்றிதழுடன்கூடிய படிப்பை பிரதமர் வெளியிட்டார்.*
- *உலகளாவிய வீட்டுவசதித் தொழில்நுட்பச்சவாலின் கீழ், ஆறு மாநிலங்களில் உள்ள ஆறு இடங்களில் சிறிய நவீன வீடுகள் கட்டும் திட்டத்துக்கும் காணொலிக்காட்சிமூலம் பிரதமர் அடிக்கல் நாட்டினார்.*

---

**7.** PMAY (U) திட்டத்தைச் செயல்படுத்துவதில் சிறந்து விளங்கி முதலிடம் பெற்ற மாநிலம் எது?

*அ) மேற்கு வங்கம்*

*ஆ) ஜார்க்கண்ட்*

***இ) உத்தர பிரதேசம்* ☑**

*ஈ) தெலங்கானா*

❖ *இந்திய பிரதமர் நரேந்திர மோடி, பிரதமர் ஆவாஸ் யோஜனா – நகர்ப்புற (PMAY-U) திட்டத்தை செயல்படுத்துவதில் சிறந்து விளங்கிய மாநிலங்களுக்கான ஆண்டு விருதுகளை அறிவித்தார். சிறப்பாக செயல்படும் மாநிலங்கள் பிரிவில், உத்தர பிரதேசம் முதலிடத்தையும், மத்திய பிரதேச மாநிலம் இரண்டாமிடத்தையும் ஆந்திர பிரதேச மாநிலம் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளன.*

❖ *வடகிழக்கு பிராந்தியத்திலும், மலைப்பாங்கான மாநிலங்களிலும், திரிபுரா முதலிடத்தைப் பிடித்தது. சிறப்பாக செயல்படும் மாநகராட்சியாக விசாகப்பட்டினம் தேர்வு செய்யப்பட்டது.*

---

**8.** காலமுறை தொழிலாளர் வள ஆய்வை வெளியிடுகிற மத்திய அமைச்சகம் எது?

*அ) தொழிலாளர் & வேலைவாய்ப்பு அமைச்சகம்*

***ஆ) புள்ளியியல் & திட்ட அமலாக்கம் அமைச்சகம்* ☑**

*இ) திறன் மேம்பாடு & தொழில்முனைவு அமைச்சகம்*

*ஈ) உள்துறை அமைச்சகம்*

❖ *புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகமானது காலாண்டுக்கு ஒருமுறை காலமுறை தொழிலாளர் வள ஆய்வை (Periodic Labour Force Survey) வெளியிடுகிறது. சமீபத்திய காலாண்டுக்கான PLFS'படி, நகர்ப்புறங்களில் 2019 அக்டோபர்–டிசம்பர் மாதங்களில் 7.9 சதவீதமாக இருந்த வேலையின்மை விகிதம் 2020 ஜனவரி–மார்ச் மாதங்களில் 9.1 சதவீதமாக உயர்ந்தது. தொழிலாளர் வள பங்களிப்பு விகிதமும் 37.5 சதவீதமாக உயர்ந்துள்ளது.*

---

**9.** 51ஆவது இந்திய பன்னாட்டு திரைப்பட விழாவை தொகுத்து வழங்கவுள்ள இந்திய நகரம் எது?

***அ) கோவா* ☑**

*ஆ) சென்னை*

*இ) கொச்சின்*

*ஈ) கொல்கத்தா*

❖ *இந்தியாவின் சர்வதேச திரைப்பட விழாவின் (IFFI) 51ஆவது பதிப்பு, 2021 ஜனவரி 16 முதல் 24 வரை கோவாவில் நடைபெறவுள்ளது. இதற்கான பதிவு 2021 ஜனவரி.10 வரை திறந்திருக்கும்.*

---

**10.** 'K-9 சஞ்சிகை' என்பதுடன் தொடர்புடைய துறை எது?

*அ) மருத்துவம்*

***ஆ) காவல் பணி* ☑**

*இ) பெருங்கொள்ளை நோய்*

*ஈ) ரோபாட்டிக்ஸ்*



❖ *"தேசிய காவல் K-9 சஞ்சிகை"இன் முதல் பிரதியை புது தில்லியில் உள்துறை அமைச்சர் அமித் ஷா வெளியிட்டார். காவல் நாய்கள் பற்றிய இந்தியாவின் முதல் வெளியீடாக இது அமைந்துள்ளது.*

❖ *ஹிந்தி மற்றும் ஆங்கிலத்தில் வெளியாகும் தேசிய காவல் K-9 சஞ்சிகை, ஆண்டுக்கு இருமுறை ஒவ்வொரு ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதங்களில் வெளிவரும்.*

---

**1.கீழ்க்காணும் எந்த இந்திய ஆயுதப்படை அதன் முதல், 'மனித உரிமைகள் பிரிவை' உருவாக்கியுள்ளது?**

*அ) இந்திய கடற்படை*

***ஆ) இந்திய இராணுவம் ☑***

*இ) இந்திய கடலோர காவல்படை*

*ஈ) இந்திய வான்படை*

- *இந்திய இராணுவம் அதன் வரலாற்றில் முதல் முறையாக ஒரு புதிய 'மனித உரிமைகள் பிரிவை' உருவாக்கியுள்ளது. ஜம்மு–காஷ்மீர் & வடகிழக்கு போன்ற பதற்றம் நிறைந்த பகுதிகளில் அதன் செயல்பாட்டில் அதிக வெளிப்படைத்தன்மையை வழங்குவதே இதன் நோக்கமாகும்.*
- *மேஜர் ஜெனரல் கௌதம் சவுகான் முதல் கூடுதல் இயக்குநர் ஜெனரலாக (மனித உரிமைகள்) பொறுப்பேற்றுள்ளார். அவர் இராணுவ துணைத் தலைவருக்கு நேரடியாக அறிக்கை அளிப்பார்.*

---

**2.இந்தியப்பிரதமர் அவர்கள், IIM'க்கு அடிக்கல் நாட்டிய சம்பல்பூர் அமைந்துள்ள மாநிலம் எது?**

*அ) மேற்கு வங்கம்*

***ஆ) ஒடிசா ☑***

*இ) பீகார்*

*ஈ) உத்தரகண்ட்*

- *ஒடிசா மாநிலத்தின் சம்பல்பூரில் உள்ள உள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்தின் (IIM) நிரந்தர வளாகத்திற்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். 2015–16ஆம் ஆண்டில், இந்நிறுவனம் மூன்றாம் தலைமுறை IIM ஆக தொடங்கப்பட்டதிலிருந்து, ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு தற்காலிக வளாகத்தில் செயல்பட்டு வருகிறது.*

---

**3.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'ஆசிய நீர்ப்பறவைகள் கணக்கெடுப்பு 2021' நடத்தப்படவுள்ள மாநிலம் எது?**



*அ) தமிழ்நாடு*

*ஆ) கேரளா*

***இ) ஆந்திர பிரதேசம் ☑***

*ஈ) குஜராத்*

- *ஆந்திர பிரதேச மாநில மாநில வனத்துறையால் ஆண்டுதோறும் 'நீர்ப்பறவைகள் கணக்கெடுப்பு' நடத்தப்படுகிறது. கோரிங்கா வனவுயிரி சரணாலயம், கோதாவரி கரையோரத்திற்கு அருகிலுள்ள பகுதிகள், கொல்லேரு ஏரி, அட்டபகா பறவைகள் சரணாலயம் மற்றும் கிருஷ்ணா ஆற்றங்கரையோரத்தில் உள்ள கிருஷ்ணா வனவுயிரி சரணாலயம் ஆகியவை இதில் அடங்கும்.*
- *பாம்பே இயற்கை வரலாற்றுச் சங்கம் மற்றும் வெட்லேண்ட் இன்டர்நேஷனல் ஆகியவை இதற்கான தங்களது தொழில்நுட்ப ஆதரவை வழங்கும்.*

---

**4.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, தீப்பர் பீல் ஆனது எந்த மாநிலத்தின் ஒரே ராம்சார் தளமாகும்?**



*அ) சிக்கிம்*

***ஆ) அஸ்ஸாம் ☑***

*இ) அருணாச்சல பிரதேசம்*

*ஈ) மணிப்பூர்*

- *தீப்பர் பீல் ஆனது அஸ்ஸாம் மாநிலத்தின் ஒரே ராம்சார் தளமாகும். இது, கௌகாத்தியின் தென்மேற்கு விளிம்பில் அமைந்துள்ளது. 219 வகையான பறவைகளுடன் பல்வேறு வகையான நீர்வாழ் உயிரினங்களைக் கொண்ட இத்தளம், கடந்த 2002ஆம் ஆண்டில் ராம்சார் தளமாக அறிவிக்கப்பட்டது. சமீபத்தில் மாவட்ட அதிகாரிகள், அந்த இடத்தில் குழுமி மீன்பிடிக்க தடை விதித்துள்ளனர்.*

---

**5.கங்கை பள்ளத்தாக்கின், முதல் மலையுச்சியில் அமைந்துள்ள பௌத்த மடாலயம் கண்டுபிடிக்கப்பட்ட லால் பஹாரி அமைந்துள்ள மாநிலம் எது?**



*அ) சிக்கிம்*

***ஆ) பீகார் ☑***

*இ) ஹிமாச்சல பிரதேசம்*

*ஈ) மணிப்பூர்*

- *கங்கை பள்ளத்தாக்கின் முதல் மலையுச்சி பௌத்த மடாலயம் பீகார் மாநிலத்தின் லக்கிசராய் மாவட்டத்தில் உள்ள லால் பஹாரி என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது மலையுச்சியில் உள்ள முதல் மடாலயம் ஆகும். இது பீகார் பாரம்பரிய மேம்பாட்டு சங்கம் மற்றும் மேற்கு வங்காளத்தின் விஸ்வ–பாரதி பல்கலைக்கழகத்தின் கூட்டுப்பயணத்தின்போது கண்டுபிடிக்கப்பட்டது. இது ஸ்ரீமதர்மவி –ஹாரிக் ஆரியபிக்சுசங்கஸ்யா என பெயரிடப்பட்ட ஒரு விகாரமாகும்.*

---

**6.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'சாகர்மாலா மேம்பாட்டு நிறுவனம்' ஆனது பின்வரும் எந்த மத்திய அமைச்சகத்தின்கீழ் செயல்படுகிறது?**

*அ) சாலைப் போக்குவரத்து & நெடுஞ்சாலைகள் அமைச்சகம்*

***ஆ) கப்பல் போக்குவரத்து அமைச்சகம் ☑***

*இ) தகவல் தொடர்பு அமைச்சகம்*

*ஈ) பாதுகாப்பு அமைச்சகம்*

- *சாத்தியமுள்ள வானூர்தி நிறுவனங்களின்மூலம் சிறப்பு நோக்க முகமையின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட வழித்தடங்களில் கடல் விமான சேவையை தொடங்குவதற்கான பணிகளை மத்திய துறைமுகம், கப்பல் மற்றும் நீர்வழிகள் அமைச்சகம் தொடங்கியுள்ளது.*
- *அமைச்சகத்தின் நிர்வாக கட்டுப்பாட்டில் இருக்கும் சாகர்மாலா மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இச்சிறப்பு நோக்க முகமையுள் வானூர்தி நிறுவனங்களும் அடங்கும்.*

---

**7.** சமீபத்தில் தெற்காசிய ஜர்னலில் வெளியான அறிக்கையின்படி, எந்த இந்திய நகரத்தில் அதிகபட்ச CCTV கவரேஜ் உள்ளது?

அ) மும்பை

**ஆ) சென்னை ☑**

இ) தில்லி

ஈ) ஹைதராபாத்



- *அண்மையில் தெற்காசிய ஜர்னலில் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையின் படி, சென்னை பெருநகரம், ஒரு ச.கி.மீட்டருக்கும் 1,000 மக்களுக்கும் என அதிகபட்ச CCTV எண்ணிக்கையை கொண்டுள்ளது. உலகின் அதிக மக்கள்தொகை கொண்ட 130 நகரங்களில் CCTV கேமராக்கள் எண்ணிக்கையை இவ்வறிக்கை பதிவுசெய்கிறது. சீன மற்றும் இந்திய நகர்ப்புறங்களில் CCTV கண்காணிப்பு கேமராக்களின் எண்ணிக்கை அதிகம் என்பதையும் இவ்வறிக்கை எடுத்துக்காட்டுகிறது.*

---

**8.** 2021ஆம் ஆண்டில், எண்ணெய்கள் மற்றும் கொழுப்புகளில் அனுமதிக்கப்பட்ட டிரான்ஸ் கொழுப்பு அமிலங்களுக்கான (TFA) வரம்பு என்ன?

அ) 10%

ஆ) 5%

**இ) 3% ☑**

ஈ) 1%



- *இந்திய உணவுப்பாதுகாப்பு மற்றும் தர ஆணையமானது (FSSAI) எண்ணெய்கள் மற்றும் கொழுப்புகளில் உள்ள டிரான்ஸ் கொழுப்பு அமிலங்களின் அளவை 2021'க்கு 3% ஆகக்குறைத்துள்ளது. இந்த வரம்பு, 2022'க்கு 2% ஆகக் குறைக்கப்படவுள்ளது. டிரான்ஸ் கொழுப்பு மாரடைப்பு & கரோனரி இருதய நோய்களின் அபாயத்தை அதிகரிக்கும் எனக்கண்டறியப்பட்டுள்ளது. 2023'க்குள் டிரான்ஸ் கொழுப்பை ஒழிக்க WHO நோக்கம் கொண்டுள்ளது.*

---

**9.** பிரயாஸ் என்பது இந்தியாவின் எந்த பொதுத்துறை நிறுவனம் ஏற்றுக்கொண்ட புதிய முன்னெடுப்பாகும்?

அ) NTPC

**ஆ) IOCL ☑**

இ) ONGC

ஈ) HAL

- *'பிரயாஸ்' என்பது இந்தியன் எண்ணெய் நிறுவனம் (IOCL) ஏற்றுக் கொண்ட ஒரு புதிய சமூக உதவி முயற்சியாகும். இந்தத்திட்டத்தின்கீழ், IOCL தில்லி அலுவலக ஊழியர்கள், IOCL'இன் எரிபொருள் வங்கிகளுக்கு அருகில் அமைந்துள்ள இரவுநேர முகாம்களுக்கு போர்வைகள் மற்றும் அத்தியாவசிய பொருட்களை விநியோகிப்பார்கள்.*
- *இந்த இரவுநேர தங்குமிடங்களை தில்லி அரசு மற்றும் சில தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் சமூகத்தின் நலிந்த பிரிவினருக்கு உதவுவதற்காக நடத்தி வருகின்றன.*

---

**10.** பிரிட்டன் ஆனது அண்மையில் கீழ்க்கண்ட எந்தத் தயாரிப்புக்கான வரிவிதிப்பை முற்றிலுமாக நீக்கியது?

அ) அலைபேசிகள்

**ஆ) அணையாடை தயாரிப்புகள் ☑**

இ) மடிக்கணினிகள்

ஈ) பாரசிட்டமால் மாத்திரைகள்



- *பெண்களின் அணையாடை தயாரிப்புகளுக்கான வரிவிதிப்பை பிரிட்டன் நீக்கியுள்ளது. "tampon tax" என்று அழைக்கப்பட்ட இவ்வரி, தற்போது முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுள்ளது. இந்த முடிவு, முன்னதாக அந்நாட்டின் வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தில் அதன் கருவூலத் தலைவரால் அறிவிக்கப்பட்டது. ஆனால் தற்போது ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறியபோதுதான் செயல்படுத்தப்பட்டுள்ளது.*

---

**1.** **நீதியரசர் AM கான்வில்கர் தலைமையிலான 3 நீதியரசர்கள் கொண்ட அமர்வு, எந்த வழக்கில் 2:1 பெரும்பான்மையின் அடிப்படையில் தீர்ப்பளித்தது?**



*அ) ஹத்ராஸ் வழக்கு*

***ஆ) மத்திய விஸ்டா திட்ட வழக்கு ☑***

*இ) அயோத்தி நில வழக்கு*

*ஈ) COVID-19 தடுப்பூசி போடுதல் வழக்கு*

❖ *நீதியரசர் A M கான்வில்கர் தலைமையிலான உச்சநீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்கள்கொண்ட அமர்வு மத்திய விஸ்டா திட்ட வழக்கு தொடர்பான தீர்ப்பை வழங்கியது. மறு சீரமைப்புத் திட்டத்திற்கு 2: 1 பெரும்பான்மையின் அடிப்படையில் அவ்வமர்வு ஒப்புதல் அளித்தது. நிலப்பயன்பாடு மாற்றங்கள் மற்றும் சுற்றுச்சூழல் குழுவின் பரிந்துரைகளையும் அது உறுதிப்படுத்தியது.*

---

**2.** **UNICEF'இன் சமீபத்திய அறிக்கையின்படி, புத்தாண்டு நாளன்று அதிக எண்ணிக்கையிலான பிறப்புகளை பதிவுசெய்த நாடு எது?**

*அ) சீனா*

***ஆ) இந்தியா ☑***

*இ) அமெரிக்கா*

*ஈ) இந்தோனேசியா*

❖ *ஐநா சிறார்கள் நிதியத்தின் (UNICEF) கருத்துப்படி, உலகெங்கும் புத்தாண்டு நாளன்று 371,500'க்கும் மேற்பட்ட குழந்தைகள் பிறந்துள்ளன. இந்தியாவில் மட்டும் 60,000 குழந்தைகள் பிறந்துள்ளன. இந்தியாவைத் தொடர்ந்து சீனா, நைஜீரியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் உள்ளன. 2021'ஆம் ஆண்டில், 84 ஆண்டுகள் என்ற சராசரி ஆயுட்காலத்துடன் 140 மில்லியன் குழந்தைகள் பிறக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*

---

**3.** **அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற, 'சரக்கு வர்த்தக மேம்பாடு இணையதளத்தை' தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

*அ) வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம்*

***ஆ) இரயில்வே அமைச்சகம் ☑***

*இ) வேளாண்மை & ஊரக வளர்ச்சி அமைச்சகம்*

*ஈ) MSME அமைச்சகம்*

❖ *இந்திய ரயில்வேயின் சரக்கு வர்த்தக மேம்பாட்டு இணையதளத்தை, இரயில்வே அமைச்சர் பியுஷ் கோயல் தொடக்கிவைத்தார். சரக்கு வழங்குநர்களுக்கான செலவுகளைக் குறைப்பது, வழங்குநர்களுக்கு ஆன்லைன் கண்காணிப்பு வசதியை வழங்குதல் மற்றும் சரக்குகள் போக்குவரத்து செயல்முறையை எளிதாக்குவது ஆகியவற்றை இந்தத்தளம் நோக்கமாகக் கொண்டுள்ளது.*

❖ *வணிகத்தை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்ட இத்தளத்தை, இந்திய இரயில்வேயின் வலைத்தளம் வழியாக அணுகலாம்.*

---

**4.** **NPC மற்றும் QCI உடன் இணைந்து வணிக அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட வெபினார் தொடரின் பெயர் என்ன?**

*அ) ஆத்மநிர்பார் இண்டஸ்ட்ரீஸ்*

***ஆ) உத்யோக் மந்தன் ☑***

*இ) MSME மந்தன்*

*ஈ) தன்-முன்னேற்றத்தொடர்*

❖ *இந்தியத் தொழிற்துறையின் தரத்தையும், உற்பத்தித்திறனையும் மேம்படுத்துவதற்காக, வணிகம் & தொழிற்துறை அமைச்சகத்தின் தொழில் வளர்ச்சி மற்றும் உள்நாட்டு வர்த்தகத்துறை, இந்திய தர கவுன்சில், தேசிய உற்பத்தித் திறன் கவுன்சில் மற்றும் தொழில்துறை அமைப்புகளுடன் இணைந்து 'உத்யோக் மந்தன்' என்ற தொடர் இணைய கருத்தரங்குகளை 2021 ஜனவரி 4 முதல் 2021 மார்ச் 2 வரை நடத்துகிறது.*

---

**5.** **கடந்த 2020ஆம் ஆண்டில், இந்தியாவின் காலநிலை குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ள அமைப்பு எது?**

***அ) இந்திய வானிலை ஆய்வு மையம் ☑***

*ஆ) புவி அறிவியல் அமைச்சகம்*

*இ) இந்திய வெப்பமண்டல ஆய்வுகள் நிறுவனம்*

*ஈ) DRDO*

❖ *இந்திய வானிலை ஆய்வுமையத்தின் காலநிலை ஆராய்ச்சி மற்றும் சேவைகள், 2020ஆம் ஆண்டில் இந்தியாவின் காலநிலை குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையின்படி, 2020ஆம் ஆண்டில் இந்தியா முழுவதும் ஆண்டு சராசரி நில மேற்பரப்பு காற்று வெப்பநிலை இயல்பைவிட அதிகமாக இருந்தது. கடந்த 2020'ஆம் ஆண்டும் எட்டாவது வெப்பமான ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

---

**6.** **"மலாலா யூசுப்சாய் உதவித்தொகை மசோதாவை" சமீபத்தில் நிறைவேற்றிய நாடு எது?**



*அ) இந்தியா*

*ஆ) பாகிஸ்தான்*

***இ) அமெரிக்கா ☑***

*ஈ) ஆப்கானிஸ்தான்*

❖ *அண்மையில், "மலாலா யூசுப்சாய் உதவித்தொகை மசோதா"வை அமெரிக்க காங்கிரஸ் நிறைவேற்றியது. இம்மசோதா பாகிஸ்தானின் உயர்கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ், பாகிஸ்தானிய பெண்டி -ர்க்கு 50% உதவித்தொகையை பன்னாட்டு மேம்பாட்டுக்கான US முகமையின்மூலம் வழங்குகிறது. இவ்வுதவித்தொகை 2020 முதல் 2022 வரை வழங்கப்படவுள்ளது.*

---

**7.** **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற ஓம்காரேஷ்வர் அணை அமைந்துள்ள மாநிலம் எது?**



*அ) மகாராஷ்டிரா*

***ஆ) மத்திய பிரதேசம் ☑***

*இ) குஜராத்*

*ஈ) ஜார்க்கண்ட்*

❖ *உலகின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய மின்னுற்பத்தித் திட்டமானது மத்திய பிரதேச மாநிலத்தின் நர்மதை ஆற்றில் உள்ள ஓம்காரேஷ்வர் அணையில் கட்டப்படவுள்ளது. 600 மெகாவாட் மின்னுற்பத்தித்திறன் கொண்ட இவ்வாலையை நிறுவுவதற்கு ₹3,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

- 2022-23'க்குள் இந்த ஆலையில் மின்னுற்பத்தி தொடங்கும். இந்த அணையில் சூரிய மின்னுற்பத்தித் தகடுகளை நிறுவுவது உள்ளிட்ட இத்திட்டத்திற்கு உலக வங்கியின் IFC மற்றும் பவர் கிரிட் நிதியுதவி வழங்கும்.

---

**8.**சமீப செய்திகளில் இடம்பெற்ற, "பாரதிய நிர்தேஷக் திரவ்யா' என்றால் என்ன?

அ) COVID-19 தடுப்பூசி கட்டமைப்பு

**ஆ) சான்றளிக்கப்பட்ட குறிப்பு பொருள் ☑**


இ) விண்வெளி தொழில்நுட்ப கட்டமைப்பு

ஈ) கிரிப்டோகரன்சி நுட்பம்

- அறிவியல் & தொழிற்துறை ஆராய்ச்சி கவுன்சில் – தேசிய இயற்பியல் ஆய்வகமானது (CSIR-NPL) இந்திய சான்றளிக்கப்பட்ட குறிப்பு பொருள் (CRM) தயாரிப்பதற்கான சர்வதேச நடைமுறையை பின்பற்றியுள்ளது. "பாரதியா நிர்தேஷக் திரவ்யா" என்று முத்திரை குத்தப்பட்ட CRM, பன்னாட்டு தரத்திற்கு இணையான தரத்தை உறுதிசெய்வதற்காக, ஆய்வகங்களின் சோதனை / அளவுத்திருத்தத்தை பின்பற்றுகிறது.

---

**9.**சமீபத்தில், கோட்டயத்தில், H5N8–ஏவியன் இன்புளுயன்ஸா உறுதிசெய்யப்பட்டது. கோட்டயம் அமைந்துள்ள மாநிலம் எது?



அ) தமிழ்நாடு

**ஆ) கேரளா ☑**

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) கர்நாடகா

- கேரள மாநிலம் கோட்டயம் நகரத்தில் உள்ள வாத்துகள், ஏவியன் இன்புளுயன்ஸா – H5N8 நோயால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த நோய் மேலும் பரவாமல் தடுக்க, மாநில மற்றும் மாவட்ட நிர்வாகம் போர்க்கால நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. சுமார் 70 நாட்கள் வயதுடைய 1,700 வாத்துகளின் இறப்புக்கு இந்த வைரஸ் காரணமாகியுள்ளது.

---

**10.** கீழ்க்காணும் எந்த இடத்திற்கான இந்தியாவின் நாற்பதாவது அறிவியல் பயணத்திற்கு, இந்திய எண்ணெய் நிறுவனம் எரிபொருள் வழங்கியுள்ளது?



**அ) அண்டார்டிகா ☑**

ஆ) ஆர்க்டிக் பெருங்கடல்

இ) எவரெஸ்ட் சிகரம்

ஈ) சென்டினல் தீவுகள்

- தேசிய துருவ மற்றும் பெருங்கடல் ஆராய்ச்சி மையத்தின் ஆராய்ச்சி–யாளர்கள் அண்டார்டிகாவிற்கு பயணம் மேற்கொள்ளவுள்ளனர். இது நாற்பதாவது இந்திய அறிவியல் பயணமாகும். இந்தப்பயணத்தி–ற்கான எரிபொருள் இந்தியன் எண்ணெய் நிறுவனத்தால் வழங்கப்–படுகிறது. கோவாவின் மர்மகோவா துறைமுகத்திலிருந்து 43 உறுப்பினர்களுடன் இந்தப் பயணம் தொடங்கப்படவுள்ளது.
- ஜெட் A1 எரிபொருள், உயவு எண்ணெய் மற்றும் கடலில் பயன்படுத்தக்கூடிய வளி எண்ணெய் ஆகியவற்றை இந்தியன் எண்ணெய் நிறுவனம் வழங்கியுள்ளது.

---

**1.** வடகிழக்கு இந்தியாவின் முதல் கேலோ இந்தியா விளையாட்டுப்பள்ளி அமைந்துள்ள நகரம் எது?

***அ) ஷில்லாங்*** ☑

*ஆ) இம்பால்*

*இ) கௌகாத்தி*

*ஈ) கேங்டாக்*

❖ *கேலோ இந்தியா விளையாட்டுப் பள்ளியாக அறிவிக்கப்பட்டுள்ள ஷில்லாங்கின் அஸ்ஸாம் ரைபிள்ஸ் பள்ளியை மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு தொடங்கிவைத்தார். வடகிழக்கு மாகாணங்களின் முதல் பள்ளியாக அஸ்ஸாம் ரைபிள்ஸ் பள்ளி அமைந்துள்ளது. மொத்தம் ஒன்பது விளையாட்டுப் பள்ளிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

❖ *கல்வியுடன் விளையாட்டை ஒருங்கிணைத்து, அதன் வாயிலாக நாட்டில் விளையாட்டுகளை மேம்படுத்தி வீரர்களின் ஒட்டுமொத்த திறனை வளர்ப்பதே கேலோ இந்தியா விளையாட்டுப் பள்ளிகளின் முக்கிய குறிக்கோளாகும்.*

---

**2.** தேசிய அளவியல் மாநாடு – 2021'ஐ ஏற்பாடு செய்துள்ள ஆராய்ச்சி அமைப்பு எது?

***அ) CSIR*** ☑

*ஆ) DRDO*

*இ) ICMR*

*ஈ) ICAR*

❖ *தனது 75ஆவது ஆண்டுக்குள் நுழையும், புது தில்லியில் உள்ள அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மையம் – தேசிய இயற்பியல் ஆய்வகம், தேசிய அளவியல் மாநாடு 2021'ஐ ஏற்பாடு செய்தது. "நாட்டின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு அளவியல்" என்பது இம்மாநாட்டின் கருப்பொருளாகும். தேசிய அளவியல் மாநாட்டில், பிரதமர் மோடி காணொலிக்காட்சிமூலம் தொடக்க உரையாற்றினார்.*

---

**3.** 'தைப்பூசம்' என்பது கீழ்க்காணும் எந்த இந்திய மாநிலத்தில் கொண்டாடப்படும் ஒரு விழாவாகும்?

***அ) தமிழ்நாடு*** ☑



*ஆ) கேரளம்*

*இ) நாகாலாந்து*

*ஈ) அருணாச்சல பிரதேசம்*

❖ *'தமிழ்க்கடவுள்' முருக வழிபாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்ட 'தைப் பூசம்' என்ற திருவிழாவை உலகம் முழுமைக்கும் பரவி வாழும் தமிழ் மக்கள் கொண்டாடுகிறார்கள். இந்த நாளை பொது விடுமுறையாக அறிவிக்க தமிழர்கள் கோரியதை அடுத்து, அதற்கான உத்தரவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் க.பழனிசாமி வெளியிட்டார்.*

❖ *இந்த விழா, கேரளாவின் சில பகுதிகளிலும், இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, மொரீஷியஸ் மற்றும் இந்தோனேசியா போன்ற பிற நாடுகளிலும் வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது.*

---

**4.** அண்மையில் தொடங்கப்பட்ட, "தேசிய அணு கால அளவின்" துல்லியம் என்ன?

*அ) 2.7 நானோ வினாடிகள்*

***ஆ) 2.8 நானோ வினாடிகள்*** ☑

*இ) 2.1 நானோ வினாடிகள்*

*ஈ) 2.0 நானோ வினாடிகள்*

❖ *தேசிய அளவியல் மாநாட்டின் தொடக்க விழாவின்போது பிரதமர் மோடி, 'தேசிய அணு கால அளவை' நாட்டுக்கு அர்ப்பணித்தார். இந்த நடவடிக்கையின்மூலம், இந்திய திட்ட நேரமானது பன்னாட்டு திட்ட நேரத்துடன் ஒத்தமைக்கப்படுகிறது. 2.8 நானோ நொடிகள் என்னும் துல்லியத்துடன் இந்திய நிலையான நேரத்தை தேசிய அணு கால அளவு வழங்கும். தேசிய சுற்றுச்சூழல் தரநிர்ணய ஆய்வகத்துக்கான அடிக்கல்லையும் பிரதமர் நாட்டினார்.*

---

**5.** அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, கொச்சி – மங்களூரு இயற்கை எரிவாயு குழாய் திட்டத்தை அமைக்கின்ற பொதுத் துறை நிறுவனம் எது?

*அ) ONGC*

***ஆ) GAIL*** ☑

*இ) IOCL*

*ஈ) CIL*

❖ *கேரளாவின் கொச்சிக்கும் கர்நாடகாவின் மங்களூருக்கும் இடையில் 450 கிமீ நீளமுள்ள இயற்கை எரிவாயு குழாய்பாதை, GAIL (இந்தியா) நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ளது. ₹3000 கோடி மதிப்பிலான திட்டத்தை இந்திய பிரதமர் வணிக நடவடிக்கைகளுக்காக திறந்து வைத்துள்ளார். இதன்மூலம், நாள் ஒன்றுக்கு 12 மில்லியன் மெட்ரிக் ஸ்டாண்டர்டு கியூபிக் மீட்டர் இயற்கை எரிவாயு கடந்துசெல்லும்.*

---

**6.** உலக பிரெய்லி நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?




*அ) ஜனவரி 2*

*ஆ) ஜனவரி 3*

***இ) ஜனவரி 4*** ☑

*ஈ) ஜனவரி 6*

❖ *உலக பிரெய்லி நாளானது 2018 டிசம்பரில் ஐநா பொதுச் சபையால் நிறுவப்பட்ட பின்னர், ஆண்டுதோறும் ஜன.4 அன்று அனுசரிக்கப்படு –கிறது. பார்வைக்குறைபாடுள்ளவர்கள் பயன்படுத்தும் வாசிப்பு மற்றும் எழுதுதலுக்கான முறையை கண்டுபிடித்த லூயிஸ் பிரெய்லியின் பிறந்தநாளை இந்தத்தேதி குறிக்கிறது. இந்த ஆண்டு, உலகளாவிய தொடுதல்–அடிப்படையிலான தகவல் தொடர்பு அமைப்பின் முக்கியத்துவத்தை ஐ.நா சிறப்பித்துக்காட்டுகிறது.*

---

**7.** எக்கருவியை நிறுவுவதற்காக PM கேர்ஸ் நிதிய அறக்கட்டளை ₹120 கோடி நிதியை ஒதுக்கியுள்ளது?

***அ) ஆக்ஸிஜன் உற்பத்தி ஆலைகள்*** ☑



*ஆ) வளி சுத்திகரிப்பான்கள்*

*இ) RO–நீர் சுத்திகரிப்பான்கள்*

ஈ) ஷிப்ட் மருத்துவமனைகளை உருவாக்குங்கள்

❖ பிரதமரின் அவசரகால மக்கள் உதவி மற்றும் நிவாரண (PM CARES) நிதிய அறக்கட்டளை, நாடு முழுவதுமுள்ள பொது நலவாழ்வு மையங்க–ளில் 162 பிரத்யேக அழுத்த விசை உறிஞ்சுதல் (PSA) பிராணவாயு தயாரிப்பு வசதிகளை நிறுவ ₹201.58 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

❖ மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின்கீழ் இயங்கும் தன்னாட்சிபெற்ற அமைப்பான மத்திய மருத்துவ விநியோக விற்பனை கூடத்தால் கொள்முதல் நடத்தப்படும். இந்த ஆலைகள் மருத்துவ தரத்திலான ஆக்ஸிஜனை உற்பத்தி செய்யும்.

**8.**பின்வரும் எவ்வமைப்பு சமீபத்தில் தனது அனைத்து பெண்கள் அணியையும் எதிர்பாரா பணிகளுக்காக அனுப்பியது?

அ) மத்திய ஆயுத காவல் படை

ஆ) இந்தோ–திபெத்திய எல்லைக் காவல்படை

**இ) தேசிய பேரிடர் மீட்புப் படை ☑**

ஈ) மத்திய தொழிலக பாதுகாப்புப்படை

❖ கங்கையாற்றின் கரையிலுள்ள உத்தர பிரதேசத்தின் கர் முக்தேஷ்வர் நகரத்தில், எதிர்பாரா பணிகளுக்காக தேசிய பேரிடர் மீட்புப் படையின் அனைத்து பெண் குழுவும் அண்மையில் ஈடுபடுத்தப்பட்டது.

❖ தொழிற்முறை பயிற்சிபெற்ற இந்த அனைத்து பெண்கள் குழு, மீட்புப் படகுகள் மற்றும் அது தொடர்புடைய உபகரணங்களை கையாண்டது. நூற்றுக்கும் மேற்பட்ட பெண் போராளிகளை தேசிய பேரிடர் மீட்புப் படை தனது அணியில் சேர்த்துள்ளது.

**9.**அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'ஸ்வஸ்த்வாயு' என்ற உடலில் செலுத்த தேவையில்லாத செயற்கை சுவாச வழங்கியை உருவாக்கியுள்ள அமைப்பு எது?

அ) DRDO

**ஆ) CSIR ☑**

இ) ISRO

ஈ) BARC




❖ அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சிக் குழு – தேசிய வானூர்தி ஆய்வகத்தை (CSIR–NIL) சேர்ந்த விஞ்ஞானிகள், CSIR–IGIB மருத்துவப் பணியாளர்களுடன் இணைந்து உருவாக்கியுள்ள 'சுவஸ்த் வாயு' என்னும் உடலில் செலுத்த வேண்டிய தேவையில்லாத சுவாசக் கருவிக்கு அரசின் ஒப்புதல் கிடைத்துள்ளது.

❖ மத்திய சுகாதார & குடும்பநல அமைச்சின் சுகாதார சேவைகளுக்கான தலைமை இயக்குநர் அமைத்த நிபுணர் குழு இந்தச் சுவாசக் கருவியை பரிசோதித்து, இதை 35% வரை பிராணவாயு உதவி தேவைப்படும் COVID நோயாளிகளுக்கு பயன்படுத்தலாம் என்று சான்றளித்தது.

**10.**அண்மையில் தொடங்கப்பட்ட 'டாய்கத்தான்' முன்னெடுப்புக்கு எத்தனை அமைச்சகங்கள் கூட்டு சேர்ந்துள்ளன?

அ) 5 **ஆ) 6 ☑**

இ) 7 ஈ) 8



❖ உள்நாட்டு விளையாட்டுப் பொருட்கள் தொழிற்துறையை மேம்படுத்–துவதற்கும் இறக்குமதியைக் குறைப்பதற்குமாக இந்திய அரசு, "டாய் கத்தான்" என்ற புதிய முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.

❖ கல்வி, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு, ஜவுளி, வர்த்தகம் மற்றும் தொழிற்துறை, MSME, I&B உள்ளிட்ட ஆறு அமைச்சகங்கள் மற்றும் AICTE ஆகியவை இம்முன்னெடுப்புக்கு ஒத்துழைக்கின்றன. உள்நாட்டு விளையாட்டுப் பொருட்களை உருவாக்க மாணவர்கள், ஆசிரியர்கள், வடிவமைப்பு வல்லுநர்கள் மற்றும் துளிர்நிறுவனங்கள் இணைந்து செயல்படுவார்கள்.

**1.** 'இந்தியாவில் நீண்ட முதுமை குறித்த ஆய்வறிக்கை'யை வெளியிட்ட மத்திய அமைச்சகம் எது?



*அ) புவி அறிவியல் அமைச்சகம்*

***ஆ) சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் ☑***

*இ) வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்*

*ஈ) MSME அமைச்சகம்*

❖ *இந்தியாவில் நீண்ட முதுமை பற்றிய ஆய்வறிக்கை (LASI), அலை–1'ஐ மத்திய சுகாதாரம் & குடும்பநல அமைச்சர் ஹர்ஷ் வர்தன் வெளியிட்டார். மக்கள் முதுமையடைவதால் நாட்டில் ஏற்படும் சுகாதார, பொருளாதார, சமூக மாற்றங்கள், விளைவுகள் குறித்த முழு அளவிலான, அறிவியல் பூர்வமான தேசிய ஆய்வே LASI ஆகும். முதியோர்களுக்கான தேசிய மற்றும் மாநில அளவிலான கொள்கைகளை வகுக்க இவ்வறிக்கை உதவும்.*

---

**2.** இந்தியாவில் மிகவும் அருகிவரும் உயிரினங்களுக்கான மீட்பு திட்டத்தின்கீழ், எத்தனை வனவுயிரினங்கள் உள்ளன?



*அ) 12*

*ஆ) 16*

***இ) 22 ☑***

*ஈ) 35*

❖ *தேசிய வனவுயிரி வாரியத்தின் நிலைக்குழுவானது அண்மையில் நாட்டில் மனித–வனவுயிரி மோதலை நிர்வகிப்பதற்கான ஆலோசனைக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இராஜஸ்தான் மற்றும் குஜராத் மாநிலத்தின் சில பகுதிகளில் காணப்படும், 'கராகல்' என்ற காட்டுப்பூனையை மிகவும் அருகிவரும் உயிரினங்களின் பட்டியலில் சேர்க்கவும் அக்குழு ஒப்புதல் அளித்தது.*

❖ *தற்போது, மிகவும் அருகிவரும் உயிரினங்களுக்கான மீட்பு திட்டத்தின்கீழ் 22 வனவுயிரினங்கள் உள்ளன.*

---

**3.** அண்மைச் செய்திகளின் இடம்பெற்ற, அங்கமாலி–அழுதா சபரி இரயில் திட்டமானது எந்த மாநிலத்தில் அமையவுள்ளது?

*அ) தமிழ்நாடு*

***ஆ) கேரளம் ☑***

*இ) கர்நாடகா*

*ஈ) ஆந்திர பிரதேசம்*

❖ *அங்கமாலி–அழுதா சபரி இரயில் திட்டத்திற்கு கேரள உட்கட்டமைப்பு முதலீட்டு நிதி வாரியத்தின் நிதியைப் பயன்படுத்த நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இந்தத் திட்டத்தின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பை இரயில்வே மேற்கொள்ளும்; அதே வேளையில், நிலையத்தின் வளர்ச்சி, பொதுத்துறை–தனியார் கூட்டாண்மையின் கீழ் இருக்கும். செலவினங்களைக்கழித்தபின்னர், வருமானம், கேரள மாநில அரசுக்கும் இரயில்வே துறைக்கும் இடையில் பகிரப்படும்.*

---

**4.** எந்தவொரு கடவுளரின் பெயரையும் பயன்படுத்தி மேற்கொள்–ளப்படும் எந்தவொரு விளம்பரமும் சட்டத்துக்குப்புறம்பானது என அண்மையில் தீர்ப்பளித்த உயர்நீதிமன்றம் எது?

*அ) மெட்ராஸ் உயர்நீதிமன்றம்*

***ஆ) பம்பாய் உயர்நீதிமன்றம் ☑***

*இ) குஜராத் உயர்நீதிமன்றம்*

*ஈ) கௌகாத்தி உயர்நீதிமன்றம்*

❖ *பம்பாய் உயர்நீதிமன்றத்தின் ஔரங்காபாத் அமர்வு, எந்தவொரு கடவுளரின் பெயரையும் பயன்படுத்தி எந்தவொரு பொருளையும் விளம்பரம் செய்வது மற்றும் அப்பொருளில் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகள் இருப்பதாகக் கூறுவது சட்டத்துக்குப் புறம்பானது என்று அறிவித்துள்ளது.*

❖ *இந்த நடைமுறை, மகாராஷ்டிரா நரபலி தடுப்பு மற்றும் ஒழிப்பு மற்றும் பிற மனிதாபிமானமற்ற, தீய மற்றும் அகோரி நடைமுறைகள் மற்றும் பில்லி, சூனியம், ஏவல் தடுப்புச் சட்டத்தின்கீழ் வருகிறது. அனுமன் சாலிசா யந்திரம், இலக்ஷ்மி யந்திரம், மேரு மோதிரம் போன்ற பொருட்களின் விற்பனையை ஊக்குவிக்கும் விளம்பரங்களைத் தடுப்பதற்காக அம்மனு தாக்கல் செய்யப்பட்டது.*

---

**5.** தேசிய பசு அறிவியல் தேர்வை நடத்தும் நிறுவனம் எது?



*அ) PeTA*

***ஆ) தேசிய காமதேனு ஆயோக் ☑***

*இ) தேசிய விலங்கு நல நிறுவனம்*

*ஈ) புளூ கிராஸ்*

❖ *நாட்டுப்பசுக்கள்குறித்து இளம் மாணாக்கர்களிடையேயும், மக்களி–டையேயும் விழிப்புணர்வை அதிகரிக்கும் வகையில், பசு அறிவியல் குறித்த நூல்களை அனைவருக்கும் கிடைக்க செய்யவும், "காமதேனு கௌ–விஞ்ஞான் பிரச்சார்–பிரசார் தேர்வு" என்னும் தேர்வை நடத்தவும் தேசிய காமதேனு ஆயோக் முன்வந்துள்ளது.*

❖ *இத்தேர்வு, ஆண்டுதோறும் நாடு முழுவதும் நடைபெறுகிறது. தேசிய காமதேனு ஆயோக் என்பது மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சகத்தின்கீழ் பசுக்கள் நலனுக்காக அமைக்கப்பட்ட ஓர் அரசு அமைப்பாகும்.*

---

**6.** DRDO ஆனது பயோடைஜெஸ்டர் MK–II தொழில்நுட்பத்தை பின்வரும் எந்த மாநிலத்தின் மெட்ரோ இரயில் நெட்வொர்க்கில் நிறுவவுள்ளது?

*அ) தமிழ்நாடு*

***ஆ) மகாராஷ்டிரா ☑***

*இ) கர்நாடகா*

*ஈ) ஆந்திர பிரதேசம்*

❖ *இந்திய அரசின் முன்னணி ஆராய்ச்சி முகமையான பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனமும் (DRDO), இந்திய, மகாராஷ்டிர அரசுகளின் கூட்டு நிறுவனமான மகாராஷ்டிரா மெட்ரோ இரயில் நிறுவனமும் (மகா–மெட்ரோ) தண்ணீர் சேமிப்பிலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பிலும் இணைந்து பணிபுரிந்து வருகின்றன.*


❖ *மெட்ரோ இரயில் மையங்களில் மனிதக்கழிவுகளை கையாள்வதற்காக மேம்படுத்தப்பட்ட பயோ டைஜெஸ்டர் (MK–II) தொழில்நுட்பத்தை செயல்படுத்துவதற்கான தொழில்நுட்ப ஆதரவை DRDO வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமானது, பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம், மகாராஷ்டிரா மெட்ரோ இரயில் நிறுவனம் ஆகியவற்றுக்கிடையே கையெழுத்தானது.*

---

**7.ஆறு ஆண்டுகளை நிறைவுசெய்துள்ள உஜாலா மற்றும் SLNP திட்டங்கள், எந்த அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகின்றன?**

*அ) உழவு மற்றும் உழவர்கள் நலன் அமைச்சகம்*

***ஆ) எரிசக்தி அமைச்சகம் ☑***



*இ) ஊரக வளர்ச்சித்துறை அமைச்சகம்*

*ஈ) தகவல் தொடர்பு அமைச்சகம்*

- *அனைவருக்கும் LED விளக்குகள் வழங்கும் திட்டம் (UJALA), தேசிய தெருவிளக்கு திட்டம் (SLNP) ஆகியவற்றை பிரதமர் நரேந்திர மோடி கடந்த 2015 ஜன.5 அன்று தொடங்கி வைத்தார். இந்தத் திட்டங்கள் 6 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளன. இந்த இரண்டு திட்டங்களையும், எரிசக்தி அமைச்சகத்தின் கீழுள்ள பொதுத்துறை நிறுவனங்களின் கூட்டு முயற்சியில், எரிசக்தி திறன் சேவைகள் நிறுவனம் (EESL) அமல்படுத்தியது.*
- *உஜாலா திட்டத்தின்கீழ், நாடு முழுவதும் 36.69 கோடி LED பல்புகளை EESL நிறுவனம் வழங்கியது. தேசிய தெருவிளக்கு திட்டம்மூலம் நாடு முழுவதும், 1.14 கோடி LED தெருவிளக்குகள் பொருத்தப்பட்டன.*

---

**8.சிறு நிதி வங்கியாக மாற்றப்பட்ட இந்தியாவின் முதல் நகர்ப்புற கூட்டுறவு வங்கி எது?**

*அ) அகமதாபாத் வணிகர்கள் கூட்டுறவு வங்கி*

***ஆ) சிவாலிக் வணிகர்கள் கூட்டுறவு வங்கி ☑***

*இ) கோவா நகர கூட்டுறவு வங்கி*

*ஈ) ஆந்திர பிரதேச மகேஷ் நகர கூட்டுறவு வங்கி*

- *உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த சிவாலிக் வணிகர்கள் கூட்டுறவு வங்கி இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து ஒரு சிறு நிதி வங்கியாக உரிமம் பெற்றுள்ளது. இதன்மூலம், தானாக முன்வந்து மாறும் திட்டத்தின்கீழ், ஒரு சிறு நிதி வங்கியாக மாறிய நாட்டின் முதல் நகர கூட்டுறவு வங்கி ஆனது சிவாலிக் கூட்டுறவு வங்கி. இவ்வங்கி, 2021 ஏப்ரல் வாக்கில் தனது வணிகத்தைத் தொடங்கவுள்ளது.*

---

**9.நிதியமைச்சகம் இயக்கிய 4 மக்கள் மைய சீர்திருத்தங்களில் மூன்றனை முதலில் முடித்த இரண்டு மாநிலங்கள் எவை?**

*அ) தமிழ்நாடு & கேரளா*

***ஆ) மத்திய பிரதேசம் & மகாராஷ்டிரா ☑***

*இ) மத்திய பிரதேசம் & ஆந்திர பிரதேசம்*

*ஈ) கேரளா & கர்நாடகா*

- *மத்திய நிதியமைச்சகத்தின் செலவினத்துறை நிர்ணயித்த நான்கு சீர்திருத்தங்களில், ஒரே நாடு–ஒரே குடும்ப அட்டை, தொழில் செய்வதை எளிதாக்குதல், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு ஆகிய 3 மக்கள் மைய சீர்திருத்தங்களை ம.பியும், ஆந்திர பிரதேசமும் நிறைவேற்றியுள்ளன.*
- *இதற்காக இந்த இரு மாநிலங்களுக்கும், புதிதாக தொடங்கப்பட்ட "மாநிலங்களின் மூலதன செலவுக்கான சிறப்பு நிதியுதவி" திட்டத்தின் கீழ் ₹1004 கோடி நிதி வழங்க நிதியமைச்சகத்தின் செலவினத்துறை முடிவு செய்துள்ளது.*

---

**10.உழவர்களின் வருவாயை அதிகரிப்பதற்காக, 'கிசான் கல்யாண் திட்டத்தை தொடங்கியுள்ள மாநிலம் எது?**

***அ) உத்தர பிரதேசம் ☑***

*ஆ) மத்திய பிரதேசம்*

*இ) ஹிமாச்சல பிரதேசம்*

*ஈ) ஆந்திர பிரதேசம்*

- *உழவர்களின் வருவாயை அதிகரிப்பதற்காக உத்தர பிரதேச மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் கிசான் கல்யாண் திட்டத்தை தொடங்கினார். இந்தத் திட்டம், வரும் 2022'க்குள் உத்தர பிரதேச மாநில உழவர்களின் வருவாயை இரட்டிப்பாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. மாநிலம் முழுவதும் 825 வட்டங்களில் உழவர்களு–க்கான மேம்பாட்டுத் திட்டங்கள் தொடங்கப்படும் என்பதையும் அம்மாநில முதல்வர் உறுதிபட தெரிவித்தார்.*

---

**1.பின்வரும் எந்த மாநிலம் / யூனியன் பிரதேசத்தில், பறவைக் காய்ச்சல் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக, இந்திய அரசு ஒரு கட்டுப்பாட்டு அறையை அமைத்துள்ளது?**

***அ) தில்லி ☑***

*ஆ) கர்நாடகா*

*இ) இராஜஸ்தான்*

*ஈ) தெலங்கானா*



- *நாட்டின் சில மாநிலங்களில் காகங்கள் & வெளிநாட்டுப்பறவைகளிடம், பறவைக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளதால், இவற்றை கட்டுப்படுத்துவதற்கான செயல்திட்டத்தை அமல்படுத்தவும், மாநில அரசுகளுடன் இணைந்து செயல்படவும் தில்லியில் கட்டுப்பாட்டு உதவி மையத்தை மத்திய கால்நடை பராமரிப்பு & பால்வளத்துறை ஏற்படுத்தியுள்ளது.*
- *இந்தக் கட்டுப்பாட்டு அறை, நிலைமையை கண்காணிப்பதும், மாநில அதிகாரிகள் மேற்கொண்ட தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தினசரி அடிப்படையில் பதிவு செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.*

---

**2.சமீபத்தில் 'திறன்மிகு தொழிலாளர்' குறித்த எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது?**

***அ) ஜப்பான் ☑***

*ஆ) அமெரிக்கா*

*இ) தென் கொரியா*

*ஈ) ஆஸ்திரேலியா*



- *"குறிப்பிட்ட திறன்மிகு தொழிலாளர்" தொடர்பான அமைப்பு முறையை உருவாக்குவதற்கான அடிப்படை கட்டமைப்பிற்கான இந்தியா–ஜப்பான் ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.*
- *செவிலியர் பணி, கட்டிட துப்புரவுப் பணி, சரக்கு கையாளும் தொழில், உள்ளிட்ட பதினான்கு தொழில் துறைகளில், தகுதியுள்ள, திறன்மிகு இந்திய தொழிலாளர்கள், ஜப்பான் நாட்டில் பணிபுரிவதற்கு இந்த உடன்படிக்கை வழிவகுக்கும். ஜப்பானில் பணிபுரியப்போகும் இந்திய தொழிலாளர்களுக்கு, "குறிப்பிட்ட திறன்மிகு பணியாளர்" என்ற உறைவிட அந்தஸ்தை ஜப்பான் அரசு வழங்கவுள்ளது.*

---

**3. NSO'இன் முதலாவது முன்கூட்டிய மதிப்பீடுகளின்படி, 2020–21 நிதியாண்டில், இந்தியாவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி / சுருக்கம் என்னவாக இருக்கும்?**

*அ) + 3.2%*

*ஆ) + 1.2%*

*இ) – 6.4%*

***ஈ) – 7.7% ☑***




- *மத்திய புள்ளிவிவர மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் தேசிய புள்ளியியல் அலுவலகம், 2020–2021 நிதியாண்டிற்கான ஆண்டு வருமானத்தின் முன்கூட்டிய உத்தேச மதிப்பீடுகளை வெளியிட்டது. 2020–2021ஆம் ஆண்டில் GDP வளர்ச்சி –7.7 சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 2019–2020ஆம் ஆண்டில் இது 4.2 சதவீதமாக இருந்தது.*
- *நடப்பு நிதியாண்டில் வேளாண்மையைத்தவிர அனைத்து துறைகளிலும் சுருக்கம் ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. உற்பத்தித் துறையில் சுருக்கம் 9.4% ஆக இருக்கக்கூடும். வேளாண் துறை கடந்த ஆண்டை ஒப்பிடும்போது 3.4% வளர்ச்சியடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*

---

**4. NFHS–5'இன் பாதகங்களை கண்டு ஆராய்வதற்காக சுகாதார அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் யார்?**

*அ) ஹர்ஷ் வர்தன்*

***ஆ) பிரீத்தி பந்த் ☑***

*இ) இராதாகிருஷ்ணன்*

*ஈ) அபிநவ் குப்தா*

Ministry of Health & Family Welfare
Government of India

- *தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு–5'இன் பாதகங்களை கண்டறிவது குறித்து ஆய்வு செய்ய தொழில்நுட்ப நிபுணர் குழுவை சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம் அமைத்துள்ளது. இணைச் செயலாளர் பிரீத்தி பந்த் தலைமையிலான இந்தக் குழு, ஊட்டச்சத்து குறைபாடு, குன்றல் நோய், குருதிச்சோகை மற்றும் C பிரிவு ஆகியவற்றுடன் தொடர்புடைய காரணிகளை மேம்படுத்த கொள்கை தலையீடுகளையும் பரிந்துரைக்கும்.*
- *இந்தக் குழுவில் மருத்துவம் மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்கள் மற்றும் மாநில திட்ட அதிகாரிகள் உள்ளனர்.*

---

**5.இந்திய–அமெரிக்க மருத்துவர் இராஜ், பின்வரும் எந்த நாட்டின் இராணுவத்தின் முதல் தலைமைத் தகவல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்?**

*அ) சிங்கப்பூர்*

***ஆ) அமெரிக்கா ☑***

*இ) ஜப்பான்*

*ஈ) பிரிட்டன்*



- *அமெரிக்க இராணுவத்தின் முதல் தலைமைத் தகவல் அதிகாரியாக இந்திய–அமெரிக்கர் Dr இராஜ் தேர்வு செய்யப்பட்டுள்ளார். 2020 ஜூலையில் உருவாக்கப்பட்ட இப்பதவி 3 நட்சத்திர ஜெனரலுக்கு சமமானதாகும். அமெரிக்க இராணுவத்தின் தகவல் தொழில்நுட்ப நடவடிக்கைகளுக்காக, 16 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தை அவர் மேற்பார்வையிடுவார்.*
- *அமெரிக்க இராணுவத்தை நவீனமயமாக்குவதற்கான கொள்கை மற்றும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் அவர் வழிநடத்துவார். அவர் இராணுவ செயலாளரின் முதன்மை ஆலோசகராக பணியாற்றுகிறார்.*

---

**6.வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்ட, 'Fatah–1' என்பது பின்வரும் எந்நாட்டின் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஏவுகணையாகும்?**

*அ) ஐக்கிய அரபு அமீரகம்*

*ஆ) இஸ்ரேல்*

***இ) பாகிஸ்தான் ☑***

*ஈ) ஆப்கானிஸ்தான்*



- *உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட வழிசெலுத்தப்பட்ட பல்–ஏவு ஏவுகணை முறைமையை பாகிஸ்தான் வெற்றிகரமாக*

*சோதித்துள்ளது. 'பத்தா–1' என்று பெயரிடப்பட்ட இந்த அமைப்பு, 140 கிமீ தூர வரம்பில் உள்ள இலக்குகளை தாக்கும் திறன் கொண்டது.*

- *வழிசெலுத்தப்பட்ட இப்பல்–ஏவு ஏவுகணை முறைமை, வழக்கமான ஏவுகணைகளைவிட மிகத்துல்லியமாக தாக்கும்.*

---

**7.லடாக்கின் நிலத்தையும் கலாச்சாரத்தையும் பாதுகாப்பதற்கான குழுவின் தலைவர் யார்?**



*அ) அமித் ஷா*

***ஆ) G கிஷன் ரெட்டி ☑***

*இ) ராவ் இந்திரஜித் சிங்*

*ஈ) ஜித்தேந்திர சிங்*

- *லடாக்கின் மொழி, கலாச்சாரம் மற்றும் நிலத்தைப் பாதுகாப்பதற்காக ஒரு குழுவை அமைக்க இந்திய அரசு முடிவுசெய்துள்ளது. இக்குழுவுக்கு உள்துறை இணையமைச்சர் G கிஷன் ரெட்டி தலைமைதாங்குவார். இதில் லடாக், லடாக் தன்னாட்சி மலை மேம்பாட்டு கவுன்சில், மத்திய அரசு மற்றும் லடாக் நிர்வாகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் அடங்குவர்.*

---

**8.உலக உணவுவிலைக்குறியீட்டை வெளியிடுகின்ற அமைப்பு எது?**

*அ) UNICEF*

***ஆ) FAO ☑***

*இ) WWF*

*ஈ) WFP*

- *ஐநா உணவு நிறுவனமான உணவு மற்றும் உழவு அமைப்பு, உலக உணவுவிலைக்குறியீட்டை வெளியிடுகிறது. அண்மைய பதிப்பின்படி, கடந்த நவம்பர் மாதத்தில் 105.2 ஆக இருந்த உலக உணவு விலைகள் தொடர்ச்சியாக ஏழாவது மாதமாக தற்போது டிசம்பர் மாதத்தில் 107.5 புள்ளிகளாக உயர்ந்துள்ளன. சர்க்கரையைத் தவிர்த்து உணவுக் குறியீட்டின் அனைத்து முக்கிய வகைகளும் உயர்ந்துள்ளன.*

---

**9.உலகின் முதல் இரட்டையடுக்கு மிகநீண்ட பெட்டக இரயிலை அறிமுகப்படுத்தியுள்ள நாடு எது?**



*அ) ஜப்பான்*

*ஆ) சீனா*

***இ) இந்தியா ☑***

*ஈ) இரஷ்யா*

- *சமீபத்தில் இந்தியா உலகின் முதல் இரட்டையடுக்கு மிகநீண்ட தூர பெட்டக இரயிலை அறிமுகப்படுத்தியது. மேற்கு பிரத்யேக சரக்குப் பாதையின் 306 கிமீ தூர ரெவாரி மதார் பிரிவையும் பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார். இப்பிரிவு தொடங்கப்படுவதன்மூலம், மேற்கு மற்றும் கிழக்கு சரக்குப் பாதைகள் இடையே தடையற்ற இணைப்பு ஏற்படும்.*

---

**10.சமீபத்தில், இந்திய ரிசர்வ் வங்கியால் (RBI) அமைக்கப்பட்ட கல்வி ஆலோசனைக்குழுவின் தலைவர் யார்?**



*அ) B P கனுங்கோ*

*ஆ) R காந்தி*

***இ) N S விஸ்வநாதன் ☑***

*ஈ) உர்ஜித் படேல்*

- *ரிசர்வ் வங்கியின் மேற்பார்வையாளர்கள் கல்லூரியின் முழுநேர இயக்குநருக்கு ஆலோசனை வழங்குவதற்காக இந்திய ரிசர்வ் வங்கி ஒரு கல்வி ஆலோசனைக் குழுவை அமைத்துள்ளது. இக்குழுவின் தலைவராக ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் N S விஸ்வநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.*
- *இந்த நடவடிக்கை அதன் ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை ஊழியர்களிடையே மேற்பார்வையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.*

---

**1.**பிரபல இராசாங்க அமைச்சரும் – துறவியுமான 'பசவேஸ்வரா' சார்ந்த மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?



*அ) தில்லி*

***ஆ) கர்நாடகா ☑***

*இ) மகாராஷ்டிரா*

*ஈ) தெலங்கானா*

❖ *12ஆம் நூற்றாண்டைய கல்யாணி சாளுக்கிய வம்சத்தின் ஆட்சிக் காலத்தில், அமைச்சரும் லிங்காயத் துறவியுமாக இருந்தவர் 'பசவேஸ்வரர்' என்னும் 'பசவண்ணா'. அவர் கர்நாடகாவில் உள்ள லிங்காயத் சமூகத்தின் பிரபல ஆளுமையாக கருதப்படுகிறார். சமீபத்தில், கர்நாடக முதல்வர் B S எடியூரப்பா, பசவகல்யாணியில் ₹500 கோடி மதிப்பீட்டில், 'புதிய அனுபவ மண்டபம்' நிறுவுவதற்காக அடிக்கல் நாட்டினார். இது அவரின் வாழ்ந்த இடமாக கருதப்படுகிறது.*

---

**2.**புதிய 'பள்ளிப்பை கொள்கை'யை அறிமுகப்படுத்திய மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?



***அ) தில்லி ☑***

*ஆ) கர்நாடகா*

*இ) மகாராஷ்டிரா*

*ஈ) தெலங்கானா*

❖ *தேசிய கல்விக்கொள்கைக்கு இணங்க, மாணவர்களின் பள்ளிப்பைகளின் எடையை குறைக்க தில்லி அரசு ஒரு புதிய "பள்ளிப்பை கொள்கையை" அறிமுகப்படுத்தியுள்ளது. இக்கொள்கையை விரைவில் செயல்படுத்துமாறு தேசிய தலைநகர பிராந்தியத்தில் உள்ள பள்ளிகளுக்கு தில்லி அரசு அறிவுறுத்தியுள்ளது. இக்கொள்கையின்படி, 1–10 வகுப்புகளுக்கு இடையில் உள்ள மாணவர்களுக்கான பள்ளிப் பைகளின் எடை அவர்களின் உடல் எடையில் 10 சதவீதத்திற்கு மேல் இருக்கக்கூடாது.*

---

**3.**அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'மெலிபோனிகல்ச்சர்' என்றால் என்ன?



***அ) கொடுக்கற்ற தேனீ வளர்ப்பு முறை ☑***

*ஆ) விதைகளற்ற கனி உற்பத்தி முறை*

*இ) இறகற்ற கோழி வளர்ப்பு முறை*

*ஈ) விதைகளற்ற காய்கள் உற்பத்தி முறை*

❖ *காசர்கோடை தலைமையிடமாகக்கொண்ட உழவர்கள் பல்கலைக் கழகமான கர்ஷகா வித்யாபீடம், சம்பேரியில் ஒரு 'மெலிபோனி கல்ச்சர்' திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. மெலிபோனிகல்ச்சர் குறித்த 4 மாத பயிற்சி வகுப்பு (அதாவது கொடுக்கற்ற தேனீ வளர்ப்பு) தொடங்கப்பட்டது. அடுத்தகட்ட உதவியுடன் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மன்றத்தால் வடிவமைக்கப்பட்ட, 'சுதேச தேன்கூடுகளும்; இந்தப் பயிற்சியின் வழங்கப்படும்.*

---

**4.**மக்களவை சபாநாயகரின் சமீபத்திய அறிவிப்பின்படி, பள்ளிகள் & கல்லூரிகளில், எந்தப் பரப்புரை மேற்கொள்ளப்பட உள்ளது?

*அ) Know your MLA* *ஆ) Know your MP*

*இ) Know your constituency* ***ஈ) Know your Constitution ☑***

❖ *மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா சமீபத்தில் உத்தரகண்ட் பஞ்சாயத்து ராஜ் துறை ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். இந்த நிகழ்வின்போது, நாடு முழுவதுமுள்ள பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில், "உங்கள் அரசியலமைப்பை அறிந்துகொள்ளுங்கள்" என்ற பெயரில் ஒரு பரப்புரையை மத்திய அரசு விரைவில் மேற்கொள்ளும் என்று அவர் அறிவித்தார். இது அரசியலமைப்பின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.*

---

**5.**அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, வர்த்தக கொள்கை மீளாய்வுடன் தொடர்புடைய நிறுவனம் எது?

*அ) உலக வங்கி*

***ஆ) WTO ☑***

*இ) IMF*

*ஈ) FAO*

❖ *வர்த்தக கொள்கை மீளாய்வு (Trade Policy Review) என்பது உலக வர்த்தக அமைப்பின் (WTO) கீழ் உள்ள ஒரு பொறிமுறையாகும். இதில், உறுப்பினர்களின் வர்த்தகம் மற்றும் அது தொடர்புடைய கொள்கைகள் ஆராயப்படுகின்றன. அதன் விதிகளுக்கு இணங்குவதை மேம்படுத்துகின்றன.*

❖ *அண்மையில், இந்தியாவின் ஏழாவது வர்த்தக கொள்கை ஆய்வு உலக வர்த்தக அமைப்பில் ஜெனீவாவில் உள்ள உலக வர்த்தக அமைப்பில் முடிந்தது. இந்தியாவின் முந்தைய TPR, கடந்த 2015ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. COVID–19'க்கான புதிய நோயறிமுறைகள் மற்றும் தடுப்பூசி உற்பத்தித்திறன் மற்றும் அவை சரியான நேரத்தில் கிடைப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை இந்தியா ஆதரித்தது.*

---

**6.**அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற IREDA என்பது பின்வரும் எந்த அமைச்சகத்தின் கீழ்வரும் ஓர் அமைப்பாகும்?

***அ) எரிசக்தி அமைச்சகம் ☑***

*ஆ) புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்*

*இ) தகவல் தொடர்பு அமைச்சகம்*

*ஈ) MSME அமைச்சகம்*

❖ *புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் 'மினி இரத்னா' நிறுவனமான இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமை (IREDA), புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களை மேம்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்குவதற்காக தேசிய நீர்மின்சார கழகத்துடன் (NHPC) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.*

❖ *இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, தேசிய நீர்மின்சார கழகத்தின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் எரிசக்தி சேமிப்பு உள்ளிட்ட திட்டங்களுக்குத் தேவையான தொழில்நுட்ப நிதி சேவைகளை இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமை வழங்கும்.*

---

**7.** அடிப்படை வாழ்வுக்கான ஊதியத்தை பரிந்துரைத்த, மத்திய தொழிலாளர் அமைச்சக ஆணையத்தின் தலைவர் யார்?



*அ) சந்தோஷ் குமார் கங்வார்*

***ஆ) C V ஆனந்த போஸ் ☑***

*இ) அபூர்வ சந்திரா*

*ஈ) அலோக் குமார் மாத்தூர்*

- *COVID–19 தொற்றுநோய்களின்போது ஒப்பந்தத்தொழிலாளர்களின் நலன் மற்றும் மேம்பாட்டுக்கான செயல்திட்டத்தைத் தயாரிப்பதற்காக தொழிலாளர் அமைச்சின் மத்திய ஆலோசனை ஒப்பந்த தொழிலாளர் வாரியத்தின்கீழ் உறுப்பினர் ஆணையம் ஒன்று உருவாக்கப்பட்டது.*
- *இவ்வாணையத்தின் பொறுப்பாளராக இருந்த மூத்த IAS அதிகாரி C V ஆனந்த போஸ், வேலையிழப்பு ஏற்பட்டால் அடிப்படை வாழ்வுக்கான ஊதியத்தை செலுத்த பரிந்துரைத்துள்ளார். இந்திய தொழிலாளர் ஆணையத்தை ஒரு மைய அமைப்பாக நிறுவவும் அவர் முயன்றார்.*

---

**8.** 'Pioneers' என்பது எந்த விண்வெளி மையத்தின் திட்டமாகும்?



*அ) இந்தியா*

***ஆ) அமெரிக்கா ☑***

*இ) பிரிட்டன்*

*ஈ) ஜெர்மனி*

- *'Pioneers' திட்டமானது அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான NASA'ஆல் கடந்த 2020ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அது, சிறிய வன்பொருளைப்பயன்படுத்தி வானியற்பியல் அறிவியல்பற்றி ஆராய்ச்சி மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.*
- *அண்மையில், இந்தத் திட்டத்தின் ஒருபகுதியாக, NASA, நான்கு சிறிய அளவிலான வானியற்பியல் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அஸ்பெரா, பண்டோரா மற்றும் ஸ்டார்பர்ஸ்ட் என்ற சிறிய செயற்கைக் கோள்கள் & PUEO என்ற பலூன் திட்டம் ஆகியவை இதில் அடங்கும். இத்திட்டங்கள் அண்ட நிகழ்வுகளைப்பற்றி ஆய்வுசெய்ய உதவும்.*

---

**9.** நாட்டின் முதல் சூரிய மின்சார RO–RO சேவையை தொடங்க உள்ளதாக அறிவித்துள்ள மாநிலம் எது?



***அ) கேரளா ☑***

*ஆ) மேற்கு வங்கம்*

*இ) மகாராஷ்டிரா*

*ஈ) ஆந்திர பிரதேசம்*

- *நாட்டின் முதல் சூரிய மின்சார ரோ–ரோ சேவை, 2021–2022ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்படும் என்று கேரள ஆளுநர் சட்டமன்றத்தில் அறிவித்தார். மாநிலத்தின் முதல் நீர்–நில இயக்க பேருந்து சேவை தொடங்கப்படும் என்றும் அவர் அறிவித்தார். சரக்குகள் இயக்கம் மற்றும் அதிவேக சுற்றுலா சேவைகளுக்காக படகு சேவையை தொடங்கவும் அம்மாநில அரசு திட்டமிட்டுள்ளது.*

---

**10.** பெண்களின் மாதவிடாய் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக இந்தியாவின் எந்த மாநகராட்சி, 'பீரியட் ரூம்' என்ற முயற்சியைத் தொடங்கியுள்ளது?

*அ) திருவனந்தபுரம் மாநகராட்சி*

***ஆ) தானே மாநகராட்சி ☑***

*இ) விசாகப்பட்டிணம் மாநகராட்சி*

*ஈ) பெங்களூரு மாநகராட்சி*

- *மாநகராட்சியில் அமைந்துள்ள கழிப்பறைத் தொகுதிகளில், "பீரியட் ரூம்" ஒன்றை தானே மாநகராட்சி அறிமுகப்படுத்தியுள்ளது. பத்துக்கு ஒரு கழிப்பறையில், தேவையான அனைத்து வசதிகளுடன் கூடிய "பீரியட் ரூம்" ஆக மாற்றப்பட்டுள்ளது. மாதவிடாய் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

---

**1.** பின்வரும் எத்துறையில், 'ஒற்றைச்சாளர ஒப்புதல் அமைப்பை' உள்துறை அமைச்சர் தொடங்கவுள்ளார்?

***அ) நிலக்கரி சுரங்கங்கள் ☑***



*ஆ) DISCOM*

*இ) எஃகு ஆலை*

*ஈ) செப்பு சுரங்கங்கள்*

❖ *இந்தியாவில் நிலக்கரி சுரங்கம் அமைப்பதற்கு ஒப்புதலையும், அனுமதியையும் அளிப்பதற்கான ஒற்றைச்சாளர தளத்தை மத்திய நிலக்கரி அமைச்சகம் தொடங்கியுள்ளது. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா இத்தளத்தைத் தொடங்கிவைத்தார். இந்தியாவின் நிலக்கரி துறையில் எளிதான வர்த்தகத்தை மேற்கொள்வதற்கு இது அடித்தளமாக அமையும்.*

---

**2.** தேசிய இளையோர் நாடாளுமன்ற விழாவின் முதலாவது பதிப்பு, எந்த ஆண்டில் நடைபெற்றது?

*அ) 2015*

*ஆ) 2017*




***இ) 2019 ☑***

*ஈ) 2020*

❖ *முதல் தேசிய இளைஞர் நாடாளுமன்ற விழாவானது 2019 பிப்ரவரி மாதம் மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தத் திருவிழாவின் இரண்டாவது பதிப்பு, 2020 டிசம்பரில் தொடங்கப்பட்டது.*

❖ *மாவட்ட மற்றும் மாநில அளவிலான நிகழ்வுகளுக்குப் பிறகு, இறுதி நிகழ்வு சமீபத்தில் நாடாளுமன்றத்தின் மத்திய மண்டபத்தில் நடைபெற்றது. 18 முதல் 25 வயது வரையிலான இளைஞர்கள் தேசிய நடுவர் மன்றத்தின் முன் பேசுவார்கள், அவர்களில் மூன்று பேர் வெற்றியாளர்களாக அறிவிக்கப்படுவார்கள்.*

---

**3.** எந்த அதிவேக ரயில் திட்டத்திற்காக, நொய்டாவிலிருந்து LiDAR ஆய்வு தொடங்கப்பட்டது?

***அ) தில்லி–வாரணாசி அதிவேக இரயில் வழித்தடம் ☑***

*ஆ) தில்லி–பாட்னா அதிவேக இரயில் வழித்தடம்*

*இ) மும்பை – அகமதாபாத் அதிவேக இரயில் வழித்தடம்*

*ஈ) சென்னை–பெங்களூரு அதிவேக இரயில் வழித்தடம்*

❖ *தில்லி–வாரணாசி அதிவேக இரயில் வழித்தடம் அமைப்பதற்கான ஆய்வுப்பணி பெருநகர நொய்டாவிலிருந்து தொடங்கப்பட்டது. இதன்படி, ஹெலிகாப்டர்மீது லேசர் கருவிகள் பொருத்தப்பட்டு கள ஆய்வு தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட்டன.*

❖ *தேசிய அதிவேக இரயில் கழகம், LiDAR தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மூன்று – நான்கு மாதங்களுக்குள் களம் தொடர்பான தகவல்களையும், தரவுகளையும் சேகரிக்கிறது. நுண்ணிய விவரங்களை சேகரிப்பதற்காக இந்த ஆய்வு, 60 மெகாபிக்சல் கேமராக்களைப் பயன்படுத்தியது குறிப்பிடத்தக்கது.*

---

**4.** உலக ஹிந்தி நாளானது, எந்த நகரத்தில் நடந்த முதல் உலக ஹிந்தி மாநாட்டின் ஆண்டுநிறைவை நினைவுகூர்கிறது?

*அ) வாரணாசி*




***ஆ) நாக்பூர் ☑***

*இ) புனே*

*ஈ) தில்லி*

❖ *ஒவ்வோர் ஆண்டும் ஜன.10 அன்று உலக ஹிந்தி நாள் கொண்டாடப்படுகிறது. இது விஸ்வ ஹிந்தி திவாஸ் என்றும் அழைக்கப்படுகிறது, இது, 1975ஆம் ஆண்டு இதே நாளில் நாக்பூரில் நடைபெற்ற முதல் உலக ஹிந்தி மாநாட்டின் ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.*

❖ *உலக ஹிந்தி நாள் முதன்முதலில் கடந்த 2006ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது. ஹிந்தி, நாட்டின் அதிகம் பேசப்படும் மொழி மட்டுமல்ல மேலும், உலகிலேயே அதிகம் பேசப்படும் மூன்றாவது மொழியுமாகும்.*

---

**5.** இந்திய புவியியல் ஆய்வுமையத்தின் கூற்றுப்படி, எந்த இந்திய மாநிலத்தில் வனேடியம் (Vanadium) இருப்பு இருக்கக்கூடும்?

*அ) ஜார்க்கண்ட்*



*ஆ) பீகார்*

***இ) அருணாச்சல பிரதேசம் ☑***

*ஈ) ஒடிசா*

❖ *இந்திய புவியியல் ஆய்வு மையமானது (GIS) அருணாச்சல பிரதேச மாநிலத்தை ஆராய்ந்து வருகிறது. அம்மாநிலம் இந்தியாவின் பிரதான வனேடியம் இருப்புக்கொண்ட மாநிலமாக இருக்கலாம் என GIS கூறியுள்ளது.*

❖ *வனேடியம் என்பது எஃகு மற்றும் டைட்டானியத்தை வலுப்படுத்த பயன்படும் ஓர் உயர்–மதிப்புடைய உலோகமாகும். வனாடிஃபெரஸ் காந்தத்தாதுக்களை செயலாக்கும்போது சேகரிக்கப்படும் கசடுகளில் இருந்து, இது ஒரு துணைப்பொருளாக சேகரிக்கப்படுகிறது.*

---

**6.** ஃபின்டெக் புத்தாக்க மையத்தை அமைப்பதற்காக கான்பூர் IITஉடன் கூட்டிணைந்துள்ள இந்திய வங்கி?

*அ) பாரத வங்கி*

*ஆ) கனரா வங்கி*


***இ) பஞ்சாப் தேசிய வங்கி ☑***

*ஈ) ICICI வங்கி*

❖ *நாட்டின் இரண்டாவது பெரிய பொதுத்துறை வங்கியான பஞ்சாப் தேசிய வங்கியானது ஃபின்டெக் புத்தாக்க மையத்தை நிறுவுவதற்–காக IIT கான்பூர் மற்றும் FIRST (அறிவியல் & தொழில்நுட்பத்தில் புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சிக்கான அறக்கட்டளை) உடன் கூட்டு சேர்ந்துள்ளது. IIT வளாகத்திலேயே இம்மையம் நிறுவப்படும். அது, வங்கி மற்றும் நிதித்துறையில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப தீர்வுகளின் மீதான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கு உதவும்.*

---

**7.** அண்மையில் வெளியான, "India's 71-Year Test: The Journey to Triumph in Australia" என்ற நூலின் ஆசிரியர் யார்?




***அ) R கௌஷிக் ☑***

*ஆ) VVS லக்ஷ்மன்*

*இ) ஹர்பஜன் சிங்*

*ஈ) சுனில் கவாஸ்கர்*

- *இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளரும், இந்தியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரருமான ரவி சாஸ்திரி, "India's 71-Year Test: The Journey to Triumph in Australia" என்ற தலைப்பில் நூலொன்றை வெளியிட்டார்.*
- *இந்நூலை கிரிக்கெட் பத்திரிகையாளர் R கௌசிக் எழுதியுள்ளார். இது, பிராட்மேன் அருங்காட்சியகத்தின் ஒரு முன்னெடுப்பாகும். இது, ஆஸ்திரேலியாவுக்கான இந்தியாவின் முதல் பன்னிரண்டு சுற்றுப் பயணங்களை விவரிக்கிறது. பிராட்மேன் அருங்காட்சியகத்தில் இருந்து 200'க்கும் மேற்பட்ட அரிய படங்களும் இந்நூலில் அடங்கும். சிட்னி மைதானத்தில் முன்னாள் இந்திய அணித் தலைவர் சுனில் கவாஸ்கரின் உருவப்படம் வெளியிடப்பட்டது.*

---

**8.** 16ஆவது பிரவாசி பாரதிய திவாஸின் கருப்பொருள் என்ன?

***அ) Contributing to Aatmanirbhar Bharat ☑***

*ஆ) Redefining engagement with the Indian diaspora*

*இ) Role of Indian Diaspora in building a New India*

*ஈ) Contributing to New India*

- *ஜன.9 அன்று பிரவாசி பாரதிய திவாஸின் 16ஆவது பதிப்பை பிரதமர் மோடி மெய்நிகராக திறந்து வைத்தார். வெளிநாடுவாழ் இந்தியர்கள் இந்திய சமூக-பொருளாதார வளர்ச்சியின் ஒருபகுதியாக திகழ்வதற்கு அவர்களை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.*
- *"தற்சார்பு இந்தியாவுக்கு பங்களியுங்கள்" என்பது நடப்பாண்டு (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும். சுரினாம் குடியரசின் தலைவர், இதன்போது முக்கிய குறிப்புரையை வழங்கினார்.*

---

**9.** எந்த ஆயுதப்படையின் புதிய தலைமை இயக்குநராக சுபோத் குமார் ஜெய்ஸ்வால் பொறுப்பேற்றுள்ளார்?



***அ) CISF ☑***

*ஆ) CRPF*

*இ) ITBP*

*ஈ) NSG*

- *மூத்த IPS அதிகாரியான சுபோத் குமார் ஜெய்ஸ்வால் மத்திய தொழிலக பாதுகாப்புப்படையின் (CSIF) புதிய தலைமை இயக்குநராக பொறுப்பே -ற்றார். 2019 முதல் அவர் மகாராஷ்டிரா காவல்துறையின் தலைவராக பணியாற்றி வருகிறார். முன்னதாக நாட்டின் சிறப்பு பாதுகாப்புக் குழுவில் பணியாற்றிய அவர், பிரதமரைப் பாதுகாத்தார்.*

---

**10.** சுய-உதவிக்குழுக்களுக்கு உதவுவதற்காக, பின்வரும் எந்த வங்கி, 'NABFOUNDATION' உடன் கூட்டிணைந்துள்ளது?




*அ) பாரத வங்கி*

*ஆ) கனரா வங்கி*

***இ) சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா ☑***

*ஈ) ICICI வங்கி*

- *சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா ஆனது NABFOUNDATION உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா தன்னுடன் கணக்கு வைத்திருக்கும் சுய-உதவிக்குழுக்களுக்கு இணையற்ற செயல்பாட்டு மூலதனத்தை வழங்கும் மற்றும் NABARD நிதியுதவி வழங்கும் 'My Pad My Right' திட்டத்தை நடத்தும். NABFOUNDATION என்பது NABARD'இன் ஓர் இணை அமைப்பாகும்.*

---

**1.** 'STEM' கல்வியை மேம்படுத்துவதற்காக, நாடு முழுவதுமுள்ள 100 அடல் டிங்கரிங் ஆய்வகங்களை பயன்படுத்தவுள்ள அமைப்பு எது?

*அ) DRDO*

***ஆ) ISRO ☑***

*இ) BARC*

*ஈ) இந்திய வான்படை*

❖ *நாடு முழுவதும் STEM (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம்), விண்வெளி கல்வி மற்றும் விண்வெளி தொழில்நுட்பம் சம்பந்தமான புதுமைகளை பள்ளி மாணவர்களுக்கு வழங்கும் வகையில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான ISRO, 100 அடல் ஆய்வகங்களைப் பயன்படுத்த இருப்பதாக அடல் புத்தாக்க இயக்கம், NITI ஆயோக், ISRO ஆகியவை அறிவித்துள்ளன.*

---

**2.** அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'பாரம்பரிய நிலைமாற்று குழு'வானது, கீழ்க்காணும் எந்த மத்திய அமைச்சகத்தின் அதிகாரியின் தலைமையில் உள்ளது?

*அ) உள்துறை அமைச்சகம்*

***ஆ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑***

*இ) கலாச்சார அமைச்சகம்*

*ஈ) சுற்றுலா அமைச்சகம்*

❖ *'பாரம்பரிய நிலைமாற்று குழு'வானது (Heritage Conversation Committee – HCC) மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் தலைமையில் உள்ளது.*

❖ *புதிய நாடாளுமன்ற கட்டடத்திற்கான நடுவணரசின் முன்மொழிவை இக்குழு அண்மையில் அனுமதித்துள்ளது. மத்திய விஸ்டா திட்டத்திற்கு உச்ச நீதிமன்றம் ஒப்புதல் அளித்ததுடன், திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு HCC'இன் ஒப்புதல் கட்டாயம் எனக்கூறியது. இக்குழுவில் பிற துறைகளைச் சார்ந்த அதிகாரிகளும் உள்ளனர்.*

---

**3.** இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் எத்தனை சதவீதம் பாதுகா–க்கப்பட்ட பகுதிகளாக உள்ளன?

*அ) 2.5%*

***ஆ) 5% ☑***



*இ) 7.5%*

*ஈ) 10%*

❖ *மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர், 146 தேசிய பூங்கா மற்றும் வனவுயிரி சரணாலயங்கள் மற்றும் நாட்டின் உயிரியல் பூங்காக்களின் மேலாண்மை செயல்திறன் மதிப்பீட்டை வெளியிட்டார்.*

❖ *தற்போது, இந்தியாவில் 903 பாதுகாக்கப்பட்ட பகுதிகள் உள்ளன. அது, நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 5% ஆகும். ஒவ்வோர் ஆண்டும் 10 சிறந்த தேசிய பூங்காக்கள், 5 கடலோர மற்றும் கடல் பூங்காக்கள் மற்றும் நாட்டின் முதல் 5 உயிரியல் பூங்காக்கள் தரவரிசைப்படுத்தப்–பட்டு அவற்றுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.*

---

**4.** 'Sea Vigil – 21' என்பது பின்வரும் எந்த நாட்டால் நடத்தப்படும் பாதுகாப்புப் பயிற்சியாகும்?

***அ) இந்தியா ☑***



*ஆ) இலங்கை*

*இ) சீனா*

*ஈ) ஐக்கியப் பேரரசு*

❖ *ஈராண்டுக்கு ஒருமுறை நிகழும் நாடு தழுவிய கடலோரப் பாதுகாப்பு பயிற்சியான 'கடல் கண்காணிப்பு – 21', 2021 ஜன.12 & 13 ஆகிய தேதிகளில் நடந்தது. 2019 ஜனவரியில் தொடங்கப்பட்ட இந்தப்பயிற்சி, 7516 கிமீ நீளமுள்ள ஒட்டுமொத்த கடற்கரைப் பகுதியிலும், இந்தியாவின் பிரத்யேக பொருளாதார மண்டலத்திலும் நடத்தப்படும்.*

❖ *அனைத்து பதின்மூன்று கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களும் இதில் ஈடுபடும். கடல்சார் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பை மேம்படுத்துவதை இந்த பயிற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.*

---

**5.** கோவாவில் நடக்கும் 51ஆவது பன்னாட்டு திரைப்பட விழாவில் சிறப்பு கவனம் பெறும் நாடு எது?

*அ) பிரான்ஸ்*

*ஆ) இரஷ்யா*

***இ) வங்காளதேசம் ☑***

*ஈ) இலங்கை*

❖ *2021 ஜன.16–24 வரை திட்டமிடப்பட்டுள்ள இந்தியாவின் 51ஆவது பன்னாட்டு திரைப்பட விழாவில், வங்கதேசம் சிறப்பு கவனம் பெறும் நாடாக உள்ளது. திரைத்துறைக்கான அந்நாட்டின் பங்களிப்பை அங்கீகரிப்பதற்காக, 4 வங்கதேச திரைப்படங்கள் சிறப்பு கவனப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளன.*

❖ *51ஆவது இந்திய பன்னாட்டு திரைப்பட விழா, 2020'க்கு தேர்வு செய்யப்பட்ட இந்திய திரைப்படங்களின் பட்டியலில் தமிழ் திரைப் படங்களான அசுரன் மற்றும் தேன் இடம்பெற்றுள்ளன என்பது கவனிக்கத்தக்கது.*

---

**6.** நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சீர்திருத்தங்களை நிறைவு செய்த முதலாவது வடகிழக்கு மாநிலமும், கூடுதல் கடன் பெறுவதற்கு ஒப்புதல் பெற்ற மாநிலமும் எது?

*அ) நாகாலாந்து*

*ஆ) அருணாச்சல பிரதேசம்*

***இ) மணிப்பூர் ☑***

*ஈ) திரிபுரா*

❖ *மத்திய நிதி அமைச்சகத்தின் செலவினத்துறை, கடந்த 2020 மே 17 அன்று அறிவித்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புச் சீர்திருத்தங்களை, மணிப்பூர் நான்காவது மாநிலமாக அமல்படுத்தியுள்ளது. இதையடுத்து, இந்த மாநிலம் திறந்தவெளிச் சந்தைக் கடன் முறை மூலம், ₹75 கோடி கடனைக் கூடுதலாகப் பெற தகுதிபெற்றுள்ளது.*

❖ *ஏற்கனவே இந்தச் சீர்திருத்தங்களை நிறைவேற்றியுள்ள ஆந்திர பிரதேசம், மத்திய பிரதேசம், தெலங்கானா ஆகிய மாநிலங்களுடன் மணிப்பூர் தற்போது இணைந்துள்ளது.*

**7.** "புதுப்பிக்கப்பட்ட பெண்கள் தொழில்முனைவு தளத்தை" தொடங்குவதற்காக, எந்த மின்னணு–வணிக நிறுவனத்துடன் NITI ஆயோக் கூட்டிணைந்துள்ளது?

*அ) அமேசான்*

***ஆ) பிளிப்கார்ட் ☑***

*இ) மிந்த்ரா*

*ஈ) ஸ்னாப்டீல்*

❖ *"புதுப்பிக்கப்பட்ட பெண்கள் தொழில்முனைவு தளத்தைத் தொடங்க, NITIT ஆயோக், பிளிப்கார்ட்டுடன் கூட்டு சேர்ந்துள்ளது. இந்தியாவில் பெண் தொழில்முனைவோருக்கு சமூக அனுபவத்தை மேம்படுத்தும் முயற்சியாக இது கருதப்படுகிறது. இத்தளம், இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த பெண்களை ஒன்றிணைத்து, அவர்களின் தொழில்முனைவு எண்ணங்களை உணர்ந்துகொள்ளும்.*

---

**8.**நிதி நிலைத்தன்மை அறிக்கையை வெளியிடுகிற அமைப்பு எது?

*அ) உலக வங்கி*

*ஆ) IMF*

***இ) இந்திய ரிசர்வ் வங்கி ☑***

*ஈ) ஆசிய வளர்ச்சி வங்கி*

❖ *இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள நிதி நிலைத்தன்மை அறிக்கை, ஆனது, 2020 செப்டம்பர் மாதத்தில் 7.5% ஆக இருந்த இந்தியாவில் உள்ள வங்கிகளின் மொத்த செயல்படாத சொத்துக்கள், 2021 செப்டம்பர் மாதத்திற்குள் 13.5% ஆக உயரலாம் எனக்கணித்துள்ளது. கடும் நிதி அழுத்த சூழ்நிலையில், இந்தச்சதவீதம் 14.8% ஆக மோசமடையக்கூடும்.*

---

**9.**ஆயுதப்படை படைவீரர்கள் நாள் கொண்டாடப்படும் தேதி எது?

*அ) ஜனவரி 11*

*ஆ) ஜனவரி 12*

*இ) ஜனவரி 13*

***ஈ) ஜனவரி 14 ☑***



❖ *முதல் இந்திய இராணுவத் தளபதி K M கரியப்பாவின் ஓய்வுத்தேதியை நினைவுகூரும் வகையில், 2017'இல் நிறுவப்பட்டதிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் ஜன.14 அன்று 'ஆயுதப்படை படைவீரர்கள் நாள்' கொண்டாட–ப்பட்டு வருகிறது. K M கரியப்பா, 1949 முதல் 1953 வரை இந்திய இராணுவத்தின் தளபதியாக பணியாற்றினார்.*

---

**10.** ஒவ்வோர் ஆண்டும், இந்தியா முழுவதும், 'இராணுவ நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?

*அ) ஜனவரி 12*

*ஆ) ஜனவரி 13*

*இ) ஜனவரி 14*

***ஈ) ஜனவரி 15 ☑***




❖ *ஒவ்வோர் ஆண்டும் ஜன.15ஆம் தேதியன்று, 'இராணுவ நாள்' நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. 73ஆவது 'இராணுவ நாள்' அண்மையில் 2021 ஜன.15 அன்று அனுசரிக்கப்பட்டது.*

❖ *1949 ஜன.15 அன்று, ஜெனரல் K M கரியப்பா, விடுதலைக்குப்பிறகான இந்திய இராணுவத்தின் முதல் தலைமைத் தளபதியாக பொறுப்பேற்றார். அந்நாள் ஒவ்வோர் ஆண்டும் 'இராணுவ நாளாக' நினைவுகூரப்படுகிறது.*

---

**1.எரிசக்தி சிக்கன அலுவலகம் என்பது பின்வரும் எந்த நடுவண் அமைச்சகத்தின்கீழ் இயங்கும் ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்?**

*அ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்*

*ஆ) புதிய & புதுப்பிக்கத்தக்க அமைச்சகம்*

***இ) எரிசக்தி அமைச்சகம் ☑***

*ஈ) புவி அறிவியல் அமைச்சகம்*

❖ *எரிசக்தி சிக்கனத்துக்கான அலுவலகத்துடன் இணைந்து, 30ஆவது தேசிய எரிசக்தி சேமிப்பு விருதுகள் நிகழ்ச்சியை மத்திய மின்சக்தி அமைச்சகம் நடத்தியது. COVID–19 பெருந்தொற்றின் காரணமாக, விக்யான் பவனில் மெய்நிகர் முறையில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. BEE என்பது மின்சக்தி அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு சட்டரீதியான அமைப்பாகும். இது, ஆற்றல் சேமிப்பு மற்றும் பாதுகாப்பில் கொள்கை & திட்டங்களை செயல்படுத்தும் ஓர் அமைப்பாக விளங்குகிறது.*

---

**2.இணையவழி வகுப்புகளில் கலந்துகொள்வதற்காக கல்லூரி மாணாக்கர்களுக்கு இலவச இணைய இணைப்பு வசதியை அறிவித்துள்ள மாநிலம் எது?**

***அ) தமிழ்நாடு ☑***



*ஆ) கேரளா*

*இ) ஆந்திர பிரதேசம்*

*ஈ) பீகார்*

❖ *2021 ஏப்ரல் வரை ஆன்லைன் வகுப்புகளில் கலந்துகொள்வதற்கு ஏதுவாக கல்லூரி மாணவர்களுக்கு நாளொன்றுக்கு 2 GB அளவுக்கு இலவச தரவு வசதியை தமிழ்நாடு அரசு வழங்கவுள்ளது. அரசு மற்றும் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்–தொழில்நுட்ப நிறுவனங்களில் பொறியியல் பயிலும் 9 இலட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இந்த வசதி வழங்கப்படும். சுயநிதிக்கல்லூரி மாணவர்களுக்கான திட்டத்தை ELCOT செயல்படுத்தும்.*

---

**3. "வண்ணத்துப்பூச்சிகள் அதிகம் நிறைந்த பகுதி (சூப்பர்–ஹாட்ஸ்பாட்)" என்று அடையாளங்காணப்பட்டுள்ள சிறுவாணி மலைகள், தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?**

*அ) தேனி*



***ஆ) கோயம்புத்தூர் ☑***

*இ) தென்காசி*

*ஈ) கன்னியாகுமரி*

❖ *தமிழ்நாட்டில் இதுவரை 325 வகை வண்ணத்துப்பூச்சிகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. அதில், 74% வண்ணத்துப்பூச்சி வகைகள் (240 இனங்கள்) கோயம்புத்தூர் சிறுவாணி பகுதியில் மட்டுமே இருப்பது இயற்கை & பட்டாம்பூச்சி அமைப்பினர் (TNBS) நடத்திய 6 ஆண்டு தொடர் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.*

❖ *TNBS'இன கூற்றுப்படி, ஒரு குறிப்பிட்ட பகுதியில் 5 கிமீ சுற்றளவில் குறைந்தபட்சம் 75 வகையான வண்ணத்துப்பூச்சிகள் தென்படும் இடங்களை வளமான பகுதிகளாக குறிப்பிடலாம். சிறுவாணியில் மட்டுமே 240 வகை வண்ணத்துப்பூச்சிகள் கண்டறியப்பட்டுள்ளன. எனவே, அப்பகுதியை அதிக வளம்மிக்க (சூப்பர்–ஹாட்ஸ்பாட்) பகுதியாகக் குறிப்பிடலாம்.*

---

**4. மாஸ்டர்கார்டு கூட்டாக தயாரித்த, "டிஜிட்டல் எவல்யூஷன் ஸ்கோர்கார்டில்" இந்தியாவின் தரநிலை என்ன?**

*அ) முதலாவது*

*ஆ) இரண்டாவது*

*இ) மூன்றாவது*

***ஈ) நான்காவது ☑***

❖ *"டிஜிட்டல் பரிணாம மதிப்பெண் அட்டையை" மாஸ்டர்கார்டுடன் இணைந்து டஃப்ஸ் பல்கலைக்கழகத்தின் பிளெட்சர் பள்ளி தயாரித்து உள்ளது. அண்மையில் வெளியிடப்பட்ட இக்குறியீட்டின் மூன்றாவது பதிப்பில், மிக வேகமாக டிஜிட்டல் மயமாகும் நாடுகளின் வரிசையில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது. அதிக தேவை மற்றும் புதுமைகளுடன் சீனா இக்குறியீட்டின் முதலிடத்தில் உள்ளது.*

---

**5.சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற, 'காதி பிரகிரிதிக்' என்றால் என்ன?**

***அ) வண்ணப்பூச்சு ☑***




*ஆ) ஊதுவத்தி*

*இ) தரை தூய்மையாக்கி*

*ஈ) தொற்றுநீக்கி*

❖ *நாட்டின் முதல் பசுஞ்சாண வண்ணப்பூச்சை, காதி கிராமத் தொழில் ஆணையம் உருவாக்கியுள்ளது. "காதி பிரகிரிதிக் வண்ணப்பூச்சு" என அழைக்கப்படும் இந்த வண்ணப்பூச்சு சுற்றுச்சூழலுக்கு ஏற்றது, நச்சுத்தன்மையற்றது. முதன்முறையாக தயாரிக்கப்பட்டுள்ள இந்த வண்ணப்பூச்சு, பூஞ்சை, நுண்ணுயிர் பாதிப்புக்கு எதிரானது.*

❖ *பசுஞ்சாணத்தை முக்கிய மூலப்பொருளாககொண்டு, தயாரிக்கப்பட்ட இந்த மலிவு விலை வண்ணப் பூச்சு, வாடையற்றது. இதற்கு இந்திய தர நிலை அலுவலகம் சான்றிதழ் அளித்துள்ளது.*

---

**6. BIMSTEC'இன் புதிய பொதுச்செயலரான டென்சின் லெக்பெல் சார்ந்த நாடு எது?**

***அ) பூடான் ☑***



*ஆ) இலங்கை*

*இ) இந்தியா*

*ஈ) மியான்மர்*

❖ *டென்சின் லெக்பெல், BIMSTEC'இன் (வங்காள விரிகுடா பல்துறை தொழில்நுட்ப பொருளாதார கூட்டுறவிற்கான முன்னெடுப்பு) புதிதாக நியமிக்கப்பட்ட பொதுச்செயலாளராவார். அவர், வங்கதேசத்துக்கு வருகை புரிந்ததை அடுத்து அண்மைச் செய்திகளில் இடம்பெற்றார்.*

❖ *செயலகத்திற்கான புதிய வளாகத்தைக் கட்டும் பணியில் அந்நாடு உள்ளது. BIMSTEC என்பது வங்கதேசம், பூடான், இந்தியா, நேபாளம், இலங்கை, மியான்மர் மற்றும் தாய்லாந்து ஆகிய 7 நாடுகளைக் கொண்ட ஒரு பிராந்திய அமைப்பாகும்.*

**7. ஹென்லி கடவுச்சீட்டு குறியீட்டின்படி, பின்வரும் எந்த நாட்டின் கடவுச்சீட்டு, மிகவும் சக்திவாய்ந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது?**

*அ) சிங்கப்பூர்* ***ஆ) ஜப்பான் ☑***

*இ) இந்தியா* *ஈ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்*

- *ஹென்லி கடவுச்சீட்டு குறியீட்டின் அண்மைய அறிக்கையின்படி, ஜப்பானிய கடவுச்சீட்டு உலகின் மிகச்சக்திவாய்ந்த கடவுச்சீட்டாகும். ஜப்பானிய கடவுச்சீட்டுமூலம், ஒருவர் விசா இல்லாத அல்லது குறிப்பிட்ட நாட்டுக்கு சென்றபின் விசாபெறும் முறையின்மூலம் 191 நாடுகளுக்கு பயணிக்க முடியும்.*
- *இப்பட்டியலில் இந்தியா 85ஆவது இடத்தில் உள்ளது. சிரியா, ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் மோசமான கடவுச்சீட்டைக் கொண்டிருக்கும் நாடுகளாக உள்ளன.*

---

**8.மத்திய வேளாண் அமைச்சகத்தின் எத்திட்டம், அண்மையில், ஐந்து ஆண்டுகளை நிறைவு செய்தது?**



***அ) பிரதமர் பசல் பீமா யோஜனா ☑***

*ஆ) பிரதமர் கிசான் மன்–தன் யோஜனா*

*இ) பிரதமர் கிருஷி சிஞ்சாயி யோஜனா*

*ஈ) பிரதமர் வீட்டுவசதித் திட்டம்*

- *வேளாண் அமைச்சகத்தின் பிரதமர் பசல் பீமா யோஜனா (PMFBY) அண்மையில் அதன் 5 ஆண்டுகளை நிறைவு செய்தது. இது ஒரு பயிர் காப்பீட்டுத் திட்டமாகும்; இது 2016 ஜனவரி 13 அன்று தொடங்கப்பட்டது. இதுவரை, இந்தத் திட்டத்தின்கீழ், ₹90,000 கோடிக்கும் அதிகமான காப்பீட்டுத்தொகை வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சகம் கூறியுள்ளது.*

---

**9. அண்மையில், "One Planet Summit – ஒரு கோள் உச்சிமாநாடு" என்றவொன்றை நடத்திய நாடு எது?**

*அ) பெல்ஜியம்*

*ஆ) சுவீடன்*

***இ) பிரான்ஸ் ☑***

*ஈ) ஆஸ்திரேலியா*

- *அண்மையில், பிரான்ஸ் நாடு 'One Planet Summit' ஐ நடத்தியது. இதில், 30 தலைவர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் தலைவர்கள் பங்கேற்றனர். COVID–19 தொற்றுநோய் அச்சத்தால் இந்த உச்சிமாநாடு மெய்நிகர் முறையில் நடைபெற்றது.*
- *நிலம் மற்றும் கடற்சூழலியல் அமைப்புகள் மற்றும் வேளாண் சூழலியல் ஆகிவற்றை பாதுகாப்பதில் கவனம் செலுத்திய இந்த உச்சிமாநாட்டின் போது, ஐம்பது நாடுகள் 2030'க்குள் 30% நிலத்தையும் கடலையும் பாதுகாப்பதாக உறுதியளித்தன.*

---

**10.சுவீடனைச் சார்ந்த ஆட்டோலிவ் நிறுவனம் அதன் உற்பத்தி அலகினை எந்த மாநிலத்தில் நிறுவ முடிவு செய்துள்ளது?**

***அ) தமிழ்நாடு ☑***

*ஆ) மத்திய பிரதேசம்*

*இ) ஆந்திர பிரதேசம்*

*ஈ) அருணாச்சல பிரதேசம்*

- *சுவீடனை தலைமையிடமாகக் கொண்ட ஆட்டோலிவ் இன்க்., அதன் உற்பத்தி அலகினை தமிழ்நாட்டின் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள செய்யாற்றில் நிறுவ முன்வந்துள்ளது. இந்த நிறுவனம் தனது இந்த ஆலைக்கு ₹100 கோடியை முதலீடு செய்யவுள்ளது.*
- *மேலும், இதன்மூலம் 400 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிறுவனம் காற்றுப்பைகள், இருக்கை வார்கள் மற்றும் இயக்காழி சக்கரங்களின் வடிவமைப்பு, உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளது.*

---

**1.** சமீபத்தில் எந்த மாநிலத்தில், செர்ரிப் பூக்கும் மாவோ திருவிழா நடத்தப்பட்டது?

*அ) நாகாலாந்து*

***ஆ) மணிப்பூர் ☑***

*இ) ஹிமாச்சல பிரதேசம்*

*ஈ) சிக்கிம்*



- *ஆண்டுதோறும் நடக்கும் செர்ரிப்பூக்கும் திருவிழா, மணிப்பூர் மாநிலத்தில் மாவோவில் அண்மையில் நடத்தப்பட்டது. இந்த விழா, மெய்நிகர் முறையில் நடைபெற்றது. மாவோ நகரம் முழுவதும் செர்ரிப்பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இவ்விழா, பேஸ்புக், யூடியூப், இன்ஸ்டாகிராம் போன்றவற்றில் நேரலையாக ஒளிபரப்பப்பட்டது. பாரம்பரிய நாட்டுப்புற நடனங்கள் மற்றும் செர்ரி நாச்சோம் என்ற சிறப்பு பாலே நடனம் ஆகியவை இவ்விழாவின் ஒருபகுதியாக இருந்தன.*

---

**2.** 'தேசிய AIDS கட்டுப்பாட்டமைப்பின் (NACO)' தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?

*அ) மும்பை*

***ஆ) தில்லி ☑***

*இ) ஹைதராபாத்*

*ஈ) கொல்கத்தா*

- *தேசிய AIDS கட்டுப்பாட்டு அமைப்பு (NACO) தனது முதல் ரெட் ரிப்பன் கிளப் வினாடி வினா போட்டியை ஏற்பாடு செய்தது. NACO, 1992'இல் சுகாதார அமைச்சகத்தின் ஒரு பிரிவாக நிறுவப்பட்டது. புது தில்லியை தலைமையிடமாகக்கொண்ட இது, NCERT உடன் இணைந்து பள்ளிகளில், 'வளரிளம் பருவத்தினர் கல்வித்திட்டத்தை' செயல்படுத்தி வருகிறது.*
- *கல்லூரி பயிலும் இளையோரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 12,500 ரெட் ரிப்பன் கிளப்புகளையும் அது நிறுவியுள்ளது.*

---

**3.** இந்திய ராணுவத்தின் பின்வரும் எந்தப்பிரிவு, அடுத்த ஆண்டு முதல் பெண்களை விமானிகளாக பணியமர்த்தவுள்ளது?

*அ) சமிக்ஞை படைகள்*

*ஆ) கவசப்படைகள்*

***இ) இராணுவ வான்படை ☑***

*ஈ) பொறியாளர்கள் படை*

- *இந்திய இராணுவத்தின் தலைமைத்தளபதியான மனோஜ் முகுந்த் நரவனேவின் ஓர் அண்மைய அறிவிப்பின்படி, அடுத்த ஆண்டு முதல் பெண்கள் இராணுவ வான்படையில் விமானிகளாக பணியமர்த்தப்படுவார்கள். இதற்கு முன்னர்வரை, இராணுவ விமானப்படையில் பெண்களுக்கு தரைசார் பணிகள் மட்டுமே ஒதுக்கப்பட்டன.*
- *பெண் விமானிகள் ஹெலிகாப்டர்களை இயக்குவதோடு எல்லைப்புற நடவடிக்கைகளின் ஒருபகுதியாகவும் இருப்பார்கள்.*

---

**4.** எந்த இந்திய மாநிலம் / யூனியன் பிரதேசத்தில் உள்ள அனைத்து வக்ஃப் சொத்துக்களையும், நிலக்குறியீடு இடுவதற்கு சிறுபான்மை விவகாரங்கள் அமைச்சகம் முடிவு செய்துள்ளது?

*அ) தில்லி* ***ஆ) புதுச்சேரி ☑***

*இ) கோவா* *ஈ) சிக்கிம்*

- *மத்திய சிறுபான்மை விவகாரங்கள் அமைச்சகம் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள அனைத்து வக்ஃப் சொத்துக்களையும் நிலக் குறியீடு செய்ய முடிவு செய்துள்ளதாக அறிவித்தது.*
- *இந்நடவடிக்கை, உள்ளூர் குண்டர்களால் அந்தச் சொத்துக்கள் சட்ட விரோதமாக ஆக்கிரமிக்கப்படுவதாக பல புகார்கள் வந்ததை அடுத்து எடுக்கப்பட்டுள்ளது. புதுச்சேரியில் வக்ப் வாரியத்தை அமைப்பதற்கும் அவ்வமைச்சகம் செயல்பட்டு வருகிறது. பிரதம மந்திரி ஜன்–விகாஸ் காரிகிராமின்கீழ், சமூக–பொருளாதார உட்கட்டமைப்பைக் ஏற்படுத்துவதற்கும் மத்திய அரசு நிதியளிக்கும்.*

---

**5.** வரி ஏய்ப்பு, வெளிநாட்டிலுள்ள இரகசிய சொத்துக்கள் மற்றும் பினாமி சொத்துக்கள் தொடர்பாக இணையதளம் ஒன்றைத் தொடங்கியுள்ள அமைப்பு எது?

*அ) மத்திய மறைமுக வரிகள் & சுங்கங்கள் வாரியம்*

*ஆ) அமலாக்கத்துறை*

***இ) மத்திய நேரடி வரிகள் வாரியம் ☑***

*ஈ) இந்திய ரிசர்வ் வங்கி*

- *மின்னாளுகை மற்றும் வரி ஏய்ப்பை தடுப்பதில் மக்கள் ஈடுபாட்டை ஊக்கப்படுத்துதல் ஆகியவற்றில் மற்றுமொரு முக்கிய நடவடிக்கையாக, வரி ஏய்ப்பு, பினாமி சொத்துகள், வெளிநாட்டிலுள்ள இரகசிய சொத்துகள் தொடர்பான புகார்களைப் பதிவு செய்வதற்கான இணையதளத்தை மத்திய நேரடி வரிகள் வாரியம் அறிமுகப்படுத்தியுள்ளது.*

---

**6.** அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'பயங்கரவாத எதிர்ப்பு தொடர்பான தீர்மானம் 1373' உடன் தொடர்புடைய அமைப்பு எது?

*அ) RBI*

*ஆ) SEBI*

***இ) UNSC ☑***

*ஈ) ICJ*

- *பயங்கரவாத எதிர்ப்பு தொடர்பான 1373 தீர்மானம், ஐ.நா அவையின் பாதுகாப்பு கவுன்சிலால் 2001 செப்.28 அன்று ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. செப்.11 அன்று அமெரிக்கா மீதான பயங்கரவாத தாக்குதல்களைத் தொடர்ந்து இது ஏற்றுக்கொள்ளப்பட்டது.*
- *அண்மையில், ஐநா அவையின் பாதுகாப்பு கவுன்சிலில் (UNSC) "உலகளவில் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதை நோக்கமாகக்கொண்ட 1373 தீர்மானம் நிறைவேற்றப்பட்ட இருபது ஆண்டுகளுக்குப் பிறகு" என்ற தலைப்பில் விவாதம் ஒன்று நடைபெற்றது. இதில், இந்தியாவின் சார்பாக மத்திய வெளியுறவு அமைச்சர் Dr S .ஜெய்சங்கர், மெய்நிகராக பங்கேற்றார்.*


**7.** இந்தியாவின் புதிய வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை, எப்போது நடைமுறைக்கு வரும்?

*அ) 2021 பிப்ரவரி 01*

*ஆ) 2021 மார்ச் 01*

***இ) 2021 ஏப்ரல் 01 ☑***

*ஈ) 2021 மே 01*



- *இந்தியாவின் புதிய வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை, 2021 ஏப்ரல் 1 முதல் அமலுக்கு வர உள்ளது. இந்தக் கொள்கை 2021 முதல் 2026 வரை ஐந்து ஆண்டுகளுக்கு அமலில் இருக்கும். இது, பன்னாட்டு வர்த்தகத்தில் இந்தியாவை ஒரு தலைமையாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மாவட்ட ஏற்றுமதி மையங்கள், இந்தப் புதிய வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையின் ஒரு முக்கிய அங்கமாக அமையும் என்பதும் அறியப்படுகிறது.*

---

**8.** "2020 ஹுருன் குளோபல் 500" பட்டியலில், முதலிடத்தில் உள்ள நிறுவனம் எது?

***அ) ஆப்பிள் ☑***

*ஆ) கூகுள்*

*இ) அமேசான்*

*ஈ) சாம்சங்*

- *"2020 ஹுருன் குளோபல் 500" பட்டியலின்படி, ஆப்பிள் நிறுவனம் $2.1 டிரில்லியன் டாலர் மதிப்புடன் உலகின் மிகவும் மதிப்புமிக்க நிறுவனமாக உள்ளது. மைக்ரோசாப்ட் மற்றும் அமேசான் ஆகிய நிறுவனங்கள், தலா $1.6 டிரில்லியன் டாலர்களைக் கொண்டுள்ளன.*
- *2020 ஹுருன் குளோபல் 500 என்பது உலகின் மிக மதிப்புமிக்க 500 அரசு சாரா நிறுவனங்களின் பட்டியலாகும். இந்தப் பட்டியலில் 11 இந்திய நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள், $169 பில்லியன் டாலர் மதிப்புடன் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் முதலிடத்தில் உள்ளது.*

---

**9.** தர்ஹாம் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், பின்வரும் எந்த வான்பொருளின் உருவாக்கத்தை விளக்குவதற்காக, ஒரு சூப்பர் கம்ப்யூட்டர் அடிப்படையிலான உருவகப்படுத்துதல் வசதியை உருவாக்கியுள்ளனர்?

*அ) ஞாயிறு*

***ஆ) திங்கள் ☑***



*இ) செவ்வாய்*

*ஈ) புதன்*

- *சமீபத்தில், தர்ஹாம் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், திங்களின் உருவாக்கத்தை விளக்குவதற்காக ஒரு சூப்பர் கம்ப்யூட்டர் அடிப்படை –யிலான உருவகப்படுத்துதல் வசதியை உருவாக்கியுள்ளனர். சுமார் 4.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு 'தியா' என்ற செவ்வாய் போன்ற கோள், பூமியில் மோதியதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.*
- *அதன் விளைவாக உண்டான எச்சங்கள், ஒரு சுய–ஈர்ப்பு பொருளாக உருவாகி, நிறை மற்றும் இரும்புப் பண்புகளின் அடிப்படையில் திங்கள் உருவாக்கியிருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.*

---

**10.** ஒரு புத்தாக்க தொழிற்சாலையைத் தொடங்குவதற்காக, NASSCOM, பின்வரும் எந்த மாநிலத்தின் AI திட்டத்துடன் கூட்டு சேர்ந்துள்ளது?

*அ) தமிழ்நாடு*

*ஆ) மத்திய பிரதேசம்*

*இ) ஆந்திர பிரதேசம்*

***ஈ) தெலங்கானா ☑***

T-AIM
Telangana AI Mission

- *ஒரு புத்தாக்க தொழிற்சாலையைத் தொடங்குவதற்காக தேசிய மென் பொருள் மற்றும் சேவை நிறுவனங்களின் சங்கம் (NASSCOM) தெலுங்கானா மாநில செயற்கை நுண்ணறிவுத் திட்டத்துடன் (T–AIM) கூட்டிணைந்துள்ளது.*
- *வேளாண்மைத் துறையில் உள்ள சவால்களுக்கான புதுமையான செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான தீர்வுகளை அங்கீகரித்து அவற்றை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. துளிர் நிறுவனங்கள், நிறுவனங்கள் இச்சவாலை வென்றால் ₹1 இலட்சம் பரிசுத்தொகையும், தெலுங்கானா மாநில நிறுவனங்களின் வழிகாட்டுதலும் கிடைக்கும்.*

---

**1.** 'மோல்' எனப் பெயரிடப்பட்ட, எந்த நாட்டின் செவ்வாய் கோள் அகழாய்வுக்கருவி, சமீபத்தில் செயலிழந்ததாக அறிவிக்கப்பட்டது?

*அ) சீனா*

*ஆ) UAE*

***இ) USA ☑***

*ஈ) இஸ்ரேல்*



- *'மோல்' எனப்பெயரிடப்பட்ட செவ்வாய் கோள் அகழாய்வுக்கருவி, செவ்வாய் கோளில் NASA'இன் இன்சைட் தரையிறங்கிமூலம் பணியில் ஈடுபடுத்தப் –பட்டது. செவ்வாய் கோளில் ஆழமாக அகழ தவறியதால், இந்தக் கருவி அந்நாட்டின் அறிவியலாளர்களால் அது செயலிழந்ததாக அறிவிக்கப்பட்டது.*
- *இதனை, ஜெர்மன் ஏரோஸ்பேஸ் மையம் உருவாக்கியது. மிக ஆழமாக தோண்டி செவ்வாய் கோளின் உள்வெப்பநிலையைக் கண்டறிய இது 2019 முதல் முயற்சித்து வருகிறது. இன்சைட் தரையிறங்கி, 2022 வரை தொடர்ந்து செயல்படும்.*

---

**2.**பெருநிறுவன நிர்வாகத்தில் சிறந்து விளங்குவதற்காக வழங்கப்படும் ICSI தேசிய விருதை வென்ற பெருநிறுவனம் எது?

*அ) PFC*

***ஆ) ITC ☑***

*இ) NTPC*

*ஈ) ONGC*

- *பெருநிறுவன நிர்வாகத்தில் சிறந்து விளங்குவதற்காக வழங்கப்படும், இருபதாவது நிறுவனச் செயலாளர்கள் நிறுவனத்தின் (ICSI) தேசிய விருதுகளில், 'பட்டியலிடப்பட்ட பிரிவு: பெரிய வகை'இல் ITC லிமிடெட் 'சிறந்த நிர்வாகம் புரியும் நிறுவனம்' எனப்பெயரிடப்பட்டுள்ளது.*
- *இவ்விருதை முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி AK சிக்ரி தலைமையிலான நடுவர் மன்றம் அறிவித்தது. ITC நிறுவனத்தின் செயலாளர் இராஜேந்திர குமார் சிங்கி, 'ஆண்டின் ஆளுமை நிபுணர்' எனத் தேர்வுசெய்யப்பட்டார்.*

---

**3.**அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'MINUSMA' என்றால் என்ன?

***அ) மாலியில் ஐநா மேற்கொள்ளும் அமைதிகாக்கும் பணி ☑***

*ஆ) புதிய கோளின் பெயர்*

*இ) புதிய விண்மீனின் பெயர்*

*ஈ) அமெரிக்க கூட்டு வரிச் சட்டம்*



- *UN – Multidimensional Integrated Stabilization Mission in Mali (MINUSMA) என்பது மாலியில் ஐநா மேற்கொண்டு வரும் அமைதி காக்கும் பணியாகும். இது, 2013'இல் நிறுவப்பட்டது. இது உலகின் மிக ஆபத்தான ஐநா நடவடிக்கையாக கருதப்படுகிறது.*
- *அண்மையில், அமைதி காக்கும் படையினர், மாலியின் அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகளால் தாக்கப்பட்டனர். இந்தத் தாக்குதலில் 4 அமைதி காக்கும் படையினர் கொல்லப்பட்டனர் மற்றும் ஐந்து பேர் காயமடைந்தனர்.*

---

**4.** இந்தியாவின் முதல் ஓட்டுநர் இல்லாத மெட்ரோ இரயில்களை தயாரித்துள்ள நிறுவனம் எது?

***அ) BEML ☑***

*ஆ) BHEL*

*இ) HAL*

*ஈ) DRDO*

- *இந்தியாவின் முதல் அதிநவீன ஓட்டுநர் இல்லாத மெட்ரோ இரயிலை BEML நிறுவனம் தயாரித்துள்ளது. இது, பெங்களூரில் உள்ள அதன் உற்பத்தி நிலையத்தில் தயாரிக்கப்பட்டது. இதனை, பாதுகாப்பு அமைச்சர் வெளியிட்டார்.*
- *இவ்வலகு, 2280 பயணிகளைக்கொண்டு செல்லும் திறன்கொண்ட எஃகு உடலால் ஆனது. மும்பை பெருநகர பிராந்திய மேம்பாட்டு ஆணையத்தின் MRS–1 திட்டத்திற்காக இதுபோன்ற 576 இரயிலை உற்பத்தி செய்வதற்கான பணியாணைகளை BEML பெற்றுள்ளது.*

---

**5.**இந்திய நறுமணப் பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைமையகம் அமைந்துள்ள மாநிலம் எது?

*அ) தமிழ்நாடு*

***ஆ) கேரளம் ☑***

*இ) மத்திய பிரதேசம்*

*ஈ) கர்நாடகா*

- *இந்திய நறுமணப் பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனம் என்பது ஒரு தன்னாட்சி அமைப்பும், வேளாண் அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலின் ஒரு துணை நிறுவனமும் ஆகும். இது, இந்தியாவில் நறுமணப் பொருட்கள் தொடர்பான விவசாய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது.*
- *இதன் தலைமையகம் கேரள மாநிலத்தின் கோழிக்கோட்டில் அமைந்துள்ளது. அண்மையில், மூத்த தோட்டக்கலை விஞ்ஞானி ஜே ரெமா இந்திய நறுமணப் பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் புதிய இயக்குநராக பொறுப்பேற்றார்.*

---

**6.** 'ஜல்லிக்கட்டு' என்பது பின்வரும் எந்த இந்திய மாநிலத்தில் கொண்டாடப்படுகிற ஒரு வீரவிளையாட்டு ஆகும்?

***அ) தமிழ்நாடு ☑***

*ஆ) கர்நாடகா*

*இ) ஆந்திர பிரதேசம்*

*ஈ) தெலங்கானா*



- *தமிழ்நாட்டின் மதுரை மாவட்டம் அலங்கநல்லூரில் நடைபெற்ற புகழ் பெற்ற 'ஜல்லிக்கட்டு' நிகழ்வை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் க.பழனிசாமி கொடியசைத்து தொடங்கி வைத்தார்.*
- *'ஜல்லிக்கட்டு' என்பது பாரம்பரியமாக தமிழ்நாட்டில் நடத்தப்படுகிற ஓர் ஏறுதழுவுதல் விளையாட்டாகும். இது பொங்கல் திருவிழாவின் ஒரு முக்கிய பகுதியாக இருக்கும் 'மாட்டுப்பொங்கல்' நாளன்று நடத்தப்படுகிறது. பாரம்பரியத்தை பாதுகாப்பதற்காக தமிழ்நாடு அரசு நிறைவேற்றிய அரசாணையை தொடர்ந்து இந்நிகழ்வு தொடர்கிறது.*

**7.** பின்வரும் எந்த அமைச்சகத்தின் தலைமையின்கீழ், PMKVY செயல்படுத்தப்படுகிறது?

*அ) சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகம்*

*ஆ) பழங்குடியின நலத்துறை அமைச்சகம்*

***இ) திறன் மேம்பாட்டு அமைச்சகம் ☑***

*ஈ) நிலக்கரி அமைச்சகம்*

- *பிரதமர் கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY), 2015ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இது மத்திய திறன் மேம்பாட்டு அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் 3ஆவது கட்டம் சமீபத்தில் தொடங்கப்பட்டது. மூன்றாங்கட்ட திறன் இந்தியா திட்டத்தின்கீழ், 2020-2021ஆம் ஆண்டில் எட்டு இலட்சம் பேருக்கு, ₹948.90 கோடி செலவில் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.*

---

**8.**அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, "போஜன்னகொண்டா" என்பதன் பொருள் என்ன?

***அ) பாரம்பரிய பௌத்த தளம் ☑***



*ஆ) பாரம்பரிய சமண தளம்*

*இ) குகைக்கோவில்*

*ஈ) மணி மண்டபம்*

- *"போஜ்ஜன்னகொண்டா" என்பது ஆந்திர பிரதேச மாநிலம் விசாகப் பட்டினம் அருகே சங்கரம் என்ற கிராமத்திற்கு அருகில் அமைந்துள்ள ஒரு குடைவரைக் கோவில் ஆகும். இந்த இடங்கள், பௌத்தம், சங்கரம் கிராமத்தின் பெரும்பான்மை மதமாக இருந்த பொ. ஆ 4 முதல் 9ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்டதாகும்.*
- *அண்மையில், இந்தப் பௌத்த பாரம்பரிய தளத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் "பௌத்த மேளா" கொண்டாடப்பட்டது. இது பொதுவாக, சங்கராந்தி பண்டிகைக்கு ஒரு நாள் கழித்து கொண்டாடப்படுகிறது.*

---

**9.** STARStreak வான் பாதுகாப்பு அமைப்பு குறித்து, இந்தியா, சமீபத்தில் எந்த நாட்டோடு கூட்டிணைந்தது?

*அ) ஜெர்மனி*



*ஆ) இஸ்ரேல்*

*இ) ஜப்பான்*

***ஈ) ஐக்கியப் பேரரசு (UK) ☑***

- *இந்தியாவின் பாரத் டைனமிக்ஸும் உலகளாவிய ஏரோஸ்பேஸ் நிறுவனமான தேல்ஸும் STARStreak வான் பாதுகாப்பு அமைப்பில் ஒத்துழைப்பு வேண்டி ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டுள்ளன.*
- *இந்திய மற்றும் UK ஆகிய இரண்டு அரசுகளின் ஆதரவுடன், UK ஆயுதப்படைகள் உள்ளிட்ட பல்வேறு வாடிக்கையாளர்களுக்கு இந்த அமைப்பு ஏற்றுமதி செய்ய உதவும். இதன்மூலம், பாரத் டைனமிக்ஸ், 60% உள்நாட்டு உள்ளடக்கத்துடன் இந்திய ஆயுதப்படைக்கு இந்த அமைப்பை வழங்க முடியும்.*

---

**10.** இருமுறை குற்றஞ்சாட்டப்பட்ட முதல் அமெரிக்க அதிபர் யார்?

*அ) பில் கிளிண்டன்*



*ஆ) ஆண்ட்ரூ ஜான்சன்*

***இ) டொனால்ட் டிரம்ப் ☑***

*ஈ) ரொனால்ட் ரீகன்*

- *ஐக்கிய அமெரிக்க நாடுகளின் (USA) சட்டமன்றக் கட்டிடத்தில் ஏற்பட்ட கலவரங்களுக்குப் பின்னர், முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் மீது குற்றஞ்சாட்ட அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபை வாக்களித்துள்ளது. இச்சுற்று குற்றச்சாட்டுடன், டொனால்ட் டிரம்ப் 2ஆவது முறையாக குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்ட ஒரே அமெரிக்க அதிபராகிறார்.*
- *அண்மையில், ஐக்கிய அமெரிக்க நாடுகளின் (USA) சட்டமன்றக் கட்டிடத்தில் அவரது ஆதரவாளர்கள் நடத்திய கலவரத்தில் அவரது பங்கிற்கு கிளர்ச்சியைத் தூண்டிய குற்றச்சாட்டின் பேரில் அவை அவரை குற்றஞ்சாட்டியது.*

---

**1.இந்தியாவின் முதல் தொழிலாளர் இயக்க அருங்காட்சியகம் திறக்கப்படவுள்ள மாநிலம் எது?**

*அ) தமிழ்நாடு*

***ஆ) கேரளா ☑***

*இ) மேற்கு வங்கம்*

*ஈ) ஆந்திர பிரதேசம்*

❖ *இந்தியாவின் முதல் தொழிலாளர் இயக்க அருங்காட்சியகமானது கேரள மாநிலத்தில் உள்ள ஆலப்புழா படகு இல்ல சுற்றுலா மையத்தில் திறக்கப்பட உள்ளது. உலக தொழிலாளர் இயக்கத்தின் வரலாற்றையும் அதன் முக்கியமான ஆவணங்களையும், கேரள தொழிலாளர் இயக்கத்தின் வரலாற்றையும் இந்த அருங்காட்சியகம் காட்சிப்படுத்துகிறது. ₹9.95 கோடி மதிப்பிலான இத்திட்டத்திற்கு பாதுகாப்பு கட்டடக் கலைஞர் டாக்டர் பென்னி குரியகோஸ் முன்னிலை வகிக்கிறார்.*

---

**2. "ஆளுமையில் வெளிப்படைத்தன்மை" என்ற பிரிவின்கீழ், ஸ்கோச் சேலஞ்சர் விருதை வென்ற மத்திய அமைச்சகம் எது?**

*அ) உள்துறை அமைச்சகம்*

***ஆ) பஞ்சாயத்து இராஜ் அமைச்சகம் ☑***

*இ) சட்ட அமைச்சகம்*

*ஈ) வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சகம்*

❖ *மத்திய பஞ்சாயத்து இராஜ் அமைச்சகம், "வெளிப்படைத்தன்மையுடன் கூடிய ஆளுமை" பிரிவின்கீழ், SKOCH சேலஞ்சர் விருதை வென்றது. SVAMITVA (Survey of Villages and Mapping with Improvised Technology in Village Areas) திட்டம், e–கிராம்ஸ்வராஜ், mActionSoft, AuditOnline மற்றும் ServicePlus ஆகியவை அவ்வமைச்சகத்தின் முன்னெடுப்புகளுள் அடங்கும்.*

---

**3. "The Making of Aadhaar: World's Largest Identity Platform" என்ற தலைப்பிலான நூலின் ஆசிரியர் யார்?**



***அ) இராம் சேவக் சர்மா ☑***

*ஆ) நந்தன் நிலேகனி*

*இ) A K சிக்ரி*

*ஈ) கிரிஸ் கோபாலகிருஷ்ணன்*

❖ *இந்திய தனித்துவ அடையாள ஆணைய அமைப்பின் (UIDAI) முதல் தலைமை இயக்குநரான இராம் சேவக் சர்மா, "The Making of Aadhaar: World's Largest Identity Platform" என்ற தலைப்பில் ஒரு நூலை எழுதியுள்ளார்.*

❖ *இந்நூல் ஆதார் அமைப்பின் சட்ட, ஆளுமை மற்றும் சமூக அம்சங்கள் தொடர்பான தொழில்நுட்ப விவரங்களை உள்ளடக்கியது.*

---

**4. கனடாவின் ஹிந்தி எழுத்தாளர்கள் சங்கம் வழங்கிய "சாகித்ய கௌரவ் சம்மன்" விருதைப் பெற்ற இந்திய மத்திய அமைச்சர் யார்?**



*அ) S ஜெய் சங்கர்*

***ஆ) இரமேஷ் பொக்ரியால் 'நிஷாங்க்' ☑***

*இ) அமித் ஷா*

*ஈ) ஜிதேந்திர சிங்*

❖ *மத்திய கல்வி அமைச்சர் இரமேஷ் பொக்ரியால் 'நிஷாங்க்', ஹிந்தி இலக்கியத்திற்கு பங்களித்ததற்காக கனடா ஹிந்தி எழுத்தாளர்கள் சங்கத்தால் கௌரவிக்கப்பட்டுள்ளார். மெய்நிகராக நடந்தேறிய இந்த விழாவில் அமைச்சருக்கு, "சாகித்ய கௌரவ் சம்மன்" விருது வழங்கப்பட்டது. கனடாவுக்கான இந்திய உயராணையர் அஜய் பிசாரியா முன்னிலையில் இந்த விருது வழங்கப்பட்டது.*

---

**5.நடப்பாண்டுக்கான (2021) G7 உச்சிமாநாட்டை நடத்தவுள்ள காரன்வால் அமைந்துள்ள நாடு எது?**

*அ) சுவிட்சர்லாந்து*

*ஆ) இத்தாலி*

*இ) பிரேசில்*

***ஈ) ஐக்கியப் பேரரசு ☑***

❖ *நடப்பாண்டுக்கான (2021) G7 உச்சி மாநாடு, ஐக்கியப் பேரரசின் தென்மேற்கு பிராந்தியத்தில் உள்ள தீபகற்ப நாடான காரன்வாலில் ஜூன் 11 முதல் 13 வரை நடைபெறவுள்ளது.*

❖ *நடப்பாண்டில் G7 கூட்டமைப்பின் தலைவராக இருப்பதால், ஐக்கியப் பேரரசானது (UK) இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளை இந்த உச்சிமாநாட்டில் விருந்தினர் நாடுகளாக பங்கேற்க அழைப்பு விடுத்துள்ளது. G7 உறுப்புநாடுகளின் அரசாங்கத் தலைவர்களும், ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளும் G7 உச்சி மாநாட்டின்போது பரஸ்பரம் சந்தித்துக்கொள்கிறார்கள்.*

---

**6. 'பறவைகள் விழா'வை நடத்தவிருக்கும் மகானந்தா வனவுயிரி சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?**



*அ) ஹிமாச்சல பிரதேசம்*

*ஆ) மத்திய பிரதேசம்*

***இ) மேற்கு வங்கம் ☑***

*ஈ) ஒடிசா*

❖ *மேற்கு வங்கத்தில் உள்ள மகானந்தா வனவுயிரி சரணாலயம் இந்த ஆண்டு பிப்ரவரி 20 முதல் 23 வரை 'பறவைகள் திருவிழா'வை ஏற்பாடு செய்யவுள்ளது. டார்ஜிலிங் வனவுயிரி பிரிவு இந்த நிகழ்வை நடத்தும். செங்கழுத்து இருவாச்சி உள்ளிட்ட முந்நூற்றுக்கும் மேற்பட்ட பறவையினங்களைக்கொண்டுள்ளதால், இச்சரணாலயம் "முக்கியமான பறவைப் பகுதி" எனப் பெயரிடப்பட்டுள்ளது.*

**7. வரலாற்றில் மிகவும் விலையுயர்ந்த காமிக் புத்தகக் கலைக்கான சாதனையை அண்மையில் உருவாக்கிய பிரபல காமிக் ஓவியம் எது?**



*அ) ஹாரி பாட்டர்*

*ஆ) பாப்பாய்*

*இ) டாம் மற்றும் ஜெர்ரி*

***ஈ) டின் டின் ☑***

❖ *பெல்ஜிய கலைஞரான ஹெர்ஜ் வரைந்த டின்டின் ஓவியம் சமீபத்தில் பிரான்ஸின் பாரிஸில் €2.6 மில்லியன் யூரோவுக்கு விற்கப்பட்டது. இதன்மூலம், வரலாற்றில் மிகவும் விலையுயர்ந்த காமிக் புத்தகக் கலைக்கான சாதனையை இந்த ஓவியம் உருவாக்கியது.*

- *இந்த ஓவியத்தில், கருப்பு பின்னணியில் வரையப்பட்ட ஒரு சிவப்பு டிராகன் உள்ளது.*

---

**8. ஐநா மனித உரிமைகள் பேரவையின் தலைவராக தெரிவு செய்யப்பட்ட நசாத் ஷமீம் கான் சார்ந்த நாடு எது?**



*அ) இந்தியா*

*ஆ) பாகிஸ்தான்*

***இ) பிஜி ☑***

*ஈ) நேபாளம்*

- *ஜெனீவாவுக்கான பிஜியின் தூதர் நசாத் ஷமீம் கான், 2021ஆம் ஆண்டு ஐநா மனித உரிமைகள் பேரவையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். கடந்த 2020ஆம் ஆண்டில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் துணைத் தலைவராக பணியாற்றியுள்ளார்.*
- *"இரகசிய வாக்கு" முறையைப் பயன்படுத்தி இந்தத் தேர்தல் நடத்தப்பட்டது 47 வாக்குகளில் 29 வாக்குகள் நசாத் ஷமீம் கானுக்கு ஆதரவாக பதிவு செய்யப்பட்டிருந்தது.*

---

**9. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற யோவேரி முசவேனி, எந்த நாட்டின் அதிபராவார்?**



*அ) நைஜீரியா*

***ஆ) உகாண்டா ☑***

*இ) காங்கோ மக்கள் குடியரசு*

*ஈ) சிரியா*

- *கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு நாடான உகாண்டாவின் அதிபராக யோவேரி முசவேனி மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் கிட்டத்தட்ட 59% வாக்குகளைப்பெற்றார். கடந்த 1986ஆம் ஆண்டு முதல் ஆறாவது முறையாக அவர் அதிபர் பதவியை ஏற்கிறார்.*

---

**10. புதிய தனியுரிமைக்கொள்கை அமல்படுத்தலை மூன்று மாத காலத்திற்கு தாமதப்படுத்தியுள்ள சமூக–ஊடக நிறுவனம் எது?**




*அ) பேஸ்புக்*

***ஆ) வாட்ஸ் ஆப் ☑***

*இ) யூடியூப்*

*ஈ) டெலிகிராம்*

- *பேஸ்புக் நிறுவனத்திற்கு சொந்தமான சமூக தொடர்பு நிறுவனமான "வாட்ஸ் ஆப்" தனது புதிய தனியுரிமைக் கொள்கை அமல்படுத்தலை 3 மாத காலத்திற்கு தாமதப்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.*
- *இந்தப் புதிய தனியுரிமைக் கொள்கை முதலில் பிப்ரவரி 8, 2021 முதல் நடைமுறைக்கு வரும் எனக் கூறப்பட்டிருந்தது. இந்தப் புதிய தனியுரிமைக் கொள்கையானது பொதுமக்களின் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகியது. மேலும் அதன் பயனர்கள், வாட்ஸ் ஆப்பில் இருந்து சிக்னல் மற்றும் டெலிகிராம் போன்ற பிற தளங்களுக்கு பெருமளவில் இடம்பெயர வழிவகுத்தது.*

---

**1.இந்தியாவில் முதன்முதலில் தேசிய சாலைப் பாதுகாப்பு மாதம் அனுசரிக்கப்பட்ட ஆண்டு எது?**

*அ) 2010*

*ஆ) 2015*

*இ) 2017*

***ஈ) 2021 ☑***

- *சாலைப்பாதுகாப்புபற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், நாட்டில் சாலை விபத்துக்களை குறைக்கவும் தேசிய சாலைப் பாதுகாப்பு மாதம், முதல் முறையாக தொடங்கிவைக்கப்பட்டது.*
- *கடந்த சில ஆண்டுகளாக, சாலைப்பாதுகாப்பு வாரம் நடத்தப்பட்டது. ஆனால், இதன் முக்கியத்துவம் கருதி, சாலைப்பாதுகாப்பு நிகழ்ச்சி நடப்பாண்டு (2021) ஒருமாதகாலம் நடத்தப்படுகிறது. இதன் தொடக்க நிகழ்வை, மத்திய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி தொடங்கிவைத்தார். சாலைப்பாதுகாப்புக்கான விருதுகளையும் அமைச்சர் அப்போது வழங்கினார்.*

---

**2. DRDOஐ எண்ணத்தில் வைத்துக்கொண்டால், அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற 'ரக்ஷிதா' என்பது என்ன?**

*அ) ஆளில்லா வானூர்தி*



***ஆ) இருசக்கர வாகன அடிப்படையிலான அவசர ஊர்தி ☑***

*இ) விமான அவசர ஊர்தி*

*ஈ) நீர்வழி அவசர ஊர்தி*

- *தில்லியில் இருக்கும் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பின் (DRDO) ஆய்வகமான அணு மருத்துவம் மற்றும் தொடர்புடைய அறிவியலுக்கான நிறுவனம், இருசக்கர அவசர சிகிச்சை ஊர்தியான 'ரக்ஷிதா'வை மத்திய சேமக்காவல்படைக்கு வழங்கியது.*
- *குறைந்த அளவு பிரச்சனை உள்ள பகுதிகளிலிருந்து காயம்பட்டவர்களை மீட்பதற்கும், உயிர்காக்கும் உதவியை வழங்குவதற்கும் இவை வழி வகுக்கும். நெரிசலான தெருக்களையும், தொலைதூர இடங்களையும் இவற்றின் மூலம் சென்றடைவது எளிதாக இருக்கும்.*

---

**3.2021 ஜனவரியில் நடைபெற்ற WHO'இன் நிர்வாகக் குழுவின் அமர்வுக்கு தலைமைதாங்கிய நாடு எது?**

*அ) அமெரிக்கா*

***ஆ) இந்தியா ☑***

*இ) சீனா*

*ஈ) ஆஸ்திரேலியா*

- *உலக நலவாழ்வு அமைப்பின் (WHO) நிர்வாக வாரியத்தின் 148ஆவது அமர்வுக்கு மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் Dr ஹர்ஷ் வர்தன் காணொலிக்காட்சிமூலம் தலைமைதாங்கினார். அதன்சமயம், அறிவியலைப் பொருத்தவரையில் 2020ஆம் ஆண்டு என்பது அளப்பரிய அறிவியல் சாதனைக்கான ஆண்டாக அமைந்தது என்றும் உலகளாவிய ஒற்றுமைக்கான, வாழ்வுக்கான ஆண்டாக 2021ஆம் ஆண்டு இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.*

---

**4. கீழ்க்காணும் எந்த அமைச்சகத்தின்கீழ், மத்திய மண் மற்றும் பொருட்கள் ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு வருகிறது?**

*அ) உள்துறை அமைச்சகம்*

***ஆ) ஜல் சக்தி அமைச்சகம் ☑***

*இ) வேளாண் அமைச்சகம்*

*ஈ) சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சகம்*

- *பேரளவிலான நீர்வளத் திட்டங்களில் சவாலான புவி–தொழில்நுட்ப சூழலியலில் சிறப்பான ஆய்வு, ஆலோசனை, ஆராய்ச்சிப் பணிகளுக்கு புகழ்பெற்ற மத்திய மண், பொருள் ஆராய்ச்சி நிலையம் தொடர்பான ஆய்வுக்கூட்டத்தை மத்திய ஜல்சக்தித்துறை இணை அமைச்சர் ரத்தன் லால் கட்டாரியா நடத்தினார்.*
- *மண், பாறைகள், காரை, செயற்கை புவியியல் பொருட்கள் உள்ளிட்ட நீர்வளத்திட்டங்களின் பல்வேறு விஷயங்களைக் கையாளும் ஒரே மைய அமைப்பு மத்திய மண், பொருள் ஆராய்ச்சி நிலையமாகும்.*

---

**5. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'தாவோஸ் நிகழ்ச்சி நிரல்' என்பது எவ்வமைப்பின் இணையவழி நிகழ்வாகும்?**

*அ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்*

***ஆ) உலக பொருளாதார மன்றம் ☑***

*இ) G7 சங்கம்*

*ஈ) பன்னாட்டு ஒலிம்பிக் குழுமம்*

- *'தாவோஸ் நிகழ்ச்சி நிரல்' என்பது சுவிச்சர்லாந்தின் தாவோஸில் நடைபெறும் உலக பொருளாதார மன்றத்தின் வருடாந்திர கூட்டத்தின்போது நடைபெறும் ஓர் இணையவழி நிகழ்வாகும். இந்த ஆண்டு (2021), COVID–19 தொற்றுநோயைக் கருத்தில்கொண்டு, மெய்நிகர் பயன்முறையில், ஜனவரி 25 முதல் 29 வரை இந்த ஐந்து நாள் கூட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.*
- *WEF'இன் 'பெரும் மீட்டமைவு முன்னெடுப்பானது' இந்தக்கூட்டத்தின் போது தொடங்கப்படவுள்ளது. இந்த நிகழ்வில் இந்தியாவில் இருந்து பல்வேறு மத்திய அமைச்சர்கள் மற்றும் முன்னணி தொழிலதிபர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.*

---

**6.சிவப்புப் பாண்டா இனங்களை எண்ணத்தில் வைத்துக் கொண்டால், அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற சியாங் நதி அமைந்துள்ள மாநிலம் எது?**

***அ) அருணாச்சல பிரதேசம் ☑***



*ஆ) மத்திய பிரதேசம்*

*இ) மேற்கு வங்கம்*

*ஈ) ஒடிசா*

- *இந்திய விலங்கியல் ஆய்வுமையத்தின் (ZSI) சமீபத்திய ஆய்வின்படி, பாண்டாவின் இரண்டு இனங்கள், அதாவது இமயமலை சிவப்புப் பாண்டா (Ailurus fulgens) மற்றும் சீன சிவப்புப் பாண்டா (Ailurus styani) ஆகியவை இந்தியாவில் உள்ளன.*
- *அருணாச்சல பிரதேசத்தில் பாயும் சியாங் ஆறு இவ்விரு வேறுபட்ட மரபணுகொண்ட சிவப்புப்பாண்டா இனங்களின் எல்லையாக செயல்படுகிறது என்பதையும் இது வெளிப்படுத்தியது. மற்றொரு*

*ஆய்வின்படி, ப்ளீஸ்டோசீன் பனிப்பாறைகாலகட்டத்தின்போது இமயமலை சிவப்புப்பாண்டா இனம் அதிகம் பாதிக்கப்பட்டது.*

**7. "பெண்களின் மண வயது" குறித்து இந்திய அரசு அமைத்த பணிக்குழுவின் தலைவர் யார்?**



*அ) மேனகா காந்தி*

*ஆ) உஷா தோரத்*

***இ) ஜெயா ஜேட்லி ☑***

*ஈ) G ரோகிணி*

- *பெண்களின் திருமணத்திற்கான பொருத்தமான வயதை மறுபரிசீலனை செய்வதற்காக, இந்திய அரசு, முன்பு, ஜெயா ஜேட்லி அவர்களின் தலைமையில் ஒரு பணிக்குழுவை அமைத்திருந்தது. "பெண்களுக்கு சரியான திருமண வயது" என்ற பிரதமரின் சுதந்திர தின உரையின்படி இந்தக்குழு அமைக்கப்பட்டது.*
- *அண்மையில், இக்குழு தனது கண்டுபிடிப்புகளை அறிக்கை வடிவில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் பிரதமர் அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளது.*

---

**8.குடியரசு நாள் அணிவகுப்பில் பங்கேற்கும் இந்தியாவின் முதல் பெண் போர் விமானி யார்?**



***அ) பாவனா காந்த் ☑***

*ஆ) மோகனா சிங்*

*இ) அவனி சதுர்வேதி*

*ஈ) சிவாங்கி*

- *இந்திய குடியரசு நாள் அணிவகுப்பில் பங்கேற்கும் முதல் பெண் போர் விமானியாக விமான லெப்டினன்ட் பவானா காந்த் திகழ்கிறார். அவர் இந்திய விமானப்படையின் காட்சி ஊர்தியின் ஒரு பகுதியாக இருப்பார், அது இலக்கு இரக போர் விமானம், இலகு இரக போர் ஹெலிகாப்டர் மற்றும் சுகோய்–30 போர் விமானம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.*
- *2016ஆம் ஆண்டில், அவர், இரண்டு போர் விமானிகளான மோகனா சிங் மற்றும் அவனி சதுர்வேதி ஆகியோருடன் முதல் நாட்டின் முதல் போர் விமானியாக அறிவிக்கப்பட்டார்.*

---

**9.அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற, 'டெசர்ட் நைட்–21' என்பது இந்தியாவுக்கும் கீழ்க்காணும் எந்த நாட்டிற்கும் இடையிலான இராணுவப் பயிற்சியாகும்?**

*அ) பிரேசில்*

***ஆ) பிரான்ஸ் ☑***

*இ) ஜப்பான்*

*ஈ) ஐக்கியப் பேரரசு*

ARMÉE DE L'AIR

- *இந்திய வான்படை, பிரான்ஸ் வான் மற்றும் விண் படை ஆகியவை இணைந்து 'டெசர்ட் நைட்–21' (பாலைவன வீரன்) என்ற பெயரில், கூட்டுப் பயிற்சியை, இராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் விமானப்படை தளத்தில் ஜன.24 வரை மேற்கொள்கின்றன.*
- *பிரான்ஸ் தரப்பில் ரபேல், ஏர்பஸ் ஏ–330 டேங்கர், ஏ–400 எம் போக்குவரத்து விமானம் மற்றும் 175 வீரர்கள் கலந்து கொள்கின்றனர். இந்திய வான்படை சார்பில் மிராஜ்–2000, சுகாய், ரபேல், ஐஎல்–78, அவாக்ஸ் மற்றும் ஏஇடபிள்யூ&சி விமானங்கள் பங்கேற்கின்றன. இந்தியா–பிரான்ஸ் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக, இருநாட்டு வான்படைகளும், 'கருடா' என்ற பெயரில் ஆறு முறை கூட்டுப்பயிற்சியை மேற்கொண்டுள்ளன.*

---

**10. 'இந்திய புதுமை குறியீட்டை' வெளியிடுகிற நிறுவனம் எது?**

***அ) NITI ஆயோக் ☑***

*ஆ) CSIR*

*இ) RBI*

*ஈ) ISRO*

NITI Aayog

- *NITI ஆயோக் அதன் இரண்டாவது இந்திய புதுமை குறியீட்டெண் 2020'ஐ சமீபத்தில் வெளியிட்டது. புதுமையான கண்டுபிடிப்புகளுக்கு ஆதரவு வழங்கி, அதன்மூலம் தங்களது புதுமையான கொள்கைகளை மேம்படுத்தும் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் செயல்பாடுகளின் அடிப்படையில் அவற்றிற்கான தரவரிசையை இந்திய புதுமை குறியீட்டெண் 2020 வழங்குகிறது.*
- *முதலாவது புதுமை குறியீட்டெண், கடந்த 2019 அக்டோபர் மாதம் வெளியிடப்பட்டது. மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் செயல்பாடுகளை முறையாக ஒப்பிடும் வகையில் 17 முக்கிய மாநிலங்கள்; 10 வடகிழக்கு, மலைப்பிரதேச மாநிலங்கள்; 9 நகர மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் என அவை பிரிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு குறியீட்டில் கர்நாடகா முதலிடத்தைத் தக்கவைத்துக் கொண்டது. அதைத்தொடர்ந்து மகாராஷ்டிரா உள்ளது.*

---

**1.** **பின்வரும் எந்த விடுதலைப் போராட்ட வீரரின் பிறந்தநாள், ஆண்டுதோறும் 'பராக்கிரம திவாஸ்' என கொண்டாடப்படும்?**

அ) சர்தர் வல்லபபாய் படேல்

**ஆ) 'நேதாஜி' சுபாஷ் சந்திரபோஸ் ☑**

இ) திருப்பூர் குமரன்

ஈ) பாலகங்காதர் திலகர்



- ❖ ஜன.23ஆம் தேதியன்று வரும் 'நேதாஜி' சுபாஸ் சந்திரபோஸின் பிறந்த நாள், இனி ஆண்டுதோறும், "பராக்கிர திவாஸ்" என்று கொண்டாடப்படும் என்று மத்திய கலாச்சார அமைச்சகம் அறிவித்தது. 'துணிவுக்கான நாள்' என்பது இதன் பொருளாகும். 2021 ஜனவரி 23 முதல் அன்று 'நேதாஜி' சுபாஸ் சந்திரபோஸின் 125ஆவது பிறந்தநாள் விழாவை இந்திய அரசு கொண்டாடவுள்ளது என்றும் அமைச்சகம் கூறியுள்ளது. ஜனவரி 23 முதல் 2022 ஜனவரி 23 வரை தொடர் நிகழ்வுகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

---

**2.** **MGNREGA'இன்கீழ், வேலை நாட்களின் எண்ணிக்கையை நூறிலிருந்து 150 நாட்களாக உயர்த்தியுள்ள மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

ஆ) குஜராத்

**இ) உத்தரகண்ட் ☑**

ஈ) ஹிமாச்சல பிரதேசம்

- ❖ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தின் (MGNREGA)கீழ், வேலை நாட்களின் எண்ணிக்கையானது நூறிலிருந்து 150ஆக உயர்த்தப்படும் என்று உத்தரகண்ட் மாநில அரசு அறிவித்துள்ளது. அம்மாநில முதலமைச்சர் திரிவேந்திர சிங் ராவத்தின் கூற்றுப்படி, அதற்கான முழுச்செலவும் மாநில அரசாலேயே ஏற்றுக்கொள்ளப்படும்.
- ❖ மாநிலத்தில் உள்ள வேலையில்லாதவர்கள் வேலைவாய்ப்புகளைத் தேட உதவும் வகையில், 'உத்தரகண்ட் ஆஜீவிகா' செயலியும் தொடங்கப்பட்டது.

---

**3.** **நாடுகளுக்கிடையேயான போக்குவரத்து வாகன விதிகள் – 2021'இன்படி, நாடுகளுக்கு இடையேயான போக்குவரத்துக்கு அனுமதி வழங்கும் அதிகாரம் எந்த ஆணையத்திற்கு உள்ளது?**

அ) சாலைப் போக்குவரத்து அமைச்சகம்

**ஆ) மாநில போக்குவரத்து ஆணையம் ☑**

இ) மண்டல போக்குவரத்து அலுவலகம்

ஈ) இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்




- ❖ மத்திய சாலைப் போக்குவரத்து & நெடுஞ்சாலை அமைச்சகமானது அண்மையில், நாடுகளுக்கிடையேயான போக்குவரத்து வாகன விதிகள்–2021'ஐ அறிவித்தது.
- ❖ இந்தப் புதிய விதிகளின்படி, மாநில போக்குவரத்து ஆணையத்தால் நாடுகளுக்கிடையேயான போக்குவரத்தை மேற்கொள்வதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்க முடியும். அதன் செல்லுபடிகாலம் ஓராண்டாகும். இப்புதிய விதிகள் இந்தியாவிற்கும் அதன் அண்டை நாடுகளுக்கும் இடையில் பயணிகள் மற்றும் சரக்கு வாகனங்களின் இயக்கத்தை ஒழுங்குபடுத்துகின்றன.

---

**4.** **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'டெபீசியா' அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ) அஸ்ஸாம் ☑**

ஆ) மேகாலயா

இ) மணிப்பூர்

ஈ) திரிபுரா



- ❖ அஸ்ஸாம் மாநில முதலமைச்சர், கௌகாத்தியின் புறநகரில் உள்ள 'டெபீசியா' என்னும் அறிவியல் நகரத்திற்கு அடிக்கல் நாட்டினார். இது மொத்தம் ₹184 கோடி செலவில் கட்டப்படவுள்ளது. இதன் பிரதான கட்டம் தேசிய அறிவியல் அருங்காட்சியகம், நடுவணரசின் கலாசார விவகாரத்துறை மற்றும் மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் கட்டப்பட்டு வருகிறது.

---

**5.** **ரிசர்வ் வங்கியின் அண்மைய அறிவிப்பின்படி, இந்தியாவில், எத்தனை வங்கிகள் உள்நாட்டு அமைப்பு ரீதியாக முக்கியமான வங்கிகள் (D–SIB's) என வகைப்படுத்தப்பட்டுள்ளன?**

அ) இரண்டு

**ஆ) மூன்று ☑**

இ) நான்கு

ஈ) ஐந்து

- ❖ பாரத வங்கி, ICICI வங்கி மற்றும் HDFC வங்கி ஆகியவற்றை உள்நாட்டு அமைப்பு ரீதியாக முக்கியமான வங்கிகளாக (D–SIB) இந்திய ரிசர்வ் வங்கி வகைப்படுத்தியுள்ளது. மார்ச் 31, 2020 அன்று சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இந்த வகைப்படுத்தல் நிகழ்ந்துள்ளது. இந்த வங்கிகளின் நொடிப்பு, நாட்டை கணிசமாக பாதிக்கும் என்பதே இதன் பொருளாகும்.

---

**6.** **எந்தப் பிரபலமான பயணிகள் ரயிலுக்கு 'நேதாஜி எக்ஸ்பிரஸ்' என்று பெயர்மாற்றஞ்செய்யப்பட்டுள்ளது?**

**அ) ஹௌரா – கல்கா மெயில் ☑**

ஆ) மும்பை – தானே மெயில்

இ) லக்னோ – தில்லி மெயில்

ஈ) கான்பூர் – தில்லி மெயில்




- ❖ இரயில்வே அமைச்சகம், ஹௌரா – கல்கா மெயில் இரயிலுக்கு, 'நேதாஜி எக்ஸ்பிரஸ்' என்று பெயர் மாற்றியுள்ளது. ஹௌரா – கல்கா மெயில் மிகவும் பிரபலமான மற்றும் இந்திய இரயில்வேயின் மிகவும் பழைய இரயில்களுள் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.
- ❖ 'நேதாஜி' சுபாஷ் சந்திரபோஸின் 125ஆவது பிறந்தநாளின் ஒரு பகுதியாக இது அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 1941'இல் கல்கத்தாவில் உள்ள தனது வீட்டிலிருந்து தப்பியபோது, 'நேதாஜி' பீகாரிலிருந்து இந்த இரயிலில் சென்றதாகக் கூறப்படுகிறது.

---

**7.அண்மையில் காலஞ்சென்ற மூத்த புற்றுநோயியல் நிபுணரும், அடையாறு புற்றுநோய் நிறுவனத்தின் தலைவருமானவரின் பெயர் என்ன?**



*அ) Dr. முத்துலெட்சுமி ரெட்டி*

***ஆ) Dr. V சாந்தா ☑***

*இ) Dr. ஆனந்தி*

*ஈ) Dr. காதம்பனி*

- *இந்தியாவின் மூத்த புற்றுநோயியல் நிபுணரும், அடையாறு புற்று நோய் நிறுவனத்தின் தலைவருமான Dr V சாந்தா (93) சமீபத்தில் காலமானார். அவர் தனது ஐம்பதாண்டுகால மருத்துவ சேவை வாழ்வில், அந்நிறுவனத்தில் ஏழை எளியோருக்கு சேவைசெய்வதில் பெயர்பெற்றவர். பத்மஸ்ரீ, மகசேசே விருது, பத்ம பூஷண் மற்றும் பத்ம விபூஷன் ஆகிய பல்வேறு விருதுகளை அவர் பெற்றுள்ளார்.*

---

**8.சமீப செய்திகளில் வந்த, 'டிராகன் பழத்தின்' பூர்வீகம் எது?**



*அ) ஆஸ்திரேலியா*

***ஆ) அமெரிக்கா ☑***

*இ) ஐரோப்பா*

*ஈ) ஆசியா*

- *'டிராகன் பழம்' என்பது அமெரிக்காவை பூர்வீகமாகக்கொண்ட ஒரு காட்டுக்கற்றாழை தாவர இனமாகும். இது அந்தப் பிராந்தியங்களில் 'பிதாஹயா' என அழைக்கப்படுகிறது. இவ்வகை பழ இனங்கள் முதன் முதலில் 1990'க்குப்பிறகு இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்டன.*
- *தமிழ்நாடு, குஜராத், மேற்கு வங்கம் உள்ளிட்ட இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள் இப்பழங்களை பயிரிடுகின்றன. இருப்பினும், இந்தியா தனது தேவையைப் பூர்த்தி செய்வதற்கு இந்தப் பழத்தை இறக்குமதி செய்கிறது. சமீபத்தில், குஜராத் மாநில அரசு, டிராகன் பழத்தை 'கமலம்' என்று பெயர்மாற்ற செய்ய முன்மொழிந்தது.*

---

**9. சாலைப் போக்குவரத்து & நெடுஞ்சாலை அமைச்சகமானது புவிசார்ந்த இடையூறுக்கான மேலாண்மைக்காக கீழ்க்காணும் எந்த அமைப்புடன் கூட்டிணைந்துள்ளது?**



*அ) ISRO*

***ஆ) DRDO ☑***

*இ) BARC*

*ஈ) CSIR*

- *தொழில்நுட்பப் பரிமாற்றம், புவிசார்ந்த இடையூறுக்கான நிலையான மேலாண்மை ஒத்துழைப்பு ஆகியவற்றிற்காக மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகமும், மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனமும் (DRDO), புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டுள்ளன.*
- *DRDO ஆய்வகங்களுள் ஒன்றான Defence Geo Informatics Research Establishment (DGRE) இதற்கான பணியில் பயன்படுத்தப்படும். நிலச் சரிவுபோன்ற இயற்கைப்பேரிடர்களால் தேசிய நெடுஞ்சாலைகளில் சாலைப் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இந்த முன்முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

---

**10. 'சிந்தன் பைதக்' என்பது எந்த நடுவண் அமைச்சகத்தின் ஆய்வுக்கூட்டமாகும்?**



*அ) தகவல்தொடர்பு அமைச்சகம்*

*ஆ) கலாச்சார அமைச்சகம்*

***இ) துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து அமைச்சகம் ☑***

*ஈ) சுற்றுலா அமைச்சகம்*

- *துறைமுகங்கள் மேம்பாடு குறித்த ஆய்வுக் கூட்டம் (சிந்தன் பைதக்), குஜராத்தின் கட்ச் பகுதியில் நடைபெறுகிறது. இதில் கடல்சார் தொலைநோக்கு-2030'க்கான திட்டங்கள் இறுதி செய்யப்படுகின்றன. முதன்மை துறைமுகங்களின் தலைவர்கள் மற்றும் துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்பார்கள்.*
- *துறைமுகங்களின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கான கருத்துக்களைப் பெறுவது, சரக்குகள் கையாளும் செலவைக் குறைப்பதற்கு சர்வதேச நடைமுறைகளைப் பின்பற்றுவது, தொழில் செய்வதை எளிதாக்குவது போன்ற விஷயங்கள் குறித்து இந்த மூன்று நாள் ஆய்வுக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படும்.*

---

**1. நீர்மூழ்கிக்கப்பல் மீட்பு ஆதரவு மற்றும் கடற்படைகளுக்கு இடையிலான ஒத்துழைப்புக்காக பின்வரும் எந்த நாட்டுடனான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது?**

*அ) ஜப்பான்*

***ஆ) சிங்கப்பூர் ☑***

*இ) பிரான்ஸ்*

*ஈ) இலங்கை*

❖ *ஐந்தாவது இந்தியா – சிங்கப்பூர் பாதுகாப்பு அமைச்சர்களுக்கிடையேயான பேச்சுவார்த்தைக்கு சிங்கப்பூர் பாதுகாப்பு அமைச்சர் Dr எங் இங்க் ஹென் உடன் இணைந்து பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமைவகித்தார். அப்போது, இந்தியா–சிங்கப்பூர் கடற்படைகளுக்கு இடையேயான நீர்மூழ்கி மீட்பு ஆதரவு மற்றும் ஒத்துழைப்புக்கான செயல்படுத்துதல் ஒப்பந்தம் அமைச்சர்கள் முன்னிலையில் கையெழுத்தானது.*

---

**2. மலைப்பாங்கான பகுதிகளில் தொலைத்தொடர்பு இணைப்பை மேம்படுத்த, இமாச்சலப் பிரதேசத்துடன் கைகோர்த்துள்ள பொதுத் துறை பிரிவு எது?**

*அ) PFC Ltd*

***ஆ) PowerGrid ☑***

*இ) REC Ltd*

*ஈ) GAIL Ltd*

❖ *மலைப்பிரதேசங்களில் தொலைத்தொடர்பு இணைப்பை மேம்படுத்துவதற்காக மத்திய எரிசக்தி அமைச்சகத்தின்கீழ் செயல்படும் இந்திய மின்தொகுப்பு நிறுவனம், இமாச்சலப் பிரதேச மின் வாரியத்துடன் அண்மையில் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.*

❖ *இந்த ஒப்பந்தத்தின்கீழ், காங்க்ரா, உனா, மண்டி, குலு, பிலாஸ்பூர், சிர்மோர், பாலம்பூர், சுந்தர்நகர் உள்ளிட்ட மாநிலத்தின் மலைப்பகுதிகளில் தொலைத் தொடர்பு இணைப்பை வழங்க அந்தப் பொதுத்துறை நிறுவனம் இலக்கு வைத்துள்ளது. கரடுமுரடான வானிலை மற்றும் நிலச்சரிவு காரணமாக குறைந்த தொலைத்தொடர்பு இணைப்பு அம்மாநிலத்தில் உள்ளது.*

---

**3. இந்திய இராணுவம், கடற்படை, வான்படை மற்றும் கடலோர காவல்படையின் சொத்துக்களை உள்ளடக்கிய இராணுவப் பயிற்சியின் பெயர் என்ன?**

*அ) ஹிம்விஜய் பயிற்சி*



***ஆ) கவாச் பயிற்சி ☑***

*இ) கபில் பயிற்சி*

*ஈ) தர்ஷன் பயிற்சி*

❖ *இந்திய இராணுவம், கடற்படை, வான்படை மற்றும் கடலோர காவல் படை ஆகியவை இணைந்து, அந்தமான் கடல் பகுதியில், 'கவாச்' என்ற பெயரில் மிகப்பெரியளவிலான கூட்டுப்பயிற்சியை மேற்கொள் –கின்றன. அந்தமானில் உள்ள கூட்டுப்படை கட்டுப்பாட்டு மையத்தின் தலைமையில் இந்தப் பயிற்சிகள் நடைபெறுகின்றன.*

❖ *இதில் இராணுவத்தின் நீர் மற்றும் நிலப்பகுதியில் போரிடும் படைப் பிரிவு, கடற்படையின் போர்க்கப்பல்கள், வான்படையின் ஜாக்குவார் மற்றும் போக்குவரவு வானூர்திகள், கடலோர காவல்படை கலங்கள் பங்கேற்கின்றன.*

---

**4. எந்த மத்திய அமைச்சகத்தின் கீழ், ஒரு 'மினி இரத்னா' நிறுவனமாக இந்திய பருத்திக் கழகம் செயல்பட்டு வருகிறது?**

***அ) ஜவுளித்துறை அமைச்சகம் ☑***



*ஆ) வேளாண் அமைச்சகம்*

*இ) MSME அமைச்சகம்*

*ஈ) சுற்றுச்சூழல் & வனம் அமைச்சகம்*

❖ *இந்திய பருத்திக் கழகம் என்பது ஜவுளி அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு பொதுத்துறை நிறுவனமாகும். இது மும்பையை தலைமையிடமாகக் கொண்ட ஒரு மினி இரத்னா நிறுவனமாகும்.*

❖ *நடப்பு பருத்தி பருவத்தில் (அக்டோபர் 2020 முதல் செப்டம்பர் 2021 வரை) குறைந்தது 10 இலட்சம் கட்டு பருத்தியை ஏற்றுமதி செய்ய திட்டமிட்டுள்ளதாக இந்திய பருத்திக் கழகம் சமீபத்தில் அறிவித்தது. வங்கதேசம் ஏற்றுமதிக்கான இலக்காக இருக்கும்.*

---

**5. முதல் கேலோ இந்தியா சான்ஸ்கர் குளிர்கால விளையாட்டு விழா நடைபெறவுள்ள இடம் எது?**

***அ) லடாக் ☑***



*ஆ) சிம்லா*

*இ) உதகமண்டலம்*

*ஈ) டேராடூன்*

❖ *லடாக்கின், கார்கில் மாவட்டத்திலுள்ள சான்ஸ்கரில் முதல் கேலோ இந்தியா சான்ஸ்கர் குளிர்கால விளையாட்டு விழாவை மத்திய விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு தொடங்கிவைத்தார்.*

❖ *லடாக் யூனியன் பிரதேச நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த 13 நாள் திருவிழா, குளிர்கால சுற்றுலாப் பயணிகளுக்கு சான்ஸ்கரை ஒரு முக்கிய இடமாக ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. லடாக்கை ஐஸ் ஹாக்கிக்கான மையமாக மேம்படுத்த விளையாட்டு அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.*

---

**6. மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தால் நிர்வகிக்கப்படும் OTT அலைவரிசையின் பெயர் என்ன?**

*அ) India Knowledge*

*ஆ) New India*

*இ) Indian Science*

***ஈ) India Science ☑***

❖ *தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் OTT சேனல், 2021 ஜன.15ஆம் தேதியுடன், 2 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இந்த OTT சேனலை அறிவியல் & தொழில்நுட்ப துறையின் விஞ்ஞான் பிரசார் என்ற தன்னாட்சி அமைப்பு நிர்வகிக்கிறது. இணையதளம் மூலமாகவும், காணக்கூடிய இந்த OTT சேனல் கடந்த 2019 ஜன.15 அன்று தொடங்கப்பட்டது.*

❖ *மக்களிடையே அறிவியல் மனநிலை மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, OTT என்ற நவீன தொழில்நுட்பத்தில் 'India Science' என்ற இந்த அலைவரிசை ஒளிபரப்பப்பட்டு வருகிறது.*

---

**7.** **நியாவிலைப் பொருட்களை பொதுமக்களின் வீடுகளுக்கேச் சென்று வழங்கும் திட்டத்தை தொடங்கியுள்ள மாநிலம் எது?**

*அ) கேரளம்*

***ஆ) ஆந்திர பிரதேசம் ☑***

*இ) தெலங்கானா*

*ஈ) பீகார்*

- *YS ஜெகன் மோகன் ரெட்டி தலைமையிலான ஆந்திர பிரதேச மாநில அரசு, நியாவிலைப் பொருட்களை பொதுமக்களின் வீடுகளுக்கேச் சென்று வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதில் 9,260 "நடமாடும் விநியோக அலகுகள்" / வாகனங்கள் மாநிலத்தில் உள்ள குடும்ப அட்டைதாரர்களின் வீடுகளுக்கேச் சென்று நியாவிலைப் பொருட்களை (அரிசி மற்றும் பிற அத்தியாவசிய பொருட்கள்) வழங்கும்.*
- *இந்நடவடிக்கை உணவுப்பொருள் கலப்படத்தை அகற்றுவதையும், நியாயவிலைக் கடைகளில் நீண்டவரிசைகள் ஏற்படுவதைத் தடுப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.*

---

**8.** **சர்வதேச கல்வி நாள் அனுசரிக்கப்படும் தேதி எது?**

*அ) ஜனவரி 21*

*ஆ) ஜனவரி 22*

*இ) ஜனவரி 23*

***ஈ) ஜனவரி 24 ☑***




- *ஆண்டுதோறும் வரும் ஜனவரி.24ஆம் தேதியை சர்வதேச கல்வி நாளாக UNESCO அனுசரிக்கிறது. வளர்ச்சி மற்றும் அமைதியில் கல்வியின் பங்கை இது கொண்டாடுகிறது. "Recover and Revitalize Education for the COVID-19 Generation" என்பது நடப்பாண்டில் (2021) வரும் சர்வதேச கல்வி நாளுக்கான கருப்பொருளாகும்.*
- *கடந்த 2018 டிசம்பர் அன்று, ஐ.நா பொது அவை ஜன.24'ஐ, 'சர்வதேச கல்விநாள்' என அறிவித்து தீர்மானம் நிறைவேற்றியது. கல்வி மற்றும் கற்றலை மிகப்பெரிய புதுப்பிக்கத்தக்க வளமாகக் கருதும் இந்நாள், கல்வி ஓர் அடிப்படை உரிமை என்பதை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துகிறது.*

---

**9.** **நடப்பாண்டு (2021) வரும் தேசிய வாக்காளர்கள் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

*அ) Proud to be a voter – Ready to vote*

***ஆ) Making Our Voters Empowered, Vigilant, Safe and Informed ☑***

*இ) No Voter to be Left Behind*

*ஈ) Proud to be a voter*

- *தேர்தல் நடைமுறையில் வாக்காளர்கள் தங்களுடைய மேம்பட்ட பங்களிப்பை வழங்கவேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாக கடந்த 2011ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி.25 அன்று தேசிய வாக்காளர்கள் நாள் கொண்டாடப்படுகிறது.*
- *1950 ஜனவரி.25 அன்று இந்திய தேர்தல் ஆணையம் நிறுவப்பட்டதன் நினைவாக இந்நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. புதிய வாக்காளர்களை ஊக்கப்படுத்தி, அவர்களை பதிவுறவைத்து, அவர்களை ஜனநாயக கடமையை ஆற்றவைப்பதே இந்நாளின் முக்கிய நோக்கமாகும். "Making Our Voters Empowered, Vigilant, Safe and Informed" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.*

---

**10.** **அண்மையில், "பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்தில்" மீண்டும் இணைந்த நாடு எது?**

*அ) ஆஸ்திரேலியா*

***ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑***

*இ) இந்தியா*

*ஈ) ஜப்பான்*




- *காலநிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் ஒப்பந்தத்தில் ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA) மீண்டும் இணைந்துள்ளது. முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின், இந்த ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுவதற்கான உத்தரவை, புதிய அதிபர் ஜோ பிடன் நீக்கி உத்தரவிட்டுள்ளார்.*
- *காலநிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் ஒப்பந்தம் என்பது ஐநா காலநிலை மாற்றம் தொடர்பான கட்டமைப்பின்கீழ் உள்ள ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும். இது, 2015'இல் நடைமுறைக்கு வந்தது.*

---


**1.** அறிவியலாளர்கள், அரிய வெப்பமான பிரகாசமான புற–ஊதா விண்மீன்களை ஒரு தொகுதியில் கண்டறிந்துள்ளனர். அவர்கள், எந்தச் செயற்கைக்கோளில் உள்ள தொலைநோக்கியை இதற்கு பயன்படுத்தினர்?

***அ) AstroSat ☑***

*ஆ) CartoSat–2*

*இ) Risat–7E*

*ஈ) Insat– 4E*



- *பால்வெளியில் உள்ள NGC 2808 எனப்படும் புதிரான, உருண்டையான, குறைந்தது ஐந்து தலைமுறைகள் விண்மீன்களை கொண்ட மிகப்பெரிய விண்மீன் தொகுப்பை ஆராய்ந்துவரும் வானியலாளர்கள், அரிதான, சூடான மற்றும் வெளிச்சம் நிறைந்த புற–ஊதா விண்மீன்களை அதில் கண்டறிந்துள்ளனர். வானியலாளர்கள், இதற்கென இந்தியாவின் முதல் பல அலைநீள விண்வெளி செயற்கைக்கோளான ஆஸ்ட்ரோசாட்டில் உள்ள புற–ஊதா படமாக்கள் தொலைநோக்கியைப் பயன்படுத்தினர்.*

---

**2.**யூரியா ஆலை தொடர்பாக அண்மைச்செய்திகளில் வெளியான 'நம்ரூப்' அமைந்துள்ள மாநிலம் எது?

***அ) அஸ்ஸாம் ☑***

*ஆ) சத்தீஸ்கர்*

*இ) பீகார்*

*ஈ) உத்தரகண்ட்*



- *நம்ரூப் என்பது அஸ்ஸாம் மாநிலத்தின் தென்கீழைப்பகுதியில் அமைந்து உள்ள ஒரு நகரமாகும். சமீபத்தில், நம்ரூப்பில் அமையவிருக்கும் யூரியா ஆலை தொடர்பாக வேதியியல் மற்றும் உர அமைச்சகம் ஒரு கூட்டம் நடத்தியது. 12.7 இலட்சம் மில்லியன் மெட்ரிக் டன் உற்பத்தித் திறனுடைய திட்டத்தை தேசிய உரங்கள் நிறுவனம், இந்திய எண்ணெய் நிறுவனம், தேசிய வேதிகள் மற்றும் உரங்கள் நிறுவனம், பிரம்மபுத்ரா பள்ளத்தாக்கு உர நிறுவனம் மற்றும் அஸ்ஸாம் அரசு இணைந்து செயல்படுத்தவுள்ளது.*

---

**3.** சமீபத்தில், NASA'ஆல் பகிரப்பட்ட Abell 370 என்றால் என்ன?

*அ) கருந்துளை*

*ஆ) புறக்கோள்*

***இ) விண்மீன் திரள் ☑***

*ஈ) விண்கல்*



- *அண்மையில் NASA அதன் ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கி மூலம் எடுக்கப்பட்ட விண்மீன் திரள்களின் மிகப்பெரிய தொகுதியான ஆபெல் 370'இன் நிழற்படத்தை வெளியிட்டது.*
- *NASA'இன் அறிக்கையின்படி, இந்தத்தொகுதியின் பேரீர்ப்புவிசை ஆனது, ஒளி கடந்துசெல்லும்போது அதனை வளைக்கச் செய்கிறது. இதன் காரணமாக, புவியிலிருந்து 4.9 பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ள ஆபெல் 370'க்கு புறத்தே உள்ள விண்மீன் திரள்களை நம்மால் காண முடிவதில்லை.*

---

**4.**அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற, '1776 கமிஷன் அறிக்கை' என்பதுடன் தொடர்புடைய நாடு எது?

*அ) ஜப்பான்*

*ஆ) சீனா*

***இ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑***

*ஈ) ஜெர்மனி*

- *அமெரிக்காவின் முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப், கடந்த ஆண்டு செப்டம்பரில் தொடங்கிய '1776 கமிஷன்' அறிக்கையை வெள்ளை மாளிகை சமீபத்தில் வெளியிட்டது. நாட்டில் தேசப்பற்றுக் கல்வியை மேம்படுத்துவதற்காக, '1776 ஆணையம்' என்னும் பெயரில் தேசிய ஆணையம் அமைக்கும் உத்தரவில் டிரம்ப் கையெழுத்திட்டிருந்தார்.*
- *அடிமைப்படுத்தப்பட்ட ஆப்பிரிக்க குடிகள் வந்து நானூறு ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும், தி நியூயார்க் டைம்ஸின், '1619 முன்முயற்சி'க்கு எதிர்ப்பாக '1776 ஆணையம்' காணப்பட்டது.*

---

**5.**மேகாலயா, மணிப்பூர் & திரிபுரா ஆகிய மும்மாநிலங்களின் மாநில உருவாக்க நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

*அ) ஜனவரி 19*

***ஆ) ஜனவரி 21 ☑***

*இ) ஜனவரி 23*

*ஈ) ஜனவரி 25*




- *மேகாலயா, மணிப்பூர் மற்றும் திரிபுரா ஆகிய மூன்று மாநிலங்களும் தங்களது 49ஆவது மாநில நாளை 2021 ஜனவரி.21ஆம் தேதியன்று கொண்டாடின. 1972 ஜனவரி.21 அன்று, இம்மூன்று மாநிலங்களும் 1971ஆம் ஆண்டு வடகிழக்கு பிராந்திய (மறுசீரமைப்பு) சட்டத்தின்கீழ் முழுமையான மாநிலங்களாக மாறின.*
- *இது, யூனியன் பிரதேசங்களாக இருந்த மிசோரம் மற்றும் அருணாச்சல பிரதேசம் ஆகியவற்றை மாநிலங்களாக உருவாக்கப்ப –டுவதற்கும் பிப்ரவரி 21, 1987 அன்று மாநிலங்களாக அறிவிக்கப்படு –வதற்கும் வழிவகுத்தது*

---

**6.** அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற, 'HAWK–I' இயக்கதளம், பின்வரும் எவ்வமைப்புக்கு உரியதாகும்?

*அ) DRDO*

*ஆ) BHEL*

***இ) HAL ☑***

*ஈ) CSIR*

- *உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட திறன்மிகு வான்வழி எதிர்ப்பு ஆயுதத்தை (Smart Anti–Airfield Weapon – SAAW) பாதுகாப்பு ஆராய்ச்சி & மேம்பாட்டு நிறுவனம் வெற்றிகரமாக பரிசோதித்தது. ஒடிசா கடற்கரைக்கு அருகிலுள்ள ஹிந்துஸ்தான் ஏரோநாடிக்ஸ் நிறுவனத்தின் ஹாக்–I தளத்தில் இந்தச் சோதனை நடத்தப்பட்டது.*
- *ஹைதராபத்தில் உள்ள DRDO'இன் இமாரத் ஆராய்ச்சி மையத்தால் இவ்வாயுதம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆயுதங்களின் சான்றளிப்பிற்காக HAL அதன் ஹாக்–I தளத்தை பயன்படுத்துகிறது.*

---

**7.** சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'MASCRADE – 2021' என்பது பின்வரும் எந்த இந்திய அமைப்பின் முன்முயற்சியாகும்?

*அ) CII*

***ஆ) FICCI ☑***

*இ) CAIT*

*ஈ) ASSOCHAM*

- *FICCI எனப்படும் இந்திய தொழில், வர்த்தக சங்கங்களின் கூட்டமைப்பின் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் கடத்தல், போலியான நடவடிக்கைகளுக்கு எதிரான குழு ஏற்பாடு செய்திருந்த 7ஆம் 'MASCRADE–2021' கடத்தல், போலியான வர்த்தகங்களுக்கு எதிரான இயக்கத்தை மத்திய சுகாதார, குடும்ப நல அமைச்சர் Dr ஹர்ஷ் வர்தன் தொடங்கி வைத்தார்.*
- *அதிகரித்துவரும் கடத்தல், போலியான பொருட்களுக்கு எதிராக புதுமையான கொள்கை மற்றும் தீர்வுகள் தொடர்பாக விவாதிக்க இந்த நிகழ்ச்சி நோக்கம் கொண்டுள்ளது.*

---

**8.** "The New Normal and Safe and Healthy Tourism" என்ற கருப்பொருளின்கீழ், சமீபத்தில் நடத்தப்பட்ட கூட்டம் எது?

***அ) ஆசிய ஒத்துழைப்பு பேச்சுவார்த்தை – அமைச்சரவைக் கூட்டம் ☑***

*ஆ) BRICS அமைச்சரவைக் கூட்டம்*

*இ) G20 அமைச்சரவைக் கூட்டம்*

*ஈ) G7 அமைச்சரவைக் கூட்டம்*

- *ஆசிய ஒத்துழைப்பு பேச்சுவார்த்தையின் 17ஆவது அமைச்ரவைக் கூட்டம், சமீபத்தில், "The New Normal and Safe and Healthy Tourism" என்ற கருப்பொருளின்கீழ் நடத்தப்பட்டது. மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செயலாளர் ரிவா கங்குலி தாஸ் இந்தக் கூட்டத்தில் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தினார். கடந்த 2019ஆம் ஆண்டில் பிரதமர் மோடியால் அறிவிக்கப்பட்ட இந்தோ–பசிபிக் பெருங்கடல் முன்னெடுப்பு குறித்து அவர் உரையாற்றினார்.*

---

**9.** 'Asia and the Pacific Regional Overview of Food Security and Nutrition' என்ற தலைப்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அமைப்பு எது?

*அ) உலக பொருளாதார மன்றம்*

***ஆ) ஐக்கிய நாடுகள் ☑***

*இ) ஆசிய வளர்ச்சி வங்கி*

*ஈ) உலக வங்கி*

- *ஐக்கிய நாடுகளின் முகமைகளான, UNICEF, FAO, WFP மற்றும் WHO ஆகியவை இணைந்து Asia and the Pacific Regional Overview of Food Security and Nutrition' என்ற தலைப்பில் அறிக்கையொன்றை வெளியிட்டன. இது, ஆசிய & பசிபிக் பிராந்தியத்தில் ஊட்டச்சத்தின் நிலைகுறித்த மூன்றாவது ஆண்டறிக்கையாகும். ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்தில், 24 மில்லியன் பேர் உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாக இவ்வறிக்கை குறிப்பிட்டுள்ளது.*

---

**10.** பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட இந்தியாவின் முதல் எரிவாயு பரிமாற்றகம் எது?

***அ) இந்திய வாயு பரிமாற்றகம் ☑***

*ஆ) இந்திய எண்ணெய் பரிமாற்றகம்*

*இ) இந்திய இயற்கை எரிவாயு பரிமாற்றகம்*

*ஈ) இந்திய பெட்ரோலிய பரிமாற்றகம்*

- *இந்திய எரிவாயு பரிமாற்றகம் (IGX) என்பது இந்திய ஆற்றல் பரிமாற்றகத்திற்கு (IEX) முற்றிலும் சொந்தமான ஒரு துணை நிறுவனமாகும். ஆற்றல் பரிமாற்றக விதிமுறைகள்–2020'இன்கீழ், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியத்திலிருந்து அங்கீகாரம்பெற்ற நாட்டின் முதல் எரிவாயு பரிமாற்றகம் இதுவாகும்.*
- *அதானியின் டோட்டல் கேஸ் மற்றும் டோரண்ட் கேஸ் ஆகியவை அண்மையில் இந்திய ஆற்றல் பரிமாற்றகத்தில் தலா ஐந்து சதவீத சமபங்குகளை வாங்கியுள்ளன.*

---

**1.** அடிமை வர்த்தகத்துடன் தொடர்புடைய வில்லியம் பெக்போர்ட் மற்றும் சர் ஜான் காஸ் ஆகியோரின் சிலைகளை அகற்றுவதாக அறிவித்துள்ள நகரம் எது?



*அ) வாஷிங்டன்*

***ஆ) லண்டன் ☑***

*இ) ரோம்*

*ஈ) மாஸ்கோ*

❖ *கில்ட்ஹால் சிலைகளின் இல்லத்திலிருந்து வில்லியம் பெக்போர்ட் மற்றும் சர் ஜான் காஸ் ஆகியோரின் சிலைகளை அகற்ற லண்டன் ஒப்புதல் அளித்தது. பிளாக் லிவ்ஸ் மேட்டர் ஆர்ப்பாட்டங்களுக்குப் பிறகு, நகரக்கழகம் இனவெறியைக் கையாள்வதற்காக ஒரு பணிக்குழுவை அமைத்தது; அது, இவ்விரு நபர்களின் சிலைகளை அகற்ற பரிந்துரைத்தது. நகரத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இம்முடிவுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.*

---

**2.** உலக பொருளாதார மன்றத்தின் அண்மைய, 'உலகளாவிய இடர் அறிக்கை'யின்படி, பின்வரும் எது மிகப்பெரிய நீண்டகால இடராகும்?



*அ) வணிக அச்சுறுத்தல்கள்*

***ஆ) காலநிலை அச்சுறுத்தல்கள் ☑***

*இ) ஆயுத அச்சுறுத்தல்கள்*

*ஈ) மருத்துவ அச்சுறுத்தல்கள்*

❖ *உலக பொருளாதார மன்றம் (WEF) சமீபத்தில் தனது அறிக்கையின் 15 வது பதிப்பை "உலகளாவிய இடர் அறிக்கை" என்ற தலைப்பில் வெளியிட்டது. வரலாற்றில் முதல்முறையாக, 'காலநிலை அச்சுறுத்தல்கள்', அறிக்கையில் உள்ள அனைத்து நீண்டகால இடர்களிலும் முதன்மையானதாக உள்ளது.*

❖ *சைபர் தாக்குதல்கள் மற்றும் தரவு திருட்டு போன்ற தொழில்நுட்ப இடர்கள், உலகளாவிய ஆளுமை தோல்வி போன்ற அரசியல் இடர்கள் மற்றும் நீர் நெருக்கடி போன்ற சமூக இடர்கள் ஆகியவை பிற நீண்டகால இடர்களுள் அடங்கும். 'பொருளாதார மோதல்கள்' மற்றும் 'உள்நாட்டு அரசியல் துருவ முனைப்பு' ஆகியவை குறுகிய கால இடர்களாகும்.*

---

**3.** அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'SAMVAD' மாநாடு, இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே நடைபெற்றது?

SAMVAD

***அ) ஜப்பான் ☑***

*ஆ) இலங்கை*

*இ) வங்காளதேசம்*

*ஈ) ஆஸ்திரேலியா*

❖ *இந்தியாவும் ஜப்பானும் கடந்த ஐந்து ஆண்டுகளாக புது தில்லி, டோக்கியோ உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சம்வாத் மாநாட்டுத் தொடர்களை ஏற்பாடு செய்து வருகின்றன. இந்தத் தொடர் மாநாடு, இருநாடுகளின் பகிரப்பட்ட மதிப்புகளை முன்னிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆறாவது இந்திய–ஜப்பான் சம்வாத் மாநாட்டின்போது, பிரதமர் மோடி பௌத்த இலக்கியம் மற்றும் வேதங்களின் நூலகத்தை உருவாக்குவதாக முன்மொழிந்தார்.*

---

**4.** 'மாவட்ட மேம்பாட்டு கவுன்சில்' என்பது பின்வரும் எந்த மாநில / யூனியன் பிரதேசத்தின் உள்ளாட்சி அமைப்பு ஆகும்?

*அ) இராஜஸ்தான்*

*ஆ) நாகாலாந்து*

***இ) ஜம்மு & காஷ்மீர் ☑***

*ஈ) அஸ்ஸாம்*

❖ *'மாவட்ட மேம்பாட்டு கவுன்சில்' என்பது ஜம்மு–காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் உள்ளாட்சி அமைப்பாகும். இது முதன்முதலில் 2020 அக்டோபர் மாதம் உள்துறை அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டது.*

❖ *இது, ஜம்மு–காஷ்மீர் பஞ்சாயத்து இராஜ் சட்டம், 1989ஆல் வசதி செய்யப்பட்டு, இந்திய அரசியலமைப்பின் 1996 ஜம்மு–காஷ்மீர் பஞ்சாயத்து இராஜ் விதியின்கீழ் உருவாக்கப்பட்டது. அண்மையில், ஜம்மு–காஷ்மீரின் முதல் 'மாவட்ட மேம்பாட்டு கவுன்சில்' தேர்தல் வெற்றிகரமாக நடைபெற்றது.*

---

**5.** நாட்டின் முதல் அதிநவீன ஹைப்பர்சோனிக் காற்றுப்புழை சோதனை வசதி, பின்வரும் எந்த நகரத்தில் திறக்கப்பட்டுள்ளது?



*அ) சென்னை*

*ஆ) மும்பை*

***இ) ஹைதராபாத் ☑***

*ஈ) திருவனந்தபுரம்*

❖ *ஹைதராபாத்தில் உள்ள பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (DRDO) Dr APJ அப்துல் கலாம் ஏவுகணை வளாகத்தில் அதிநவீன Hypersonic Wind Tunnel (HWT) சோதனை வசதியை மத்திய பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் திறந்துவைத்தார்.*

❖ *இவ்வளவு பெரிய HWT சோதனை வசதியைக்கொண்ட மூன்றாவது நாடு இந்தியாவாகும். இந்திய தொழிற்சாலைகளுடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ள இந்த அமைப்பு, எதிர்கால விண்வெளி மற்றும் பாதுகாப்பு அமைப்புகளில் முக்கிய பங்கு வகிக்கும்.*

---

**6.** அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற களரிப்பயிற்று, பின்வரும் எந்த மாநிலத்தின் பிரபலமான விளையாட்டாகும்?



*அ) தமிழ்நாடு*

***ஆ) கேரளா ☑***

*இ) ஆந்திர பிரதேசம்*

*ஈ) மகாராஷ்டிரா*

❖ *ஹரியானாவில் நடைபெறவிருக்கும் கேலோ இந்தியா இளையோர் விளையாட்டு – 2021 போட்டிகளில், யோகாசனத்துடன் கட்கா, களரிப்பயிற்று, தங்–டா, மல்லர்கம்பம் உள்ளிட்ட 4 ஆட்டங்களும் சேர்க்கப்படும்.*

❖ *களரிப்பயிற்று கேரளாவைப் பூர்வீகமாகக் கொண்டதாகும். மத்திய பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் மல்லர்கம்பம் அதிகம் பயிற்சி செய்யப்படுகிறது, அதே வேளையில், பஞ்சாபின் கட்கா மற்றும் மணிப்பூரின் தங்–டா ஆகியவையும் சேர்க்கப்பட்டுள்ளன.*

---

**7.** 2021ஆம் ஆண்டுக்கான மைக்கேல் மற்றும் ஷீலா ஹெல்ட் பரிசை வென்ற இந்திய கணிதவியலாளர் யார்?



அ) கண்ணன் சௌந்திரராஜன்

ஆ) அக்ஷய் வெங்கடேஷ்

**இ) நிகில் ஸ்ரீவஸ்தாவா ☑**

ஈ) நீனா குப்தா

❖ இந்திய இளம் கணிதவியலாளர் நிகில் ஸ்ரீவஸ்தாவா, 2021ஆம் ஆண்டுக்கான மதிப்புமிக்க மைக்கேல் மற்றும் ஷீலா ஹெல்ட் பரிசை வென்றவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். கடிசன்–சிங்கர் கணக்கு மற்றும் இராமானுஜன் வரைபடங்கள் குறித்த நீண்டகாலம் தீர்வு காணப்படாமலிருந்த கேள்விகளுக்கு தீர்வு கண்டதற்காக, அவர், மேலும் இருவருடன் சேர்ந்து $100,000 டாலர் விருதை வென்றவர் என அறிவிக்கப்பட்டார்.

❖ இவர் தற்போது கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் கணிதத் துறை இணை பேராசிரியராக உள்ளார்.

---

**8.**இந்திய ரிசர்வ் வங்கியானது எவ்வகை நிதி நிறுவனங்களுக்–கான 4 அடுக்கு ஒழுங்குமுறை கட்டமைப்பை முன்மொழிந்தது?




அ) கட்டண வங்கிகள்

**ஆ) NBFC'கள் ☑**

இ) சிறு நிதிய வங்கிகள்

ஈ) அயல்நாட்டு வங்கிகள்


❖ ரிசர்வ் வங்கி சமீபத்தில் வங்கி சாரா நிதி நிறுவனங்களுக்கான (NBFC) திருத்தப்பட்ட ஒழுங்குமுறை கட்டமைப்பைப் பற்றிய விவாதக் கட்டுரையை வெளியிட்டது. இந்தக் கட்டுரையின்படி, NBFC'களின் ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை கட்டமைப்பானது அடிப்படை அடுக்கு, நடுத்தர அடுக்கு, மேல் அடுக்கு மற்றும் சாத்தியமிருந்தால் அதற்கும் மேல் ஓர் உயர் அடுக்கு ஆகிய நான்கு அடுக்கு கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டது.

❖ மூலதனம் மற்றும் இடர் மேலாண்மை ஆகியவற்றில் NBFC வாரியங்களுக்கு அதிக அதிகாரத்தை வழங்கலாம் எனவும் இந்திய ரிசர்வ் வங்கி அதில் பரிந்துரைத்துள்ளது.

---

**9.** 'டெசர்ட் நைட் – 21' என்ற பயிற்சி நடைபெற்ற இடம் எது?

அ) அந்தமான் & நிக்கோபார் தீவுகள்



ஆ) கோவா

**இ) ஜோத்பூர் ☑**

ஈ) கொல்கத்தா

❖ இந்திய வான்படை, பிரான்ஸ் வான் மற்றும் விண்படை ஆகியவை இணைந்து 'டெசர்ட் நைட் – 21' என்ற பெயரில், கூட்டுப்பயிற்சியை, இராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் வான்படை தளத்தில் ஜனவரி 24ஆம் தேதி வரை மேற்கொண்டன. பிரான்ஸ் தரப்பில் ரபேல், ஏர்பஸ் ஏ–330 டேங்கர், ஏ–400 எம் போக்குவரத்து விமானம் மற்றும் 175 வீரர்கள் கலந்துகொண்டன. இந்திய வான்படை சார்பில் மிராஜ்–2000, சுகாய், ரபேல், IL–78, அவாக்ஸ் மற்றும் AEW&C விமானங்கள் பங்கேற்றன.

---

**10.**சாலைப் போக்குவரத்து அமைச்சகமானது தனது ஆய்வுப் பிரிவை தொடங்குவதற்காக பின்வரும் எந்த நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?

**அ) IIT ரூர்க்கி ☑**




ஆ) NIT வாரங்கல்

இ) சாலைப்போக்குவரத்து நிறுவனம்

ஈ) IIT சென்னை

❖ நெடுஞ்சாலைத் துறை கட்டமைப்பு மேம்பாடு குறித்த ஆராய்ச்சி, கல்வி மற்றும் பயிற்சியில் கவனம் செலுத்துவதற்காக ரூர்கி IIT'இல் தொடங்கப்பட்ட பிரிவை தொடர்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம் மற்றும் ரூர்கி IIT ஆகியவை கையெழுத்திட்டன.

❖ சாலைப் போக்குவரத்து மற்றும் ரூர்கி IIT'உடன், நெடுஞ்சாலை அமைச்சகம் வைத்துள்ள இந்தக் கூட்டு, சாலை துறையின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு நடவடிக்கைகளை வலுப்படுத்தும். நெடுஞ்சாலை கட்டமைப்பு மேம்பாட்டில் ஆய்வுப்பணிகளை ஒருங்கிணைந்து நடத்துவது மற்றும் கல்வி கற்பிப்பது போன்றவற்றில், பேராசிரியர் பதவியுடன் கூடிய இந்தப் பிரிவு சிறந்த தலைமையை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

**1.** சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற, நில ஒதுக்கீட்டுக்கொள்கை 2021-30 என்பதை வெளியிட்ட மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?



*அ) கர்நாடகா*

*ஆ) கேரளா*

***இ) ஜம்மு & காஷ்மீர் ☑***

*ஈ) குஜராத்*

- *'நில ஒதுக்கீட்டுக் கொள்கை 2021-30' என்ற புதிய கொள்கையை ஏற்க ஜம்மு-காஷ்மீர் நிர்வாகம் ஒப்புதல் அளித்தது. தொழிற்துறை பகுதிகளின் மண்டலத்தை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு கட்டமைப்பை வகுக்க இந்த கொள்கை நோக்கம் கொண்டுள்ளது. இது, சுகாதார நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கான நில ஒதுக்கீட்டையும் உள்ளடக்கும்.*
- *ஜம்மு & காஷ்மீரில் நியாயமான தொழிற்துறை வளர்ச்சியை ஊக்குவிப்பதே இந்தக்கொள்கையின் முதன்மை நோக்கமாகும்.*

---

**2.** அண்மையில், '*Ooceraea joshii*' என்ற ஓர் எறும்பு இனம் கண்டறியப்பட்ட மாநிலம் எது?



*அ) தெலுங்கானா*

***ஆ) கேரளா ☑***

*இ) ஆந்திர பிரதேசம்*

*ஈ) கர்நாடகா*

- *இந்தியாவில் புதிதாக இரண்டு அரியவகை எறும்பினங்கள் கண்டுபிடிக்கப் -பட்டுள்ளன. தமிழ்நாடு, கேரளாவில் 'ஊசரே' (Ooceraea) என்ற புதிய எறும்பினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உணர்வுக்கொம்பு பிரிதலில் இந்த எறும்புகள் பிற எறும்புகளிலிருந்து வேறுபடுகின்றன.*
- *கேரளாவின் பெரியார் புலிகள் சரணாலயத்தில் கண்டறியப்பட்ட இந்த இன எறும்புக்கு 'ஊசரே ஜோஷி' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத்துறையின் தன்னாட்சி நிறுவனமாக இயங்கும் ஜவஹர்லால் நேரு உயரிய அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் தலைசிறந்த உயிரியலாளரான பேராசிரியர் அமிதாப் ஜோஷியின் நினைவாக இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த அரிய வகை எறும்பினத்தை பஞ்சாபி பல்கலையின் குழு கண்டுபிடித்தது.*

---

**3.** அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, "ஆபரேஷன் சர்த் ஹவா" என்பதை ஏற்பாடுசெய்த அமைப்பு எது?

*அ) DRDO*

*ஆ) ISRO*

***இ) BSF ☑***

*ஈ) ITBP*

- *எல்லைப் பாதுகாப்புப் படையானது (BSF) கோடைகாலத்தில் "கரம் ஹவா" என்றும் குளிர்காலத்தில் "சர்த் ஹவா" என்றும் பயிற்சிகளை நடத்துகிறது. BSF, அண்மையில், இந்த ஆண்டின் "ஆபரேஷன் சர்த் ஹவா"ஐ தொடங்கியது.*
- *இதன்கீழ், ராஜஸ்தானின் ஜெய்சல்மரில் எல்லைகளில் பாதுகாப்பை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. குடியரசு நாளை முன்னிட்டு ஜன.21-27 வரை இந்த நடவடிக்கை நடத்தப்பட்டது.*

---

**4.** அண்மையில், 'வரைவு ஆர்க்டிக் கொள்கை'யை வெளியிட்ட நாடு எது?



*அ) சீனா*

*ஆ) அமெரிக்கா*

***இ) இந்தியா ☑***

*ஈ) தென்னாப்பிரிக்கா*

- *புதிய வரைவு 'ஆர்க்டிக்' கொள்கை அண்மையில் இந்திய அரசால் வெளியிடப்பட்டது. இந்த வரைவுக் கொள்கை, 2021 ஜனவரி.26 வரை பொதுமக்களின் கருத்துக்கேட்புக்கு விடப்படும்.*
- *பல்வேறு அமைச்சகங்களுடன் கலந்துரையாடிய பின்னரே இந்தக் கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது. ஆர்க்டிக் பிராந்தியத்தில் இந்தியா -வின் அறிவியல் ஆராய்ச்சி, நிலையான சுற்றுலா மற்றும் கனிம எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வு ஆகியவற்றை விரிவுபடுத்துவதே இந்தக் கொள்கையின் நோக்கமாகும்.*

---

**5.** அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின் வெளியீட்டின்படி, அறிவியல் வெளியீடுகளின் எண்ணிக்கையில், இந்தியாவின் தரநிலை என்ன?

*அ) 2*

***ஆ) 3 ☑***

*இ) 4*

*ஈ) 5*

- *கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவில் வெளியாகும் அறிவியல் சார் வெளியீடுகளின் எண்ணிக்கை அதிவேகமாக அதிகரித்துள்ளதாக என்றும் அறிவியல் வெளியீடுகளின் எண்ணிக்கையில் இந்தியா உலகளவில் 3ஆவது இடத்தில் உள்ளது என்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை சமீபத்தில் கூறியது.*
- *இந்தப் பட்டியலில், சீனாவும் அமெரிக்காவும் இந்தியாவைவிட முன்னிலையில் உள்ளன. 2017-18ஆம் ஆண்டில், மொத்தம் 13,045 காப்புரிமைகளில் 1,937 இந்தியர்கள் தாக்கல் செய்துள்ளனர்.*

---

**6.** "Promoting a culture of peace and tolerance to safeguard religious sites" என்ற தலைப்பிலான தீர்மானமொன்றை ஏற்றுக் கொண்டுள்ள அமைப்பு எது?

*அ) WHO*

*ஆ) WTO*

***இ) ஐக்கிய நாடுகள் ☑***

*ஈ) WIPO*

- *ஐநா அவையின் பொதுச்சபையில், "Promoting a culture of peace and tolerance to safeguard religious sites" என்ற தலைப்பில் ஒரு தீர்மானம் சமீபத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சகிப்புத்தன்மை மற்றும் அமைதி கலாச்சாரத்தை அனைத்து மட்டங்களிலும் ஊக்குவிப்பதற் -கான முயற்சிகளை இந்தத் தீர்மானம் கோருகிறது.*
- *ஐநா'இன் "மத தளங்களை பாதுகாப்பதற்கான செயல்திட்டத்தை" முன்னெடுத்துச்செல்வதற்கு, உலகளாவிய மாநாட்டைக் கூட்டுமாறு பொதுச்செயலாளரை இது அழைக்கிறது.*

---

**7.** 2021'ஆம் ஆண்டில் இந்தியா நடத்தவுள்ள இந்தியப்பெருங்கடல் பிராந்திய பாதுகாப்பு அமைச்சர்கள் சந்திப்பு நடைபெறும் இடம் எது?



*அ) சென்னை*

***ஆ) பெங்களூரு ☑***

*இ) புது தில்லி*

*ஈ) மதுரை*

❖ *2021 பிப்ரவரி.21 அன்று பெங்களூரு நகரில் இந்தியப் பெருங்கடல் விளிம்பில் அமைந்திருக்கும் நாடுகளைச் சார்ந்த பாதுகாப்பு அமைச்சர் –களின் சந்திப்பை இந்தியா நடத்தவுள்ளது. இம்மாநாடு பெங்களூரு நகரத்தில் நடைபெறவிருக்கும் ஏரோ இந்தியா கண்காட்சியுடன் இணைந்து நடத்தப்படும். "Enhanced Peace, Security and Cooperation in the Indian Ocean" என்பது இந்த மாநாட்டின் கருப்பொருளாகும்.*

---

**8.** அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'வாசுகி' என்ற இரயில், பின்வரும் எந்த இரயில்வே மண்டலத்துடன் தொடர்புடையது?

***அ) தென்கிழக்கு மத்திய இரயில்வே ☑***



*ஆ) மத்திய இரயில்வே*

*இ) தெற்கு இரயில்வே*

*ஈ) மேற்கு இரயில்வே*

❖ *தென்கிழக்கு மத்திய இரயில்வே மண்டலத்தால் இயக்கப்படும் 'வாசுகி' என்ற சரக்கு இரயில் மிகநீண்ட சரக்கு இரயில் என்ற புதிய சாதனையை உருவாக்கியுள்ளது. இந்த இரயில், சுமார் 3.5 கிமீ நீளத்திற்கு உள்ளது. இந்த இரயில், பிலாய் மற்றும் கோர்பா இடையே மொத்தம் 224 கி.மீ தொலைவு பயணத்தை மேற்கொள்கிறது.*

---

**9.** பின்வரும் எந்த உயிரினத்தை காப்பாற்ற, மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம், "ஃபயர்ஃபிளை பறவை திசைதிருப்பிகள்" என்ற முன்னெடுப்பை நிறுவியுள்ளது?



*அ) செங்கால் நாரை*

*ஆ) இருவாய்ச்சி*

***இ) கானமயில் ☑***

*ஈ) பெரிய பச்சைக்கிளி*

❖ *மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமும் இந்திய வனவுயிரி பாதுகாப்பு சங்கமும் இணைந்து கானமயில்களைக் காப்பாற்றுவதற்காக, "ஃபயர்ஃபிளை பறவை திசைதிருப்பிகள்" என்ற தனித்துவமான முயற்சியைத் தொடங்கியுள்ளன.*

❖ *'திசை திருப்பிகள்' என்பது காடுகளில் கானமயில்கள் அதிகமாக காணப்படும் பகுதிகளில் உள்ள மேல்நிலை மின்னிணைப்புகளில் நிறுவப்பட்ட ஒரு மடல் ஆகும். அவை மின்மினிப் பூச்சிகளைப் போல தோற்றமளிக்கும்; அது கானமயில்கள் போன்ற பறவையினங்களுக்கு பிரதிபலிப்பாளர்களாக செயல்படுகின்றன. அவை, தொலைவிலிருந்து கண்டறிந்து மின்வழிகளில் மோதாமல் பறவைகளின் திசையைத் திருப்ப உதவுகின்றன.*

---

**10.** பின்வரும் எப்பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டு விழாவின் போது, பிரதமர் ஒரு நினைவு அஞ்சல்தலையை வெளியிட்டார்?

*அ) மெட்ராஸ் பல்கலைக்கழகம்*

***ஆ) அலிகார் பல்கலைக்கழகம் ☑***

*இ) பனாராஸ் பல்கலைக்கழகம்*

*ஈ) அண்ணா பல்கலைக்கழகம்*

❖ *அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகமானது அலிகரில் அமைந்துள்ள ஒரு மத்திய பல்கலைக்கழகமாகும். இது முதலில் சர் சையத் அகமத் கானால் 1875'இல் நிறுவப்பட்டது. அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழக சட்டத்திற்குப்பிறகு, அதன் அசல் பெயரான, 'முகம்மது ஆங்கிலோ–ஓரியண்டல் கல்லூரி' என்பது 1920ஆம் ஆண்டில் அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகம் என மாற்றப்பட்டது.*

❖ *இந்தப் பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் போது, பிரதமர், மற்றும் இந்தப் பல்கலைக்கு என அர்ப்பணிக்கப்பட்ட ஒரு நினைவு அஞ்சல் தலையை வெளியிட்டார்.*

---

**1.**சமீப செய்திகளில் இடம்பெற்ற, இராஜேந்திர குமார் பண்டாரிம், பின்வரும் எந்த விருதை வென்றுள்ளார்?

***அ) சுபாஷ் சந்திரபோஸ் ஆப்தபிரபந்தன் புரஸ்கார் ☑***



*ஆ) பிரதமர் ராஷ்டிரிய பால புரஸ்கார்*

*இ) ஜீவன் ரக்ஷா விருதுகள்*

*ஈ) அசோக சக்ரா*

- *பேரிடர் மேலாண்மையில் சிறப்பான பங்களிப்பையும், தன்னலமற்ற சேவையையும் ஆற்றிவரும் தனிநபர்கள் மற்றும் அமைப்புகளை அங்கீகரிக்கும் விதமாக, சுபாஷ் சந்திர போஸ் ஆப்த பிரபந்தன் புரஸ்கார் என்னும் வருடாந்திர விருதை இந்திய அரசு அறிவித்துள்ளது.*
- *நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் பிறந்தநாளான ஜன.23 அன்று ஒவ்வொரு வருடமும் இந்த விருது அறிவிக்கப்படும். இந்த வருட விருதிற்கு அமைப்பு பிரிவில் நீடித்த சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல் மேம்பாட்டு நிறுவனம் (SEEDS) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.*

---

**2.** ஆயுஷ்மான் CAPF திட்டமானது தேசிய சுகாதார ஆணையம் மற்றும் பின்வரும் எந்த அமைச்சகத்தின் கூட்டு முயற்சியாகும்?

*அ) பாதுகாப்பு அமைச்சகம்*



***ஆ) உள்துறை அமைச்சகம் ☑***

*இ) கல்வி அமைச்சகம்*

*ஈ) சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம்*

- *மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, ஆயுஷ்மான் CAPF திட்டத்தை தொடங்கிவைத்தார். இது மத்திய ஆயுதமேந்திய காவல்படைகளின் (CAPF) சுமார் பத்து இலட்சம் பணியாளர்களுக்கும் அவர்தம் குடும்பத்தார்க்கும் பயனளிக்கும். இந்தத் திட்டமானது, உள்துறை அமைச்சகம் மற்றும் தேசிய சுகாதார ஆணையத்தின் கூட்டு முயற்சியாகும்.*

---

**3.**அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற முகமது இஷ்தாயே, எந்த நாட்டின் பிரதமராவார்?

***அ) பாலஸ்தீனம் ☑***



*ஆ) இஸ்ரேல்*

*இ) பெரு*

*ஈ) அர்ஜென்டினா*

- *நிறுத்தப்பட்ட அமைதிசார்ந்த முன்னெடுப்புகளுக்கு புத்துயிரளிப்பது தொடர்பாக புதிய ஐநா தூதருடன் கலந்துரையாடியதை அடுத்து பாலஸ்தீனிய பிரதமர் முகமது இஷ்தாயே அண்மைச் செய்திகளில் இடம்பெற்றார்.*
- *ஐநா தூதர் டோர் வென்னஸ்லேண்ட், மத்திய கிழக்கு அமைதிசார் முன்னெடுப்புகளுக்கான சிறப்பு ஒருங்கிணைப்பாளராக உள்ளார். அமெரிக்கா, ஐக்கிய நாடுகள்., இரஷ்யா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றை உள்ளடக்கிய 'குவார்டெட்' நிதியளிக்கும் எந்தவொரு அரசியல் முன்னெடுப்பிலும் பாலஸ்தீனத்தின் வெளிப்படைத் தன்மையை அவர் அப்போது எடுத்துரைத்தார்.*

---

**4.**இந்தியாவில் எந்த ஆண்டு முதல் 'தேசிய பெண் குழந்தைகள் நாள்' கொண்டாடப்படுகிறது?

*அ) 2000*




*ஆ) 2004*

***இ) 2008 ☑***

*ஈ) 2012*

- *2008ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி.24 அன்று இந்தியாவில், 'தேசிய பெண் குழந்தைகள் நாள்' கொண்டாடப்பட்டு வருகிறது. தேசிய பெண் குழந்தைகள் நாளைக் குறிக்கும் வகையில், இந்திய அரசு பேட்டி பச்சாவ், பேட்டி பதாவோ திட்டத்தின்கீழ், விழிப்புணர்வு பிரச்சாரங்களை ஏற்பாடு செய்கிறது.*
- *இந்நாள் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் முன்முயற்சியாகும். பாலின சார்பு மற்றும் இந்திய சமுதாயத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கான தீர்வுகள் குறித்து கவனஞ்செலுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. சிறுமியரின் கல்வி, உடல்நலம் மற்றும் சிறுமியரின் ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் இந்நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.*

---

**5.** எந்த ஆண்டுக்குள், இந்திய புவியியல் ஆய்வுமையமானது தேசிய புவி–வேதியியல் வரைபடமாக்கல் திட்டத்தை நிறைவு செய்யவுள்ளது?

*அ) 2022*

***ஆ) 2024 ☑***

*இ) 2025*

*ஈ) 2030*

- *இந்திய புவியியல் ஆய்வுமையமானது (GSI) அதன் முக்கியமான சில தேசிய அளவிலான ஆய்வுகளை விரைவுபடுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது என மத்திய அரசு கூறியுள்ளது. GSI தனது தேசிய புவி வேதியியல் வரைபடமாக்கல் திட்டத்தை 2024ஆம் ஆண்டுக்குள் நிறைவு செய்ய திட்டமிட்டுள்ளது. நாட்டின் அனைத்து புவி அறிவியல் தரவுகளையும் சேகரிப்பதற்காக, GSI, தேசிய புவி அறிவியல் தரவு களஞ்சியம் என்ற முயற்சியைத் தொடங்கியுள்ளது.*

---

**6.** சமீபத்தில், அகில இந்திய ஆயுர்வேத நிறுவனம் ஏற்பாடு செய்த ஆயுர்வேதம் குறித்த விழிப்புணர்வுத் திட்டத்தின் பெயர் என்ன?

*அ) ஆயுஷ் வேதா*

***ஆ) ஆயு சம்வத் ☑***

*இ) ஆரோக்கிய சேது*

Ministry of AYUSH

*ஈ) கோவிஷீல்டு*

- *அண்மையில், புது தில்லியின் அகில இந்திய ஆயுர்வேத நிறுவனம், ஆயுர்வேதம் மற்றும் COVID–19 தொற்றுநோய் குறித்து மிகப்பெரிய பொதுமக்கள் விழிப்புணர்வு பிரச்சாரத் திட்டத்தை நடத்தியது. அதற்கு, "ஆயு சம்வத்" என்று பெயரிடப்பட்டிருந்தது.*
- *இந்தப் பிரச்சாரத்தை ஆயுஷ் அமைச்சகம் ஆதரித்தது. இதன்போது, ஆயுர்வேத மருத்துவர்களால் நாடு முழுவதும் ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட விரிவுரைகள் ஏற்பாடு செய்யப்பட்டன.*

**7.** "The Inequality Virus" என்ற தலைப்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அமைப்பு எது?

*அ) WHO*

*ஆ) NITI ஆயோக்*

*இ) IMF*

***ஈ) Oxfam International ☑***

❖ *"The Inequality Virus" என்ற தலைப்பிலான அறிக்கையொன்றை அண்மையில் ஆக்ஸ்பாம் இன்டர்நேஷனல் வெளியிட்டது. COVID தொற்றுநோய், தற்போதுள்ள ஏற்றத்தாழ்வுகளை ஆழப்படுத்தியுள்ளது என்று இவ்வறிக்கை கண்டறிந்துள்ளது.*

❖ *இந்தியாவில் நாடடங்கு நடப்பிலிருந்த காலத்தில், இந்தியாவின் முதல் 100 பில்லியனர்கள் தங்கள் செல்வத்தை ₹1299 டிரில்லியன் ஆலவுக்கு அதிகரித்துள்ளனர். அதேவேளையில், 2020 ஏப்ரலில் சுமார் 70,000 பேர், ஒவ்வொரு மணி நேரமும் வேலை இழந்தனர் என்று அவ்வறிக்கை ஒப்பிட்டுள்ளது.*

---

**8.** பிரதமர் இராஷ்டிரிய பால புரஸ்காரை வழங்குகிற அமைச்சகம் எது?



*அ) பாதுகாப்பு அமைச்சகம்*

*ஆ) உள்துறை அமைச்சகம்*

*இ) வெளியுறவுத்துறை அமைச்சகம்*

***ஈ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ☑***

❖ *நடப்பாண்டுக்கான (2021) பிரதம அமைச்சரின் தேசிய பால புரஸ்கார் விருதுகள், 32 குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. புதுமையான கண்டுபிடிப்புகள், கல்வித்திறன், விளையாட்டு, கலை & கலாசாரம், பொதுச்சேவை, மற்றும் வீரதீரமிக்க துறைகளில் தலைசிறந்த சாதனைகளை படைத்துள்ள, அபரிமிதமான திறமைகள்கொண்ட குழந்தைகளுக்கு பிரதம அமைச்சரின் ராஷ்ட்ரிய பாலசக்தி புரஸ்கார் எனப்படும் தேசிய சிறார்கள் விருதுகளை நடுவணரசு வழங்குகிறது.*

❖ *தமிழ்நாட்டில் வசிக்கும் பிரசித்தி சிங்குக்கு சமூக சேவைக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.*

---

**9.** தாய்லாந்து ஓப்பன் பூப்பந்து போட்டியில், ஒற்றையர் பெண்கள் பட்டத்தை வென்ற கரோலினா மரின் சார்ந்த நாடு எது?



***அ) ஸ்பெயின் ☑***

*ஆ) பிரேசில்*

*இ) தாய்லாந்து*

*ஈ) தென்னமெரிக்கா*

❖ *ஒலிம்பிக் சாம்பியனான ஸ்பெயினைச் சார்ந்த கரோலினா மரின் மற்றும் டென்மார்க்கைச் சார்ந்த முன்னாள் உலக சாம்பியன் விக்டர் ஆக்செல்சன் ஆகியோர் முறையே தங்களது இரண்டாவது தாய்லாந்து ஓப்பன் பூப்பந்து மகளிர் மற்றும் ஆடவர் ஒற்றையர் பட்டங்களை வென்றனர். 27 வயதான கரோலினா மரின் இரு போட்டிகளிலும் ஒரு ஆட்டத்தைக்கூட இழக்காமல் இறுதிப்போட்டிக்குச் சென்றார்.*

---

**10.** அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'AMPHEX–21' என்றால் என்ன?

***அ) இந்திய பாதுகாப்புப்படைகளின் கூட்டுப்பயிற்சி ☑***



*ஆ) இந்திய வான்படை பயிற்சி*

*இ) இந்திய கடற்படைப் பயிற்சி*

*ஈ) இந்திய தொழிலதிபர்கள் சந்திப்பு*

❖ *தரைப்படை, கடற்படை, வான்படை, கடலோரக் காவல்படை ஆகியவை இணைந்து "AMPHEX–21" என்ற பெயரில் மாபெரும் கூட்டுப்பSயிற்சியை அந்தமான் கடல் மற்றும் வங்கக்கடல் பகுதியில் நடத்தின. கூட்டு செயல்பாடு தயார்நிலையை அதிகரிப்பதற்காக இப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.*

❖ *பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதும், முப்படைகளிடையே ஒருங்கிணைந்த இயக்கத்தை மேம்படுத்துவதும், பாதுகாப்புப் படையின் திறன்களை உறுதிப்படுத்துவதுமே இந்தப் பயிற்சியை நடத்துவதன் நோக்கமாகும்.*

---

**1.** ZSI'இன் அண்மைய வெளியீட்டின்படி, இந்தியாவின் எந்தப் பகுதியில், 428'க்கும் மேற்பட்ட இனங்கள் வசித்து வருகின்றன?

அ) மேற்குத்தொடர்ச்சி மலைகள்

**ஆ) சுந்தரவனக்காடுகள் ☑**

இ) தக்காண பீடபூமி

ஈ) இமயமலைப் பகுதி



❖ "சுந்தரவன உயிர்க்கோள காப்பகத்தில் உள்ள பறவைகள்" என்ற பெயரில் இந்திய விலங்கியல் ஆய்வுமையத்தின் (ZSI) சமீபத்திய வெளியீட்டின்படி, இப்பகுதியில் 428 வகையான பறவைகள் உள்ளன. உலகின் மிகப்பெரிய சதுப்புநில காடுகளுள் ஒன்றான இந்திய சுந்தரவனக்காடுகள், சுந்தரவன புலிகள் காப்பாகத்தையும் கொண்டுள்ளது. மாஸ்க்ட் ஃபின்ஃபூட் மற்றும் பஃபி மீன் ஆந்தை போன்ற சில பறவையினங்கள் சுந்தரவனக்காடுகளில் மட்டுமே காணப்படுகின்றன.

---


**2.** 'சிறைச்சாலை சுற்றுலா' என்ற புதிய முயற்சியை தொடங்கிய மாநில / UT அரசு எது?

அ) அந்தமான் & நிக்கோபார் தீவுகள்

**ஆ) மகாராஷ்டிரா ☑**

இ) குஜராத்

ஈ) மேற்கு வங்கம்



❖ மகாராஷ்டிர மாநில அரசு, 'சிறை சுற்றுலா' என்ற புதியதொரு முயற்சியை தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் ஒருபகுதியாக, விடுதலைப் போராளிகள் அடைக்கப்பட்டிருந்த சிறைச்சாலைகள் சுற்றுலாத்தலங்களாக உருவாக்கப் –படும். 2021 ஜனவரி.26 அன்று 150 ஆண்டுகள் பழமையான யெராவாடா சிறையில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. இதில் நாக்பூர், தானே, ரத்னகிரி சிறைகளும் அடங்கும்.

---

**3.** 'யூனியன் பட்ஜெட்' என்ற திறன்பேசி செயலியை உருவாக்கிய நிறுவனம் எது?

**அ) தேசிய தகவலியல் மையம் ☑**

ஆ) இந்திய கணினி அவசரகால பதிலளிப்பு குழு

இ) தொலைத்தொடர்புத்துறை

ஈ) தேசிய தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைப்பு

❖ மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், சமீபத்தில், மத்திய பட்ஜெட் – 2021'ஐ தாக்கல் செய்வதற்கு முன்னதாக, 'யூனியன் பட்ஜெட்' என்ற திறன்பேசி செயலியை அறிமுகப்படுத்தினார்.

❖ இந்த ஆண்டின் பட்ஜெட் முற்றிலும் டிஜிட்டல் முறையில் தாக்கல் செய்யவிருப்பதால், இந்தத் திறன்பேசி செயலி, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் பட்ஜெட் ஆவணங்களை அணுக உதவும். இது, மத்திய நிதியமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்கள் துறையின் வழிகாட்டுதலின்கீழ், தேசிய தகவலியல் மையத்தால் உருவாக்கப்பட்டதாகும்.

---

**4.** கீழ்க்காணும் எந்த ஆண்டில், ஐநா பொது அவையால், 'அணு ஆயுதங்கள் தடைசெய்வதற்கான ஒப்பந்தம்' அங்கீகரிக்கப்பட்டது?

அ) 2000 ஆ) 2003

இ) 2012 **ஈ) 2017 ☑**

2017

❖ அணுவாயுதங்களை தடைசெய்வதற்கான ஒப்பந்தம், கடந்த 2017ஆம் ஆண்டில் ஐநா பொதுச்சபையால் அங்கீகரிக்கப்பட்டது.

❖ அண்மையில், இந்த முதல் ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தது; அதற்கு பதிலளிக்கும் விதமாக, இந்த ஒப்பந்தத்தை ஆதரிக்கவில்லை என்று இந்தியா அறிவித்தது. 9 நாடுகளுள் ஒன்றுகூட அணுவாயுதங்களை வைத்திருப்பதாக ஒப்புக்கொள்ளவில்லை. NATO கூட்டணி இந்த ஒப்பந்தத்தை ஆதரித்தது.

---

**5.** 'ஷௌரியவான்' என்ற பெயரில் இதழொன்றை அறிமுகப்படுத் –தியுள்ள மத்திய அமைச்சகம் எது?

**அ) பாதுகாப்பு அமைச்சகம் ☑**

ஆ) உள்துறை அமைச்சகம்

இ) வெளியுறவுத்துறை அமைச்சகம்

ஈ) பழங்குடியினர் நலத்துறை அமைச்சகம்



❖ வீரதீர விருதுகளுக்கான புதுப்பிக்கப்பட்ட இணையதளத்தை (www.gallantryawards.gov.in) மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடங்கிவைத்தார். வீரதீர விருதுகளை வென்றவர்களை கௌரவிக்கும் தளமாக இது விளங்கும். தேசிய அளவிலான வினாடி வினா, 'ஷௌரியவான்' என்ற பெயரில் ஒரு மின்னிதழ் ஆகிய முயற்சிகளையும் அமைச்சர் தொடங்கிவைத்தார்.

---

**6.** புதிய M–மணல் கொள்கை–2020'ஐ வெளியிட்டுள்ள மாநில அரசு எது?

அ) குஜராத்

**ஆ) இராஜஸ்தான் ☑**

இ) மத்திய பிரதேசம்

ஈ) மகாராஷ்டிரா



❖ இராஜஸ்தான் மாநில அரசு புதிய M–மணல் கொள்கை – 2020'ஐ சமீபத்தில் வெளியிட்டது. அம்மாநில முதலமைச்சர் அசோக் கெலாட், மாநிலத்தின் கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மணலின் அளவை அரசு பூர்த்திசெய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்றார். இது, உருவாக்கப்பட்ட மணல் (அ) M–மணல் உற்பத்தியை ஊக்குவிக்கும் & பாரம்பரிய மணலின் தேவையைக் குறைக்கும்.

---

**7.** இணையவழியில் பன்னாட்டு பருவநிலை தகவமைப்பு உச்சி மாநாட்டை (CAS Online) நடத்திய நாடு எது?

அ) சுவீடன்

**ஆ) நெதர்லாந்து ☑**

இ) ஐக்கியப் பேரரசு

ஈ) ஆஸ்திரேலியா



❖ நெதர்லாந்து பிரதமர் மார்க் ருட்டே தலைமையில் 2021 ஜனவரி.25 அன்று நெதர்லாந்து அரசாங்கம் இணையவழியில் பன்னாட்டு பருவ நிலை தகவமைப்பு உச்சிமாநாட்டை நடத்தியது. தொற்றுநோய்க்குப் பிறகு காலநிலை–நெகிழ்திறனுடன் கூடிய சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதற்கு நாடுகளுக்கு உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த மெய்நிகர் மாநாட்டில், இந்தியப்பிரதமர் மோடி கலந்துகொண்டு உறுப்பினர்களிடையே உரையாற்றினார்.

**8.குடியரசு நாள் கொண்டாட்டங்களை முன்னிட்டு ஒவ்வோர் ஆண்டும், 'பாரத் பர்வ்' நிகழ்வை ஏற்பாடு செய்கிற நடுவண் அமைச்சகம் எது?**



*அ) பாதுகாப்பு அமைச்சகம்*

*ஆ) உள்துறை அமைச்சகம்*

*இ) வெளியுறவுத்துறை அமைச்சகம்*

***ஈ) சுற்றுலா அமைச்சகம் ☑***

- *குடியரசு நாள் விழாவை முன்னிட்டு, 'பாரத் பர்வ்' என்ற தேசியக் கண்காட்சியை, நடுவணரசின் சுற்றுலாத்துறை, தில்லி செங்கோட்டை வளாகத்தில் கடந்த 2016ஆம் ஆண்டு முதல் நடத்தி வருகிறது. ஜன.26–ஜன.31 வரை நடைபெறும் இந்நிகழ்ச்சியில், பல மாநிலங்களின் கலாச்சாரம், சுற்றுலாத்தலங்கள், கைவினைப் பொருட்கள், உணவுகள் ஆகியவற்றை சித்தரிக்கும் அரங்குகள் அமைக்கப்பட்டு, கலை நிகழ்ச்சிகள் நடக்கும்.*
- *இந்த நிகழ்ச்சி, நாட்டுப்பற்றையும், நம்நாட்டின் வளமான பன்முக கலாசாரத்தையும் பறைசாற்றுவதோடு, இந்தியாவின் சாரம்சத்தைக் கொண்டாடுகிறது.*

---

**9. '19000 கோடி – தேசிய சமையல் எண்ணெய் திட்டம்' என்பதை முன்மொழிந்த மத்திய அமைச்சகம் எது?**



*அ) உணவுப் பதனிடுதல் அமைச்சகம்*

***ஆ) வேளாண் அமைச்சகம் ☑***

*இ) வணிக அமைச்சகம்*

*ஈ) ஊரக மேம்பாடு அமைச்சகம்*

- *தாக்கல் செய்யவிருக்கும் வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிப்பதற்காக, சமையல் எண்ணெய் தொடர்பான ₹19,000 கோடி மதிப்பிலான தேசிய திட்டத்தை மத்திய வேளாண் அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது.*
- *சமையல் எண்ணெயின் இறக்குமதியைக் குறைப்பதோடு, சமையல் எண்ணெய் உற்பத்தியில் தன்னிறைவு அடைய ஐந்தாண்டு திட்டம் ஒன்று வேண்டும் என இது நோக்குகிறது. சமையல் எண்ணெயை இறக்குமதி செய்வதற்காக இந்தியா ஆண்டுதோறும் ₹75,000 கோடி நிதியை செலவிடுகிறது. இந்தத் திட்டம், உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதோடு இறக்குமதி செலவையும் குறைக்கும்.*

---

**10. COVID தொற்றுக்குப் பிறகான உலகில், சமூக–பொருளாதார சவால்கள் குறித்த ஐநா உயர்மட்ட ஆலோசனைக்குழுவின் ஒரு பகுதியாக தேர்வு செய்யப்பட்டுள்ள இந்திய பொருளாதார நிபுணர் யார்?**



*அ) அருந்ததி ராய்*

*ஆ) அமர்தியா சென்*

***இ) ஜெயதி கோஷ் ☑***

*ஈ) இரகுராம் இராஜன்*

- *COVID–19'க்குப் பிறகான உலகில், சமூக–பொருளாதார சவால்கள் குறித்த ஐநா உயர்மட்ட ஆலோசனைக்குழுவின் ஒருபகுதியாக இந்திய பொருளாதார நிபுணர் ஜெயதி கோஷ் தேர்வு செய்யப்பட்டுள் –ளார். எதிர்கால திட்டங்கள் குறித்து (குறிப்பாக COVID–19 தொற்று காலத்திற்குப்பிறகு) ஐநா பொதுச்செயலாளருக்கு இவ்வாரியம் தனது பரிந்துரைகளை வழங்கும். செல்வி ஜெயதி கோஷ், தற்போது மாசசூசெட்ஸ் பல்கலையில் பொருளாதார பேராசிரியராக உள்ளார்.*

---